# தமிழ்மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியும்

## முதற்புத்தகம்

தி. சதாசிவ ஐயர்,
District Inspector of Schools,
இயற்றியது.

நா. பொன்னையா அவர்களால்
தமது
திருமகள் அச்சியந்திரசாலையில்
அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது.

Copyright Reserved.] 1939 [விலை சதம் 75

PRINTED AT
THE THIRUMAKAL PRESS
CHUNNAKAM

# PREFACE

THIS book is an attempt to render the co-ordination of the various activities to be done in Language less irksome to both teacher and pupil by bringing a year's work within one pair of covers. Plurality of text-books for what is really one subject is generally a source of annoyance in the class-room. In this book, the main activities comprising the learning of the (Tamil) Language, viz., Reading (silent) and comprehension, oral reading, oral composition, recitation, written composition, writing and spelling, have been provided for. This book is also an attempt to combine practice with progress, since most of the work entailed by its use is to be done by the pupils themselves. The subject-matter chosen for reading and practice has been selected on a definite plan leading the pupils step by step to gain an intimate acquaintance with the language by actually using it. Some of the Lessons include a number of miscellaneous exercises intended as general intelligence tests.

This Book I is intended for use in Std. IV in Tamil Schools; and in Std. IV and Ist year Special Class in English Schools. It may also be used in Std. V and in IInd year Special Class until a Book II becomes available. In writing this book, my desire has been to produce something that would be helpful to the

teacher and to the pupil alike making their work easy and pleasant, but efficient and thorough at the same time. The teacher would ensure real progress among the pupils by setting the class to individual work for which the book is mostly intended.

Any suggestion for improvement in either the plan or the subject-matter of this book will be gratefully accepted.

Grateful acknowledgment is here made of the splendid help and expeditious work of Mr. N. Ponniah, Managing Proprietor of the Thirumakal Printing Works, in publishing this book.

Kandy,
25-12-39

**J. T. Sadasiva (Iyer)**
District Inspector of Schools.

---

# முகவுரை

தாய்மொழியாக, பிறமொழியாக யாதேனும் ஒரு மொழியைக் கற்றல் என்பது அம்மொழியைக் கற்றலும் அம் மொழியைப்பற்றிக் கற்றலும் என இரு வகைத்தாய், அவற்றுள் ஒன்றையோ இரண்டையுமோ குறிப்பதாம். மொழியைக் கற்றலாகிய முதல்வகை என்பது, அம்மொழியைப் பேசுதலும், பிறர் பேசக் கேட்டு விளங்குதலும், வாசித்தறிதலும், எழுதியறிவித்தலும் என்னும் நான்கு செய்கைகளுள் ஒன்றும் பலவுஞ் செய்து அம்மொழியை வழங்குவதாகும். இனி, மொழியைப்பற்றிக் கற்றலாவது அதன் இயல்பைப்பற்றிய செய்திகளை அறிதலாம். அச்செய்திகளுள் பாஷையமைப்பை விளங்குவதற்கு ஆதாரமாகிய சிலவற்றை அறிதல் அம் மொழியை வழங்கிக் கற்றற்குப் பெரிதுந் துணை செய்வதாம்.

மொழியைப்பற்றிய செய்திகளுள் வேறு சில, உயர்தரக் கல்விக்குரியனவாய்க் கற்போருள்ளுஞ் சிலருக்கே சுவையும் பயனும் பயப்பனவாய் உள்ளன. இவ்வகைச் செய்தியே **இலக்கணம்** எனப்படுவது. ஒரு மொழியை நன்கு வழங்கப் பயின்று அனுபவம் வாய்த்தபின்னரே, அம்மொழியைப்பற்றிப் படித்தலாகிய இலக்கணக் கல்வி தொடங்கற்பால தென்பது இதனாற் பெறப்படும். மாணவர் பிரதம பாடசாலை வகுப்புக்களில் மொழியை வழங்கிப் பயிலுவர். பயிற்சிக்குரியவென முற்குறித்த நால்வகை வழியினாலும் மொழியைக் கற்பர். மத்திய வகுப்புக்களில் **இலக்கணம்**

ஒரு தனிப் பாடமாகக் கற்கப்படும். இதுவே நம் முன்னோரது கொள்கைக்கும் இக்காலத்து மேலைத்தேசத்துள்ள மொழியியல் வல்ல அறிஞர் கொள்கைக்கும் இயைந்ததென்பது.

இக்கொள்கைக்கு இயையவே இப்புத்தகம் நாலாந் தரத்து மாணவர் தமிழ்மொழியைக் கற்றற்கு உதவியாக ஆக்கப்பட்டுள்ளது. பாஷையைக் கற்றற்கு வேண்டப்படும் முயற்சிகளாகிய, வாசித்து விளங்குதல், கேட்க வாசித்தல் (பாடுதல்), பேசுதல், வசனமெழுதுதல், எழுத்து என்னும் இவற்றிற்காகிய பயிற்சிகள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. இப் பயிற்சிகள் மாணக்கர் தாமே தம் முயற்சிகொண்டு செய்யவேண்டியன. செய்துவர அவர் தேர்ச்சியும் படிப்படியாய் வளரும். மாணவர் ஒவ்வொருவருந் தாந்தாமே பயிற்சிகளைச் செய்து தேறும்படி அவரை ஊக்கப்படுத்தலும், செய்த பயிற்சிகளை மேற்பார்த்தலும், வினக்கள் விளங்காதவிடத்து மாத்திரம் அவற்றை விளங்கப்படுத்தலும் ஆசிரியர் செய்யவேண்டியன. அவ்வாறு செய்யின் மாணவர் தேர்ச்சியடைதல் திண்ணம்.

பாட அமைப்பு முறையிலாவது விஷயத்திலாவது திருத்தஞ் செய்தற்காகிய குறிப்பு எதுவும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும். இப்புத்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்துதற்கண், திருமகள் அச்சியந்திரசாலை அதிபர் ஸ்ரீமாந். நா. பொன்னையா அவர்கள் செய்த நன்றியுங் காட்டிய ஊக்கமும் என்னால் என்றும் பாராட்டற்பாலன.

கண்டி,
25-12-39

தி. சதாசிவஐயர்

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ்ப் பேச்சு | 1 |
| | பயிற்சி :— வாக்கியம் | 4 |
| 2. | தமிழ்மொழி (பாட்டு) | 5 |
| | பயிற்சி :— எழுவாய், பயனிலை | 8 |
| 3. | இலங்கை I | 12 |
| | பயிற்சி :— சொற்கள் | 16 |
| 4. | எங்கள் நாடு (பாட்டு) | 18 |
| | பயிற்சி :— எழுவாய்ச்சொல், பயனிலைச்சொல் | 21 |
| 5. | ஒற்றுமை | 23 |
| | பயிற்சி :— சொல்வகை, பெயர், வினை | 28 |
| | Translation (continued in each lesson) | 30 |
| 6. | இலங்கை II, தமிழ் அரசன் | 31 |
| | பயிற்சி :—எழுவாய்ப்பெயர், பயனிலைவினை | 35 |
| 7. | செந்தமிழ் நாடு I (பாட்டு) | 36 |
| | பயிற்சி :— எழுவாய், பயனிலை | 40 |
| 8. | உழவுத்தொழில் | 41 |
| | பயிற்சி :— செயப்படுபொருள் | 44 |
| 9. | செந்தமிழ் நாடு II (பாட்டு) | 50 |
| | பயிற்சி :— பெயர்ச்சொல், திணை | 53 |
| 10. | ஒரு கள்வனின் ஏமாற்றம் | 56 |
| | பயிற்சி :— திணை, பால் | 60 |
| 11. | இலங்கை III | 65 |
| | பயிற்சி :— திணை, பால் | 70 |
| 12. | (பயிற்சி) திணை, பால், எண் | 73 |
| 13. | பொதுநன்மை | 77 |
| | பயிற்சி :— பல்வினப் பயிற்சி | 82 |

| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 14. | நன்றிசெய்தல் (பாட்டும்) | 84 |
| | பயிற்சி :— பாகுபாடு, பலவினப்பயிற்சி | 88 |
| 15. | நல்லவருந் தீயவரும் (பாட்டு) | 90 |
| | பயிற்சி :— பாகுபாடு | 92 |
| 16. | தோட்டம் | 93 |
| | பயிற்சி :— பாகுபாடு, அடைமொழி | 96 |
| 17. | மழை பெய்தல் (பாட்டு) | 102 |
| | பயிற்சி :— காலம் | 106 |
| 18. | தமிழ்நாட்டு மூவேந்தர் | 111 |
| | பயிற்சி :— அடைமொழி, பால், காலம் | 115 |
| 19. | இலங்கை IV | 117 |
| | பயிற்சி :— பெயர்ப் பயனிலை, வினைப்பய னிலை, வினவாக்கியம் | 119 |
| 20. | பிறர்க்கு உதவுதல் (பாட்டு) | 125 |
| | பயிற்சி :— கூட்டுஎழுவாயும், பன்மைப் பயனிலையும் | 130 |
| 21. | தொழில்கள் (பாட்டும்) | 136 |
| | பயிற்சி :— செய்வினை, செயப்பாட்டுவினை | 140 |
| 22. | மகாத்மா காந்தி | 146 |
| | பயிற்சி :— பலவினப்பயிற்சி | 152 |
| 23. | ஆறு (பாட்டும்) | 154 |
| | பயிற்சி :— பாகுபாடு, தோன்றாஎழுவாய், ஏவல் | 159 |
| 24. | பாப்பா பாட்டு I | 164 |
| | பயிற்சி :— பாகுபாடு, உடன்பாடும் எதிர்மறையும் | 171 |
| 25. | பாப்பா பாட்டு II | 173 |
| | பயிற்சி :— பலவினப்பயிற்சி | 179 |
| | தமிழ்மொழி வாழ்த்து | 182 |

# தமிழ்மொழிப் பயிற்சியுந் தேர்ச்சியும்

## முதற் புத்தகம்

## Lesson 1 — பாடம் 1.

### தமிழ்ப் பேச்சு

உலகத்திலே பல பல தேசங்கள் உண்டு. எல்லாத் தேசங்களிலும் மக்கள் வசிக்கிறார்கள். நாங்கள் இலங்கைத் தேசத்தில் வசிக்கிறோம். இலங்கை ஈழதேசம் என்றுஞ் சொல்லப்படும். வெள்ளைக்காரர் இலங்கையை சிலோன் என்று சொல்வார்கள். இலங்கையில் பல சாதிச் சனங்கள் வாழ்கின்றனர். அவர்கள் பேசும் பாஷையும் பலவிதமாய் இருக்கும். தமிழர் தமிழ்ப் பாஷை பேசுவார்கள். முஸ்லிம் மக்களுந் தமிழ்ப் பாஷை பேசுவார்கள். சிங்களவர் சிங்களப் பாஷை பேசுவார்கள். ஆங்கிலேயர் ஆங்கில பாஷை பேசுவார்கள். மலாயர் மலாய்ப் பாஷை பேசுவார்கள். வேடர் வேடப் பாஷை பேசுவர். பாஷை என்பதும் மொழி என்பதும் ஒரு பொருட் சொற்கள்.

நாம் பாடசாலையில் தமிழ் மொழியைப் படிக்கிறோம். நாம் தமிழிற் பேசுகிறோம். எங்கள் உபாத்தியாயர் கதை சொல்வார். நாம்

அதைக் கேட்டு அறிகிறோம். எங்கள் வகுப்பில் உள்ள எல்லாரும் கதை சொல்வார்கள். எங்கள் பாடசாலையில் அழகான பல படங்கள் உண்டு. நாம் அப்படங்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளுகிறோம். ஒவ்வொரு படத்தையும் பற்றிப் பேசுகிறோம். உபாத்தியாயர் வினவும் வினக்களைக் கேட்டு மறுமொழி சொல்லுகிறோம். எங்களுக்குத் தெரியாததை நாம் அவரிடம் வினவுவோம். அவர் அதனை எங்களுக்குச் சொல்லுவார். எங்கள் வீட்டிலும் நாம் தமிழ் பேசுகிறோம். உபாத்தியாயர் பேசும்போது அவர் சொல்வது எங்களுக்கு நன்கு விளங்குகிறது. சில படியாத சனங்கள் பேசும் பேச்சு எங்களுக்கு நன்றாய் விளங்குகிறதில்லை. எங்கள் உபாத்தியாயர் திருத்தமாயுந் தெளிவாயும் பேசுவார். நாமும் அவரைப்போல நன்றாகப் பேசிப் பயிலுகிறோம். படியாத சனங்கள் திருத்தமில்லாத பேச்சுப் பேசுவார்கள். நாம் அப்படிப் பேசமாட்டோம். தமிழ் நமது தாய்மொழி அல்லவா?

நாம் நம்மைப் பெற்ற தாயைப் பேணிக் கனம்பண்ணுகிறோம். அதுபோல நமது தாய்ப் பாஷை ஆகிய தமிழையுங் கனம்பண்ணுதல் வேண்டும். நாம் தமிழைக் கனம்பண்ணுவது எப்படி? நாம் தமிழை ஆசையோடு கற்றல் வேண்டும். தேனிலும் இனிய தமிழ்ப் பாட்டுக்களைப் படித்தும் பிறர் படிக்கக் கேட்டும் ஆனந்தங்கொள்ளல் வேண்டும். தமிழைப் பிழைபடா

மல் திருத்தமாயுந் தெளிவாயும் பேசுதல் வேண்டும். இப்படியெல்லாம் நாம் செய்வதுதான் நமது தமிழ்த்தாயை நாம் கனம்பண்ணுவது ஆகும். அதனால் நாமும் சந்தோஷம் அடைவோம். மற்றவர்களும் நம்மை மதிப்பார்கள். நமது தமிழ் நாடும் சிறப்பு அடையும்.

## பயிற்சி

**I விளக்கம் :-**

இதனை வாசித்துப் பொருளை அறியுங்கள். இதில் வந்துள்ள **வினா, வினாவுதல், பயிலுதல், கனம் பண்ணுதல்** என்னுஞ் சொற்களை அறியுங்கள். வாசித்த பின்பு அடியில் வரும் வினாக்களுக்கு விடை கூறுக:—

(1) நாம் எங்கு வசிக்கிறோம்? (2) நமது தேசத்துக்கு வேறு என்ன பெயர்கள் உண்டு? (3) இலங்கையில் தமிழ் பேசுகிற சாதியார் யாவர்? (4) நாம் பேச்சில் திருந்துவதற்காகப் பாடசாலையில் என்ன என்ன செய்கிறோம்? (5) நாம் யாரைப் பார்த்துப் பேசப் பழகுதல்வேண்டும்? (6) நாம் தமிழைக் கனம் பண்ணுவது எப்படி?

**II எழுத்து :-**

(a) கீறிட்ட இடத்தில் பொருத்தமான ஓர் எழுத்து வைத்து நிரப்பிச் சொற்களை எழுது :-

— லகம், தேச — க —, இ — ங்கை, ஈ — தேசம், ச — ங்கள், தமி — ர், ம — மொழி, வி — ங்குகி — து, ப — ணுகிறோம், தெ — வாய், தமி — த்தாய், சி — ப்பு, (இச்சொற்கள் இப்பாடத்துள்ளவை.)

(b) இலங்கையில் வாழும் ஐந்து சாதியார்கள் பெயரையும் அவர் பேசும் பாஷையையும் இரண்டு வரிசையாய் எழுதுக.

(c) பாடசாலையில் உபாத்தியாயர் செய்வதைப்பற்றி ஐந்து வரி எழுது.

## III பாஷை :-

நாம் பேசுகிறபோதெல்லாம் நாம் ஒன்றைச் சொல்லுகிறோம். ஏதும் ஒரு பொருளைப்பற்றி நாம் ஒன்றைச் சொல்ல விரும்பினால், அல்லது வினவ விரும்பினால் தான் நாம் பேசுகிறோம். அப்படிப் பேசும் ஒரு பேச்சுக்கு **வாக்கியம்** என்று பெயர். மழையைப்பற்றிச் சொல்ல விரும்பினால், **மழை பெய்கிறது** என்று பேசுகிறோம். அது ஒரு **வாக்கியம்.** ஓர் ஆளைப்பற்றிச் சொல்ல விரும்பினால், **என்னுடைய தம்பி வீட்டில் இருக்கிறன்** என்று பேசுகிறோம். அது ஒரு **வாக்கியம்.** மழையைப்பற்றி வினவ விரும்பினால், **இப்போது மழை வருமா?** என்று பேசுகிறோம். அது ஒரு வாக்கியம். தம்பியைப்பற்றி வினவ விரும்பினால், **உனது தம்பி நன்றய்ப் படிக்கிறனு?** என்று பேசுகிறோம். அது ஒரு வாக்கியம். எனவே, நாம் பேசும்போது வாக்கியம் வாக்கியம் ஆகவே பேசுகிறோம் என்பது தெளிவாகிறது. வாக்கியம் என்பதை வசனம் என்றுஞ் சொல்லலாம்.

(1) மேலே வாசித்த பாடத்தில் முதல் பத்தியில் (Paragraph) எத்தனை வாக்கியங்கள் உண்டு என்று எண்ணிப்பார்த்துச் சொல்லுக. இரண்டாம் பத்தியில் எத்தனை வாக்கியங்கள் உண்டு? இவற்றுள் வினவுகிற வாக்கியம் எதுவும் உண்டோ? உண்டாயின் அது எது?

(2) தேசங்கள், தமிழர், நீங்கள், உபாத்தியாயர், படியாதவர்கள், இலங்கை, காற்று, பசு, நான், தங்கை :- இவற்றுள் ஒவ்வொன்றையும்பற்றி ஒவ்வொரு வாக்கியம் எழுதுக. (அல்லது சொல்லுக.)

# Lesson 2 — பாடம் 2.

## தமிழ் மொழி



[சுப்பிரமணிய பாரதியார்]

**யா**மறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

இது ஓர் அழகான பாட்டு. நமது தாய்ப் பாஷை ஆகிய தமிழின் பெருமையை இந்தப் பாட்டுச் சொல்கிறது. இந்த அழகிய பாட்டைச் செய்தவர் சுப்பிரமணிய பாரதியார் என்பவர். இவர் இந்தியாவிற் பிறந்தவர். சில வருடங் களுக்கு முன்புதான் இறந்தார். இவர் ஒரு தமிழன். தாய்மொழியாகிய தமிழில் இவருக்கு அளவில்லாத பிரியம் உண்டு. அதுபோலவே தமது தாய்நாட்டிலும் மிக்க பிரியம் உடைய வர். இந்தப் பாட்டைப்போல் இன்னும் எத் தனையோ பல இனிய பாடல்கள் பாடியிருக்கி ருர். இந்தப் பாட்டில் அவர் சொல்லியிருப் பதை வசனமாய்ச் சொல்லுவோம்.

நாம் அறிந்த பாஷைகளுள்ளே தமிழ்ப் பாஷையைப்போல இனிய மொழியை வேறு ஓர் இடத்திலும் நாம் காணவில்லை. அவ்வளவு இனிய நமது தாய்மொழியை நாம் விரும்பிப் படியாமல், அறிவில்லாத மக்களாய் மிருகங் களைப்போல் வாழ்கின்ருேம். உலகத்திலுள்ள மற்றவர்கள் எங்களை இகழ்ந்து பேசுவார்கள். தமிழர் என்று சொல்லப்படுவதற்குத் தகுதி அற்றவர்களாய் இருக்கிருேம். தமிழர் என்று பேர் மாத்திரம் வைத்துக்கொண்டிருக்கிருேம். அப்படி வாழ்ந்திருத்தல் நல்லதா? தமிழ் மக் களே! சொல்லுங்கள்! தமிழ் மொழியானது தேன்போல இனிமையானது. அவ்விதமாகிய

நமது தமிழ்ப் பாஷையை நாம் கற்று இன்புற வேண்டும். மற்றச் சாதியாரும் அறியும்படி நாம் அதனைப் பரப்புதல் வேண்டும்.

இதுதான் இப்பாட்டில் சொல்லியிருக்குங் கருத்து ஆகும். தேன்போல இனிய தமிழ் மொழியை நாம் ஆசையோடு விரும்பிக் கற்க வேண்டும்.

## பயிற்சி

**I விளக்கம் :-**

(1) பாமரர், விலங்குகள், இகழ்ச்சி, பான்மை, நாமம், தேம் (தேன்), மதுரம், ஓசை :- இச்சொற்களின் பொருளை அறிதல்வேண்டும். இப்பாட்டை இசையோடு பாடுங்கள்.

(2) நீர் கேள்விப்பட்ட சில பாஷைகளின் பெயரைச் சொல்லும். உமக்கு எந்த மொழி இனிமையாய் இருக்கிறது?

(3) நாம் விலங்குகளாய் வாழ்கின்றோம் என என் இப்பாட்டுச் சொல்கின்றது?

(4) இந்தப் பாட்டைப் பாடினவர் எந்தத் தேசத்தவர்? அவர் இப்போது இருக்கிறாரா? அவர் என் இப்பாட்டைப் பாடினார்?

(5) தமிழராகிய நமது கடமை என்ன?

**II எழுத்து :-**

(1) இந்தப் பாட்டைப் பாடம்பண்ணியபின், புத்தகத்தைப் பாராமல் அதை எழுதுக.

(2) சுப்பிரமணிய பாரதியாரைப்பற்றித் தெரிந்ததை எழுதுக.

(3) தேன் என்னுஞ் சொல்லுடன் மதுரம் என்பது வந்து கூடித் தேமதுரம் என்று ஆனதுபோல், தேன் + மலர், தேன் + மொழி, தேன் + மாங்கனி என்பவற்றைச் சேர்த்து எழுதுக. ஒவ்வொன்றும் வர ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(4) ஒரு தமிழ்ப் புத்தகம் வைத்துப் படித்துக் கொண்டிருந்த ஒருவரை அவருடைய நண்பர் பார்த்து வீணில் தமிழை ஏன் படிக்கிறீர் என்றார். அப்போது மற்றவர் பேசியதாக மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(5) விடப்பட்டிருக்கும் எழுத்துக்களை வைத்து நிரப்பி எழுதுக.

பா — தியார் அ — மையான ப — பாட — க — த் தமி — ல் இயற் — யிருக்கி — ர். அவைக — நாம் தவ — மல் படி — க வே — டும். படித்தா — எவ்வ — வோ இ — பம் — டையலா — .

## III பாஷை :-

நம் மனத்திலுள்ள ஒரு கருத்தைச் சொல்லும்போது அது ஒரு வாக்கியம் ஆகிறது. நாம் பேசும்போது ஏதும் ஒரு பொருளைக் குறித்துப் பேசத் தொடங்கி அது இன்னது செய்கிறது என்றாவது, இன்ன தன்மையது என்றாவது, சொல்லி முடிக்கிறோம். **மழை பெய்கிறது** என்னும் வாக்கியத்தில், **மழை** என்கிற பொருளைப்பற்றிப் பேசத்தொடங்கி அது **பெய்கிறது** என்று சொல்லி முடிக்கிறோம். இந்த வாக்கியத்தில் **மழை** என்பது ஒரு பகுதி. **பெய்கிறது** என்பது ஒரு பகுதி. **ஒரு சிறு பையன் வாசலில் நிற்கிறன்** என்னும் வாக்கியத்தில், ஒரு சிறு **பையன்** என்கிற பொருளைப்பற்றிப் பேசத்தொடங்கி அவன் வாசலில் **நிற்கிறன்** என்று சொல்லி முடிக்கிறோம்.

ஒரு வாக்கியத்தில், பேசப்படுகிற பொருள் ஒரு பகுதி, அதைப்பற்றிச் சொல்லி முடிக்கிறது ஒரு பகுதி ஆக இரண்டு பகுதிகள் உண்டு எனக் காண்கிறோம். முதல் வாக்கியத்தில் **மழை** ஒரு பகுதி, **பெய்கிறது** ஒரு பகுதி. இரண்டாம் வாக்கியத்தில் **ஒரு சிறு பையன்** என்பது ஒரு பகுதி, **வாசலில் நிற்கிறன்** என்பது ஒரு பகுதி. மழை, ஒரு சிறு பையன், என்ற முதற் பகுதியில் நாம் பேசுங் கருத்து எழும்புகிறது (தொடங்கு கிறது). பெய்கிறது, வாசலில் நிற்கிறான், என்ற இரண் டாம் பகுதியில் அக்கருத்து முடிகிறது (நிலைக்கிறது). அதனால் கருத்து **எழும்பு**கிற பகுதி **எழுவாய்** என வும், அக்கருத்து முடிந்து **நிலைக்கும்** பகுதி **பயன் நிலை** (பயனிலை) எனவும்படும் என்று அறிந்துகொள் ளுங்கள். இப்படியே, ஒவ்வொரு வாக்கியத்தையும் எழு வாய்ப் பகுதி பயனிலைப் பகுதி என இரு பகுதியாகப் பிரிக்கலாம். எழுவாய் பயனிலை என்னும் இரு பகுதி யும் இருப்பதுதான் வாக்கியம். ஒரு பகுதிமாத்திரம் இருந்து வாக்கியம் ஆகாது. உதாரணமாக, **காலையிற் குளித்தல்** என்பதை மாத்திரம் சொன்னல் கருத்து முடியவில்லை. அதனோடு **உடலுக்கு நல்லது** என் பதையுஞ் சேர்த்துச் சொன்னால், **காலையில் குளித் தல் உடலுக்கு நல்லது** எனக் கருத்து முடிவுபெற்று ஒரு வாக்கியமாகும். இதில் காலையிற் குளித்தல் என் பது எழுவாய்ப்பகுதி, உடலுக்கு நல்லது என்பது பயனிலைப் பகுதி.

"உலகத்தில் பல பல தேசங்கள் உண்டு" என்ற வாக்கியத்தில் நாம் பேசத்தொடங்கிய பொருள் **பல பல தேசங்கள்** என்பது, அதைப்பற்றிச் சொல்லி முடிப்பது **உலகத்தில்** உண்டு என்பது. அதனால், 'பல பல தேசங்கள்' என்பது எழுவாய்ப் பகுதி,

'உலகத்தில் உண்டு' என்பது பயனிலைப் பகுதி ஆகும். இப்போது படித்த நாலு வாக்கியங்களையும் கோட்டுள் அட்டவணைப்படுத்திக் காட்டுவோம்.

## வாக்கியம்

| எழுவாய்ப் பகுதி | பயனிலைப் பகுதி |
|---|---|
| 1. மழை | பெய்கிறது |
| 2. ஒரு சிறு பையன் | வாசலில் நிற்கிறான் |
| 3. காலையில் குளித்தல் | உடலுக்கு நல்லது |
| 4. பல பல தேசங்கள் | உலகத்தில் உண்டு |

'மழை பெய்கிறது' என்ற முதல் வாக்கியம் மிகச் சிறியது. எழுவாய்ப் பகுதி ஒரு சொல். பயனிலைப்பகுதி ஒரு சொல். ஆக இரண்டு சொற்களைக் கொண்டது. எல்லா வாக்கியங்களும் இப்படிச் சிறு வாக்கியங்களாய் வரமாட்டா. மற்ற மூன்று வாக்கியங்களையும் பாருங்கள். இரண்டுக்குமேல் பல சொற்கள் வந்திருக்கின்றன. எழுவாய்ப் பகுதியில் உள்ள பல சொற்களுள் ஒரு சொல்லுத்தான் பேசப்படும் பொருளைக் குறிக்கிற பிரதானமான சொல்; அது எழுவாய்ச் சொல் (அல்லது எழுவாய்) எனப்படும். அதுபோல, பயனிலைப் பகுதியிலும் முடிக்கிற சொல் பிரதானமானது. அது பயனிலைச் சொல் (அல்லது பயனிலை) எனப்படும். எனவே, 2-ம், 3-ம், 4-ம் வாக்கியங்களில் எழுவாய்ச் சொற்கள் (2) பையன், (3) குளித்தல், (4) தேசங்கள் என்பனவாம்; பயனிலைச் சொற்கள் (2) நிற்கிறான், (3) நல்லது, (4) உண்டு என்பனவாம்.

(a) இவ்வாக்கியங்களுக்கு எழுவாயும் பயனிலையுங் கூறுக :-

(1) நாய் குலைக்கும். (2) காகம் கரியது. (3) பட்சி பறக்கும். (4) குழந்தை விளையாடுகிறது. (5) போகிறேன் நான். (6) காற்று வீசும். (7) படிக்கிறான் பையன். (8) வருகிறார்களா பெண்கள்? (9) யானை பெரியது. (10) அழுகிறானா அவன்?

(b) இவ்வாக்கியங்களை எழுவாய்ப் பகுதி, பயனிலைப் பகுதி என இரண்டாகப் பிரித்து கோட்டுள் அட்டவணைப்படுத்திக் காட்டு:-

(1) மழை நேற்றுப் பெய்தது. (2) பசு பால் தரும். (3) எங்களுடைய வேலைக்காரி கடைக்குப் போனாள். (4) நான் நாலாந்தரத்தில் படிக்கிறேன். (5) எனது மூத்த மகன் வருகிறான். (6) நீ விரும்பின புத்தகம் இங்கே இருக்கிறது. (7) எருது வண்டி இழுக்கும். (8) ஊரில் உள்ள சனங்கள் பஞ்சத்தினால் வருந்துகிறார்கள். (9) இக்குளத்தில் உள்ள நீர் குடிக்க உதவாது. (10) எங்கள் தோட்டத்தில் பலவகையான பயிர்கள் உண்டு.

(c) முன் எழுதிய அட்டவணையில் எழுவாய்ப் பகுதியிலுள்ள எழுவாய்ச் சொல்லின்கீழ் ஒரு கீறும், பயனிலைப் பகுதியிலுள்ள பயனிலைச் சொல்லின்கீழ் ஒரு கீறும் இடுக.

(d) முதலாம் பாடத்தில் முதற் பத்தியிலுள்ள வாக்கியங்களுக்கு எழுவாயும் பயனிலையுங் கூறுக.

(e) பின்வருங் குறையான வாக்கியப் பகுதிகளுக்கு ஏற்ற பகுதிகள் சேர்த்து முழு வாக்கியம் ஆக்குக:-

(1) ஆகாயத்தில் பறக்கும். (2) இருபது பிள்ளைகள். (3) தங்கள் பிள்ளைகளை நேசிக்கிறார்கள். (4) மரத்தில் இருந்த காகம். (5) முட்டை இடும். (6) வயல் உழுகிறார்கள். (7) பசியால் வருந்திய ஒரு நரி. (8) பயந்து ஓடினான். (9) இலங்கையில் வசிக்கிறார்கள். (10) தமிழ்ப் பாஷை.

# Lesson 3 — பாடம் 3.

## இலங்கை 1

நாம் இலங்கையில் வசிக்கிறோம். இலங்கைக்கு நாலு பக்கத்திலுங் கடல் இருக்கிறது. கடலுக்கு நடுவில் இலங்கைத் தேசம் இருக்கிறது. அதனால் இலங்கை தீவு எனப்படும். இலங்கை ஈழநாடு என்றும் ஈழமண்டலம் என்றுஞ் சொல்லப்படும். இலங்கைத் தீவில் உயரமான மலைகள் உண்டு. அந்த மலைகளிலிருந்து பல ஆறுகள் ஓடுகின்றன. அவற்றுள் மிக நீளமான ஆறு மகாவலி கங்கை என்பது. மலைப் பக்கங்களில் பெரிய தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன. அத் தோட்டங்களில் இந்தியத் தொழிலாளர் வேலை செய்கின்றனர். கடற்கரையோரமான பகுதிகளில் தென்னந் தோட்டங்கள் உண்டு. அங்கு இலங்கைத் தொழிலாளர் வேலை செய்கின்றனர். இலங்கையில் பெரிய காடுகள் இருக்கின்றன. காடுகளிற் பாலை, முதிரை, தேக்கு. சமண்டலை, கருங்காலி முதலிய மரங்கள் வளர்ந்திருக்கும். யானை, கரடி, புலி, மான், மரை, பன்றி, நரி முதலிய மிருகங்கள் வசிக்கும். மலை நாட்டில் மழை அதிகமாய்ப் பெய்யும். அதனால் அந்த இடங்கள் எப்போதும் பசுமையாய் இருக்கும்.

இலங்கையில் வடக்கிலும், கிழக்கிலுந் தமிழர் அதிகமாய் வசிக்கிறார்கள். தெற்கிலும், மேற்கிலுஞ் சிங்களவர் அதிகமாய் வசிக்கிறார்கள். சோனகர் அல்லது முஸ்லிம் மக்கள் எல்லா இடங்களிலும் வசிக்கிறார்கள். இலங்கை மக்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழில் செய்பவர்கள். வயல் நிலங்களில் நெல் விளைவிக்கப்படுகிறது. வேளாண்மை செய்தற்கு நீர் வேண்டும். மலையடுத்த பகுதிகளில் காலத்தில் மழை பெய்து வேண்டிய நீரை உதவுகிறது. மற்ற இடங்களில் குளங்கள் உண்டு. குளத்து நீர் வாய்க்கால் வழியாக நெல் வயல்களுக்குப் பாய்ச்சப்படும். சில இடங்கள், ஆறு, குளம் முதலியன இல்லாமல், முழுதும் மழையையே நம்பியிருப்பன.

நெல் நமது முக்கிய உணவுப் பொருள் ஆகும். சாமி, தினை, குரக்கன், வரகு, சோழம், எள், பயறு முதலிய சிறு தானியங்களும் பயிரிடப்படும். கறுவா, ஏலம், சாதிக்காய், இலவங்கம் முதலிய வாசனைப் பொருள்களும் உண்டு. சில இடங்களில் இரத்தினங்கள் கிண்டி எடுக்கப்படுகின்றன. கடலிலிருந்து முத்து எடுக்கப்படும். உணவுக்கு வேண்டிய மீன் ஆறு, குளம், கடல் என்பவற்றிற் பிடிக்கப்படும். பழைய காலந் தொடங்கி இலங்கை வளஞ் சிறந்த தேசமாக விளங்குகிறது.

## பயிற்சி

**விளக்கம் :-**

(a) இப்பாடத்தை வாசித்தபின், பின்வரும் வினுக்களுக்கு விடை கூறுக.

(1) இலங்கை ஏன் தீவு எனப்படும்? (2) தேயிலைத் தோட்டங்கள் எங்கு உண்டு? (3) கரையோரப் பகுதியில் என்ன தோட்டங்கள் உண்டு? (4) காடுகளில் என்ன காணப்படும்? (5) இலங்கையில் நெற் செய்கைக்கு வேண்டிய நீர் எப்படிக் கிடைக்கிறது? (6) தமிழர் எங்கெங்கு காணப்படுகின்றனர்? (7) இலங்கை வளம் பொருந்திய நாடு என்று மதிக்கப்படுவது எதனுல்?

(b) இவ்வினுக்களுக்கு விசாரித்தறிந்து விடை கூறுக :-

(1) குளப் பாய்ச்சலுள்ள ஒரு பகுதி சொல்லு. (2) ஆறு, குளம் ஒன்றும் இல்லாத பகுதி எது? (3) சிறு தானியங்கள் விளைவிக்கும் பூமிக்கு என்ன பெயர்? (4) இரத்தினம் எடுப்பது எவ்விடத்தில்? (5) முத்துக் குளிப்பது எவ்விடத்தில்?

**II எழுத்து :-**

(a) விளக்க வினுக்களுக்குரிய விடைகளை எழுதுக.

(b) யானை, நெல், தேயிலை : என்னும் இவற்றுள் எதும் ஒன்றைப்பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக.

(c) தேயிலைத் தோட்டத் தொழிலாளி, நெல் விளைவிக்கும் வேளாளன், மீன் பிடிக்குந் தொழிலாளி என்னும் இவருள் எவரேனும் ஒருவரைப்பற்றி 10 வரிகள் எழுதுக.

(d) ஒரு தேயிலைத் தோட்டத்தைப் போய்ப் பார்த்தற்கு உமக்கு உத்தரவு தரும்படி வேண்டி அத் தோட்ட முதலாளிக்கு ஒரு கடிதம் எழுதுக.

(e) விடப்பட்டிருக்கும் எழுத்துக்களை வைத்து நிரப்பி, பின்வரும் வாக்கியங்களை எழுதுக.

(1) கு — வி க — வா — த்தில் ப — க்கும். (2) நி — வு இ — வில் தோ — றும். (3) பு — பு — லுத் தின் — து. (4) பூ — சிறும். (5) எ — து வய — உ — ம். (6) ந — ல ம — தர் பொய் சொல் — ர்க —. (7) ம — — கைப்பூ வெ — — நி — முள்ளது. (8) ப — வைகள் ம — ங்க — ல் வசிக்கும். (9) இவன் ஓர் ஏ — ம — தன். (10) ம — யில் ம — பெய்கி — து.

## III பாஷை :-

(a) இந்தப் பாடத்து மூன்று பத்தியிலும் மொத்தம் எத்தனை வாக்கியங்கள் என்று எண்ணிச் சொல்லுக.

(b) (1) மூன்றும் பத்தியிலுள்ள வாக்கியங்களை எழுவாய்ப் பகுதி, பயனிலைப் பகுதி என இரண்டாகப் பிரித்து எழுதுக. எழுதியபின் எழுவாய்ச் சொல்லுக்குக் கீழும், பயனிலைச் சொல்லுக்குக் கீழும் கீறு இடுக.

(2) முதலாம் பத்தியிலுள்ள வாக்கியங்களுக்கு எழுவாயும் பயனிலையும் (மாத்திரம்) கூறுக.

(3) மரங்கள், மிருகங்கள், மலை, மான், சிங்களவர்: இச்சொற்கள் எழுவாயாக வரப் பயனிலை சேர்த்து ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.

(c) சொற்கள் :-

"நாம் இலங்கையில் வசிக்கிறோம்" என்னும் வாக்கியத்தில், **நாம்** என்று நம்மைப்பற்றிச் சொல்கிறோம். நாம் என்ன செய்கிறோம்? **வசிக்கிறேம்** என்றும், **இலங்கையில்** வசிக்கிறோம் என்றுஞ் சொல்லுகிறோம். **நாம், இலங்கையில், வசிக்கிறேம்,** என்னும் இவைகளுள் ஒவ்வொன்றும் ஒரு **சொல்** எனப்படும். ஆகவே இந்த வாக்கியத்தில் மூன்று **சொற்கள்** உண்டு. "கடலுக்கு நடுவில் இலங்கைத் தேசம் இருக்கிறது" என்னும் வாக்கியத்தில் எத்தனை சொற்கள் வந்துள்ளன? ஐந்து சொற்கள் வந்துள்ளன. ஒவ்வொரு சொல்லையுஞ் சொல்லுங்கள். "மலைப் பக்கங்களில் பெரிய தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன" என்னும் வாக்கியத்தில் உள்ள சொற்களை ஒவ்வொன்ருகச் சொல்லுங்கள். அவை எத்தனை? ஆறு. நாம் பேசும்போதெல்லாம் இவ்வாறு சொற்களை வழங்கியே பேசுகின்ரோம். நாம் மனத்தில் நினைத்தவைகளைச் **சொல்வதற்கு** இவை கருவியாக இருக்கின்றன. அதனால்தான் அவை **சொல்** எனப்படும். நமது மனத்திலுள்ள ஒரு கருத்தை முழுதாகவுந் தெளிவாகவுஞ் சொல்லும்போது அந்தச் சொற்கள் சேர்ந்து ஒரு வாக்கியம் ஆகும். ஆகவே ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒரு எழுவாய்ச் சொல்லும், ஒரு பயனிலைச் சொல்லும் இருத்தல்வேண்டும் என்று அறிகிறோம்.

(1) இந்தப் பாடத்தில் இரண்டாம் பந்தியிலுள்ள வாக்கியம் ஒவ்வொன்றிலும் இருக்கும் சொற்களை தனித் தனியாகச் சொல்லுங்கள் (அல்லது எழுதுக)

(2) முதலாம் பாடத்தில் உள்ள முதல் ஐந்து வாக்கியங்களையும் எடுத்து ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள சொற்களைத் தனித் தனியாகச் சொல்லுக.

(d) செய்யுள் :-

இரண்டாம் பாடத்தில் முதலில் இருப்பது ஒரு செய்யுள். செய்யுள் என்பது பாட்டு. செய்யுளில் ஓசைக்காகச் சொற்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருக்கும். அப்படிச் சேர்த்துப் படியாவிட்டால், ஓசையும் இனிமையும் இல்லாமற் போகும். நமக்கும் அதைப் படிப்பதில் இன்பம் உண்டாகாது. செய்யுளில் இரண்டு மூன்று சொற்கள் ஒன்றாகச் சேர்ந்திருந்தாலும், அவற்றைத் தனித் தனிச் சொல்லாகப் பிரித்து ஒவ்வொரு சொல்லையும் அறிதல் வேண்டும்.

முதலில் உள்ள 'யாமறிந்த' என்பதில், **யாம்** என்பது ஒரு சொல் **அறிந்த** என்பது ஒரு சொல்; ஆக இரண்டு சொற்கள் சேர்ந்திருக்கின்றன. "இனிதாவதெங்கும்" என்பதில், இனிது, ஆவது, எங்கும், என மூன்று சொற்கள் சேர்ந்திருக்கின்றன.

(1) இப்படியே செய்யுளில் வந்த ஒவ்வொரு சொல்லையுந் தனித் தனியாகப் பிரித்துச் சொல்லுக (அல்லது எழுதுக). சொற்கள் எல்லாந் தெரிந்தபின் இப்பாட்டைப் பாடிப் பாருங்கள். அது எவ்வளவு அழகாயும் இனிமையாயும் இருக்கிறது!

(2) மூன்றாவது பாடத்தில் உள்ள வாக்கியங்களில் வந்த சொற்களுள்—

(a) ஆட்களின் பெயராகிய 5 சொற்கள் எழுது.

(b) இடங்களின் பெயராகிய 5 சொற்கள் எழுது.

(c) மிருகங்களின் பெயர் 5 எழுது.

(d) மரங்களின் பெயர் 5 எழுது.

(e) ஒன்றினதும் பெயராய் இல்லாத சொற்கள் 5 எழுது.

# Lesson 4 — பாடம் 4.

## எங்கள் நாடு

1. எங்கும் மாமணி வில்பொலி யுங்கதிர்
எங்கும் தாமரை அன்னம் படுமலர்
மங்கு ரூத வளந்திக ழுந்திரு
மாவலி கங்கை நாடெங்கள் நாடே.

2. அணி யிளங்கதிர் ஆயிரம் உள்ள
அருக்கன் போய்க்குட பாலிடை மேவ
மணிகொ ணர்ந்து மணிவிளக் கேற்றிடும்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே.

3. பொன்னு லகம் பொருவுநல் நாட்டில்
பொழிலில் தோகை மயில்நின் றுலாவும்
வன்ன வேலன் கதிரைக் குமரேசன்
மாவலி கங்கை நாடெங்கள் நாடே.

**I விளக்கம் :-**

இப் பாட்டுக்கள் "கதிரைமலைப்பள்ளு" என்னும் புத்தகத்தில் உள்ளவை. இப் புத்தகம் இலங்கையில் இருந்த ஒரு பழைய புலவர் செய்தது. அப் புலவர் யார் என்று தெரிய இல்லை. பாட்டுக்கள் மிக அழகாயும் இனிமையாயும் இருக்கின்றன. எங்கள் நாடு மிக்க சிறப்புப் பொருந்திய நாடு என்று அவர் இப் பாட்டுக்களிற் சொல்லியிருக்கிறார்.

1. மகாவலிகங்கை என்னும் பெரிய ஆறு எங்கள் இலங்கையில் ஓடுகிறது. எவ்விடத்திலும் மாணிக்க இரத்தினம் கிடந்து ஒளி வீசும். தாமரைக் குளங்கள் உண்டு. அக்குளங்களில் அன்னங்கள் இருக்கும். குறையாத செல்வம் பொருந்திய நாடு எங்கள் நாடு — என்று முதற் பாட்டிலிருந்து அறிகிறோம்.

2. ஆயிரக்கணக்கான சுடர் பொருந்திய சூரியன் மேற்குத் திசையிற் போய் மறையும்போது அதன் ஒளி பார்க்க அழகாய் இருக்கும். சூரியன் மறைந்தபின் வீடுகளில் வைத்திருக்கும் இரத்தினக் கற்கள் விளக்கு ஏற்றி வைத்ததுபோல் வெளிச்சங் கொடுக்கும். எங்கள் நாட்டில் இரத்தினங்கள் அதிகமாய் உண்டு — என இரண்டாவது செய்யுளால் அறிகிறோம்.

3. எங்கள் நாடு பொன் நாடு போன்றது. சோலைகளிலே மயில்கள் தோகையை விரித்துக் கூத்தாடும். அழகிய கந்தசுவாமிக்கு உரிய கதிர்காமம் இங்கே இருக்கிறது. மகாவலிகங்கை பாய்கிற இந்த நாடு எங்கள் நாடு — என்று மூன்றும் பாட்டினுல் அறிகிறோம்.

சொற்கள் :–

இப் பாட்டுக்களிற் சில சொற்கள் புதியனவாய் இருக்கும். அவற்றை அறிந்துகொள்ளல் வேண்டும். 1-ம் செய்யுளில் — மாமணி (மாணிக்கம்), கிலி (ஒளி), கதிர் (ஒளி, பிரகாசம்), மங்குறுத (நீங்காத, குறையாத), வளம் (செல்வம்). 2-ம் செய்யுளில் — அணி (அழகான), அருக்கன் (சூரியன்), குடபால் (மேற்குத்திசை), மணி (இரத்தினம்), மணி (ஒளி). 3-ம் செய்யுளில் — பொன்னுலகம் (தேவலோகம்), பொருவு (போன்ற), பொழில்

சோலை), தோகை (மயிற்பீலி, மயில் இறகு), வன்னம் (அழகு), கதிரை (கதிர்காமம்), வேலன் (கந்தசுவாமி).

இச் சொற்களையும் பொருளையும் படித்தறிந்தபின் பாட்டை இசையோடு பாடுங்கள்.

விளக்க வினாக்கள் :-

செய்யுட்களைப் படித்தறிந்த பின்பு இவ் வினாக்களுக்கு விடை எழுதுக.

(1) அன்னங்கள் எங்கு இருக்கும்?

(2) இதனால் பக்கங்களில் என்ன நிலம் உண்டு என்று அறியலாம்? அங்கு என்ன விளையும்?

(3) இரத்தினக்கல்லால் விளக்கேற்றுபவர்களுடைய நிலைபரம் எவ்விதமானது என்று சொல்லலாம்?

(4) சூரியன் மறைகிற சமயத்தில் அதன் கிரணங்கள் ஏன் பார்க்க அழகாய் இருக்கும்?

(5) மயில்கள் எங்கே காணப்படும்? அவை ஏன் ஆடுகின்றன?

## II எழுத்து :-

(1) எங்கள் நாட்டின் சிறப்பைப்பற்றி 5 வாக்கியங்கள் எழுது.

(2) தாமரைக்குளம், மயில், மகாவலிகங்கை : என்னும் இவற்றுள் எதும் ஒன்றைப்பற்றிப் பத்து வரிக்குக் குறையாமல் ஒரு பந்தி எழுது.

(3) கதிர்காமத்துக்கு அல்லது வேறு ஒரு தலத்துக்குப் போய்வர விடுதலை தரும்படியாக வேண்டி உமது தலைமை உபாத்தியாயருக்கு ஒரு கடிதம் எழுதுக.

(4) முதலாம் செய்யுளில் 19 சொற்கள் உண்டு. அவற்றைத் தனித்தனிச் சொல்லாக எழுதுக.

(5) விடப்பட்டிருக்கும் எழுத்துக்களை வைத்து நிரப்பிப் பின்வரும் வாக்கியங்களை எழுதுக.

(1) தாம — க் கு — — களி — அ — — ம் இ — க்கும். (2) இ — ங்கை குறை — த வ — ம் திக — ம் — டு. (3) இ — த்தினக்க — வி — க்குப்போ — வெ — ச்சம் கொடு — கும். (4) எங்க — இ — ங்கை பொ — உ — கம் போன்றது.

(6) இச் செய்யுட்களில் வந்த சொற்களுள் :-

(a) இடத்தின் பெயர் மூன்று. (b) பட்சியின் பெயர் இரண்டு. (c) தேவர்கள் பெயர் மூன்று. (d) வேறு பொருட்களின் பெயர் ஐந்து, இவை இவை என்று எழுதுக.

## III பாஷை :-

(a) குறையாயுள்ள பின்வரும் வாக்கியப் பகுதிகளுக்கு எற்றபடி எழுவாய்ப் பகுதியாவது, பயனிலைப் பகுதியாவது சேர்த்து முழு வாக்கியமாய் எழுதுக :-

(1) பசிய தோகையை உடைய மயில்கள். (2) எங்கும் பிரகாசிக்கிறது. (3) மாட்டு வண்டியிற் போகிறார்கள். (4) கண் இல்லாதவன். (5) வயலை உழுகிறார்கள். (6) எனது வகுப்பில் படிக்கிறான்.

(b)

| எழுவாய்ப் பகுதி | பயனிலைப் பகுதி |
|---|---|
| 1. பள்ளிக்கூடப் பிள்ளைகள் | 1. சந்தைக்குப் போனார்கள் |
| 2. பசுக் கன்று | 2. இனிமையாகப் பாடும் |
| 3. சில பட்சிகள் | 3. உறுமிக் குலைக்கும் |
| 4. எனது வேலைக்காரர் | 4. முற்றவெளியில் விளையாடுகிறார்கள் |
| 5. கோபங் கொண்ட நாய் | 5. துள்ளி விளையாடும் |

இங்கு உள்ள ஒவ்வொரு எழுவாய்ப் பகுதிக்கும் கொடுக்கப்பட்டுள்ளவைகளுள் பொருத்தமான ஒரு பயனிலைப் பகுதியைத் தெரிந்து சேர்த்து எழுதுக.

(c) எழுதிய ஐந்து வாக்கியங்களிலும் உள்ள எழுவாய்ச் சொல்லுக்குக் கீழ் ஒரு கீறும், பயனிலைச் சொல்லுக்குக் கீழ் ஒரு கீறும் இடுக.

(d) உமது வாசினைப் புத்தகத்தில் இன்று படித்த பாடத்திலுள்ள எவையேனும் ஐந்து வாக்கியங்களுக்கு எழுவாய்ப் பகுதியும், பயனிலைப் பகுதியும் எழுதி (அல்லது சொல்லி) ஒவ்வொன்றிலும் எழுவாய்ச் சொல் எது, பயனிலைச் சொல் எது என்று காட்டுக.

# Lesson 5 — பாடம் 5.

## ஒற்றுமை



ஓர் ஊரில் ஒரு வேளாளன் இருந்தான். அவனுக்கு வயல்நிலம் அதிகமாய் இருந்தது. அவ் வயல்களில் அவன் நெல் விளைவித்து அதனால் சீவனஞ் செய்து வந்தான். அவனுக்கு ஐந்து குமாரர்கள் இருந்தார்கள். அவர்களுந் தகப்பனோடு கூடி வயலில் வேலை செய்வார்கள்.

எனினும் அவர்கள் ஒருவரோடு ஒருவர் அன்ப்பாய் இருக்கவில்லை. அவர்களுள் ஒற்றுமை குறைவாய் இருந்தது. ஒவ்வொரு நாளும் அவர்களுள் ஏதும் ஒரு கலகம் நடவாமல் இராது. அதனால் சகோதரர்கள் சில நாளில் ஒருவரோடு ஒருவர் பேசாமலும் இருப்பார்கள். இதையெல்லாம் பார்த்துத் தகப்பன் மிக்க மனவருத்தம் அடைவான். அவர்களுக்குப் பல புத்திமதிகள் சொன்னான். மக்கள் தகப்பன் சொன்ன போதனைகளைக் கேட்டுத் திருந்தவில்லை. முன் போல அவர்கள் தம்முள் ஒற்றுமை இல்லாமலே இருந்தார்கள்.

ஒருநாள் அந்த ஆறுபேரும் வயலில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அப்போது தகப்பன் மக்களைத் தன் அருகில் வரும்படி அழைத்தான். அவர்கள் வந்தபோது, பக்கத்தில் இருந்த காட்டில் ஆளுக்கு ஒரு கம்பு வெட்டிக்கொண்டு வரும்படி அவர்களை ஏவினான். அவர்களும் அப்படியே செய்தார்கள். தகப்பன் ஐந்து கம்புகளையும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டினான். கட்டப்பட்ட அந்தத் தடிக்கட்டினை முரிக்கும்படி அவன் ஒவ்வொருவனையும் ஏவினான். அவர்களும் ஒவ்வொருவராக அதனை முரிக்க முயன்றார்கள். எனினும் ஒருவனாலும் அத் தடிக்கட்டு முரிக்க முடியாமல் இருந்தது. அப்போது தகப்பன் கட்டை அவிழ்த்து ஒவ்வொரு கம்பை

ஒவ்வொருவனிடங் கொடுத்து அதை முரிக்கும்படி சொன்னன். அவர்கள் அதை எளிதில் முரித்து விட்டார்கள். அதனல் ஒற்றுமையின் பலனை அப்பிள்ளைகள் நன்கு உணர்ந்தார்கள். அதன்பின் அந்த ஐந்து சகோதரர்களும் ஒருவரோடு ஒருவர் நேசமாயும் ஒற்றுமையாயும் வாழ்ந்தார்கள்.

## பயிற்சி

### I விளக்கம் :-

இக்கதையை வாசித்தபின் அடியில் வரும் வினுக்களுக்கு விடை கூறுக :-

(1) வேளாளன் எப்படிச் சீவனம் பண்ணினன்? (2) அவனுடைய மக்கள் என்ன தொழில் செய்தார்கள்? (3) தகப்பன் ஏன் மனவருத்தம் அடைந்தான்? (4) தகப்பனுடைய போதனையால் வந்த பயன் என்ன? (5) வயலுக்குப் பக்கத்தில் என்ன இருந்தது? (6) ஐந்து பேரும் அங்கு போய் என்ன செய்தார்கள்? (7) ஒருவனுவது ஏன் தடிக்கட்டினை முரிக்கவில்லை? (8) இதற்குப் பின்பு அவர்கள் ஏன் தங்களுக்குள் கலகப்படாமல் இருந்தார்கள்?

### II எழுத்து :-

(a) விளக்க வினுக்களுக்குரிய விடைகளை எழுதுக.

(b) (1) உமது ஊரில் நெல் எப்படி விளைவிக்கிறார்கள் என்று எழுதுக.

(2) நீர் உமது வயலில் (அல்லது தோட்டத்தில்) போய் ஒரு நாளில் செய்த வேலையைப்பற்றி பத்து வரிகள் எழுதுக.

(3) "நான்கு எருதுகளும் சிங்கமும்" என்ற கதையை அல்லது, "புறாக்களும் வேடனும்" என்ற கதையை எழுதுக. தெரியாமல் இருந்தால் விசாரித்து அறிதல்வேண்டும்.

(4) இப்பாடத்துக் கதையில் தகப்பன் தன் மக்களுக்கு முதலில் பல புத்திமதிகள் சொல்லிப் பார்த்தானல்லவா? நீர்தான் அந்தத் தகப்பனாக இருந்தால் என்ன புத்திமதிகள் சொல்லுவீர் என்று எழுதும்.

(5) உமது வயலில் உள்ள பயிர் வியாதிகொண்டு அதனால் வளராதிருப்பதை வந்து பார்த்து அதனை நீக்குவதற்காகிய வழிகளை அறிவிக்கும்படி வேண்டி உமது பகுதியிலுள்ள வேளாண்மைச் செய்கை உத்தியோகத்தருக்கு ஒரு கடிதம் எழுதுக.

(c) பின்வரும் வாக்கியங்களில் அடைப்புக்குள் இருக்குஞ் சொற்களுள் பொருத்தமான ஒன்றை வைத்து வாக்கியத்தை நிரப்பி எழுதுக:-

(1) இந்த ஊரில் (வேளை, வேலை) இல்லாதவர் பலர் இருக்கிறார்கள்.

(2) நான் ஒருநாளும் (மழை, மலை) யில் ஏறினதில்லை.

(3) இந்த வயலில் நிரம்பப் (புள்ளு, புல்லு) முளைத்திருக்கிறது.

(4) எல்லாரும் (புளி, புலி) யைக் கண்டு ஓடினார்கள்.

(5) பூனையின் (ஒலி, ஒளி) யைக் கேட்டால் எலிகள் ஓடி (ஒளி, ஒலி)க்கும்.

## iii பாஷை :-

(a) (1) இந்தப் பாடத்தில் எத்தனை வாக்கியங்கள் உண்டு என எண்ணிப்பார்த்துக் கூறுக (எழுதுக).

(2) முதற் பத்தியிலுள்ள வாக்கியங்களுக்கு எழுவாய்ப் பகுதி கூறுக.

(3) இரண்டாம் பத்தியிலுள்ள வாக்கியங்களுக்குப் பயனிலைப் பகுதி கூறுக.

(b) பின்வரும் எழுவாய்ப் பகுதிகளுக்கு ஏற்ற பயனிலைப் பகுதி வைத்து வாக்கியமாக்குக :—

(1) இரண்டு வெள்ளை மாடுகள். (2) நீ பாடின பாட்டு. (3) மரத்தில் இருந்த குருவி. (4) எனது வயல். (5) நெற் பயிர். (6) குளத்திலுள்ள நீர். (7) பிள்ளைகள். (8) ஈரத்தில் விதைத்த நெல். (9) பெரிய வெள்ளம். (10) என் மகன்.

(c) பின்வரும் பயனிலைப் பகுதிகளுக்கு ஏற்ற எழுவாய்ப் பகுதிகள் சேர்த்து வாக்கியமாக்குக. :—

(1) மரத்தில் இருந்தது. (2) ஓர் ஊரில் வியாபாரஞ் செய்து வந்தான். (3) வானத்தில் தோற்றும். (4) வண்டியிற் போகிறாள். (5) ஒரு மரத்தை வெட்டினான். (6) ஒன்றாகச் சேர்ந்து விளையாடினார்கள். (7) என் பெட்டியில் இருக்கின்றன. (8) பறந்து போயிற்று. (9) வயலுக்குப் போனார்கள். (10) நன்றாகப் பாடுவாள்;

## IV சொற்களின் வகை :-

இப்பாடத்து முதல் வாக்கியத்தில் எத்தனை சொற்கள்? இரண்டாம் வாக்கியத்தில் எத்தனை சொற்கள்? ஒவ்வொரு சொல்லையுந் தனித் தனியாகச் சொல்லுக. நாம் பேசும்போது சொற்களை வழங்குகிறோம் என்றும், நாம் வழங்குஞ் சொற்களுள் சில சொற்கள் பொருட்களின் பெயராகவும், சில சொற்கள் அப்படிப் பொருட்களின் பெயராய் இல்லாமலும் இருக்கும் என்றும் மூன்றாம் பாடப் பயிற்சியில் படித்தோம். இந்தப் பாடத்து முதலாம் வாக்கியத்திலும் இரண்டாம் வாக்கியத்திலும் வந்த **ஓர், ஊரில், ஒரு, வேளாளன், அவனுக்கு, வயல், நிலம்** என்பன பொருட்களின் **பெயரைக்** குறிக்குஞ் சொற்களாம். **இருந்தான், உண்டு, விளைவித்து, செய்து, வந்தான், இருந்தார்கள்** என்பன பொருட்களின் பெயர் அல்ல. இவை ஒரு **செய்கையைச் செய்கிறதைக்** குறிக்குஞ் சொற்களாகும். இதனால், நாம் பேசுஞ் சொற்கள் **பெயரைக்** குறிக்கிற சொல் என்றும், **செய்கிறதைக்** குறிக்குஞ் சொல் என்றும் இரண்டு **வகைப்படுவதை** அறிகிறோம். பொருட்களின் பெயரைக் குறித்து வரும் சொல் **பெயர்ச் சொல்** எனப்படும். செய்கிறதைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும். செய்கை என்றாலும் **வினை** என்றாலும் ஒன்றுதான்.

"அவர்களுந் தகப்பனோடு கூடி வயலில் வேலை செய்வார்கள்" என்னும் இந்த வாக்கியத்தில் வந்த **அவர்கள், தகப்பனோடு, வயலில், வேலை** என்னும் நாலு சொற்களும் **பெயர்ச்** சொற்கள் **ஆகும். கூடி,**

செய்வார்கள் என்னும் இரண்டும் வினைச் சொற்கள் ஆகும். இதனால், நாம் பேசுஞ் சொற்கள் பெயர்ச் சொல், வினைச்சொல் என இரண்டு வகைப்படுவன என்று அறிகிறோம். [குறிப்பு:- இந்த வகுப்பில் பெயர்ச்சொல், வினைச்சொல் என்னும் இரண்டையுந்தான் நாம் படிப்போம். சொல்லினது வேறும் வகைகளை மேல் வகுப்புகளிற் படிப்போம்]

(1) பின் வரும் சொற்களுள் ஒவ்வொன்றும் பெயர்ச் சொல்லோ வினைச்சொல்லோ என்று கூறுக.

மரம், பறந்தது, போகிறேன், வீடு, படிக்கிறாய், ஆடு, கந்தன், குருவி, நடக்கிறாள், எழுதி, கோயில், எறிந்து, பந்து, தாய், அண்ணன், இரண்டு, வருவான், குடிக்கின்றன, போகும், ஓடும்.

(2) இப்பாடத்து வாக்கியங்களில் வந்துள்ள சொற்கள் ஒவ்வொன்றும் பெயர்ச்சொல்லோ வினைச்சொல்லோ என்று கூற.

(3) முதலாம் பாடத்திலிருந்து பத்துப் பெயர்ச சொற்களும் பத்து வினைச் சொற்களும் தெரிந்தெடுத்து எழுதுக.

(4) மூன்றும் பாடத்து முதல் ஐந்து வாக்கியங் களிலுமுள்ள பெயர்ச் சொற்களையும், வினைச் சொற்களை யும் தெரிந்தெடுத்து இரண்டு நிரையாய் எழுதுக,

(5) உமக்குப் பிரியமானபடி பத்துப் பெயர்ச் சொற்களும், பத்து வினைச் சொற்களும் எழுதுக.

## V Translation :-

நமது மனத்திலுள்ள கருத்தை நமக்குத் தெரிந்த எந்த மொழியிலும் (பாஷையிலும்) பேசலாம். ஆங்கில மொழியிற் பேசினுல் ஆங்கில முறைப்படி பேச வேண்டும். தமிழ் மொழியிற் பேசினுல் தமிழ் முறைப் படி பேசவேண்டும். இரண்டையுங் கலந்து (அடுவலாகப்) பேசுதல் பழிப்புக்கு இடமாகும். அந்தந்தப் பாஷை முறைப்படி பேச நாம் பயிலல் வேண்டும். This is a book என்பதைத் தமிழில் இது ஒரு புத்தகம் என்று சொல்லுவோம். That is a table என்பதை, அது ஒரு மேசை என்று சொல்வோம். It is my dog என்பதை அது எனது நாய் என்று சொல்லுவோம். இப்படியே நாம் நினைப்பதை இரண்டு பாஷையிலும் பிழையில்லாமற் பேசப் பயிலல்வேண்டும்.

பின்வரும் ஆங்கில வாக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :-

(1) This is a school. (2) This is my school. (3) That is your book. (4) This is my house. (5) That is a bird. (6) This is a cat. (7) This is her book. (8) This is my head. (9) That is your nose. (10) This is my right hand. (11) That is your left hand. (12) It is a cow.

---

# Lesson 6 — பாடம் 6.

## இலங்கை II

### தமிழ் அரசன்




இந்தியா இலங்கைத் தீவுக்கு வடக்கே இருக்கிறது. அது இலங்கையிலும் பார்க்க மிகப் பெரிய தேசம். இலங்கை இந்தியாவின் தென் பாகத்தை அடுத்து இருக்கிறது. தென் இந்தியா தமிழ் நாடு எனப்படும். தென் இந்தியாவில் தமிழ்ச் சாதியார் வசிக்கிறார்கள். இலங்கையிலும் தமிழ்ச் சாதியார் வசிக்கிறார்கள். முற்காலத்தில் சோழர், பாண்டியர், சேரர் எனப் பல தமிழ் அரசர்கள், தமிழ் நாட்டை ஆண்டார்கள். இலங்கையிலும் தமிழ் அரசர்

கள் ஆட்சி புரிந்தனர். யாழ்ப்பாணத்தில் ஆரிய ச்சக்கரவர்த்திகள் என்னும் பெயருடைய பல தமிழ் அரசர்கள் அரசாட்சி செய்தனர். தமிழ் அரசர்களுள் பலர் இலங்கை முழுதையும் ஆண்டு வந்தனர். முற்காலத்தில் தமிழர் வீரத்திற் சிறந்த சாதியாராய் விளங்கினர்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எல்லாளன் என்ற தமிழ் அரசன் இலங்கையில் அரசு புரிந்தான். அவன் இந்தியாவில் உள்ள சோழ அரச குலத்திற் பிறந்தவன். எல்லாளன் சோழநாட்டிலிருந்து சேனைகளோடு இலங்கைக்கு வந்தான். அக்காலத்தில் இலங்கையில் அசேலன் என்னுஞ் சிங்கள அரசன் அனுரதபுரத்தில் இருந்து அரசாட்சி செய்தான். எல்லாளன் அவனை யுத்தத்தில் கொன்று அரசாட்சியைக் கைப்பற்றினன். எல்லாளன் இலங்கைக்கு அரசனாக முடிசூடி 44 வருட காலம் ஆட்சி புரிந்தான்.

எல்லாள மன்னன் ஆண்மையிலும் வீரத்திலும் சிறந்தவன். அவனது காலத்தில் குடிசனங்கள் யாதொரு துன்பமுமின்றி வாழ்ந்தனர். அவன் நீதி வழுவாமல் எல்லாச் சாதியாரையும், எல்லாச் சமயத்தாரையும் அன்போடு பாதுகாத்து வந்தான். நீதி செலுத்துவதில் அவனைப் போன்ற அரசர் வேறு எவரும் இலர் என்னலாம். பழைய சிங்கள இராச வமிசத்த

வன் ஆகிய துட்ட கைமுனு (காமினி) என்பவன் எல்லாள ராசனைப் போரிலே எதிர்த்துக் கொன்றான். எனினும் இறந்த தமிழ் அரசனது வீரத்தை வியந்தான். அவன் எல்லாள மன்னனுக்கு ஒரு ஞாபக சின்னம் கட்டுவித்தான். எல்லாளனது புகழ் இன்றும் விளங்குகின்றது.

## பயிற்சி

### I விளக்கம் :-

(a) இற்றைக்கு, குலம், புரிந்தான், மன்னன், ஆண்மை, வழுவாமல், பாதுகாத்து, வமிசம், வியந்தான், ஞாபகம், சின்னம், ஞாபகசின்னம். இச்சொற்களின் பொருளை ஆராய்ந்து அறியுங்கள்.

(b) இப்பாடத்தை வாசித்து அறிந்தபின்பு பின் வரும் வினக்களுக்கு விடை கூறுக.

1. தமிழ்ச் சாகியத்தார் எந்தெந்த நாடுகளில் வசிக்கிறார்கள் ?

2. தமிழ்நாட்டு அரசர்கள் யார் யார் ?

3. எல்லாளன் என்ன குலத்தவன் ?

4. அவன் எப்படி இலங்கைக்கு அரசன் ஆனான்?

5. அவனிடத்துள்ள சிறந்த குணம் யாவை ?

6. எதனால் அவனுடைய பெருமை இன்றும் நினைவில் இருக்கிறது ?

II எழுத்து :-

(a) I விளக்கம் (a) பிரிவில் உள்ள 12 சொற்களுள் பொருத்தமான ஒரு சொல்லைத் தெரிந்து எடுத்து கீறிட்ட இடத்தில் வைத்து நிரப்பி எழுதுக :—

1. 1930-ம் ஆண்டு ______ ______ பத்து வருடம் முந்தியது. 2. என் தம்பி எந்தக் கூட்டத்தையும் அடக்கி நடத்தக்கூடிய ______ உள்ளவன். 3. நீ சொன்ன கதையைப்பற்றி எனக்கு இப்போது ______ இல்லை. 4. எவன் உனக்கு இந்த உதவி ______? 5. சொன்ன சொல் ______ உதவி செய்ததற்காக என்னை என் சினேகிதன் ______. 6. ஐந்தாம் ஜோர்ஜ் ______ உடைய ______ ______ ஆக இந்த ஆசுபத்திரி கட்டப்பட்டது.

(b) விளக்க வினைக்களுக்குரிய விடைகளை எழுதுக.

(c) உம்முடைய நாயின் வீரத்தைப்பற்றிச் சொல்லி உமது சினேகிதனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

(d) நீர் எங்காவது கண்ட ஒரு ஞாபகசின்னத்தைப்பற்றி 5 வாக்கியம் எழுதுக.

(e) இச் சொற்களிலுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி அச் சொற்களை ஏழுதுக :— பாற்க, ஞடு, முர்க்காளத்தில், தமிளர், சிறன்த, விழங்கினர், புகள், பெயற்செரல், பயநிலை.

III பாஷை :-

1. இப்பாடத்து முதற் பத்தியில் வந்துள்ள சொற்களுள் எவையேனும் பத்துப் பெயர்ச் சொற்க

ளும் பத்து வினைச் சொற்களும் எழுது (அல்லது சொல்லு).

2. இரண்டாம் பத்தியில் உள்ள ஆறு வாக்கியங்களையும் எழுவாய்ப் பகுதி, பயனிலைப் பகுதியென வேறாகப் பிரித்து எழுதுக. எழுதியபின் எழுவாய்ச் சொல்லின் கீழும், பயனிலைச் சொல்லின் கீழும் ஒவ்வொரு கீறு இடுக.

3. இந்த எழுவாய்ச் சொற்கள் என்ன சொற்கள், பயனிலைச் சொற்கள் என்ன சொற்கள் என்று (பெயரோ வினையோ என்று) ஆராய்ந்து எழுது.

4. இந்த ஆராய்ச்சியினால் என்ன அறிந்துகொள்ளுகிறீர்கள்? எழுவாய்ச் சொல் எல்லாம் என்ன வகை? பயனிலைச் சொல் எல்லாம் என்ன வகை?

## IV Translation :-

*தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :—*

1. This is my hand. 2. This is my nose. 3. That is your pen. 4. This is my inkstand. 5. That is a tree. 6. It is a large tree. 7. This is a good dog. 8. That is his horse. 9. It is a white horse. 10. This is her house. 11. Colombo is a large city. 12. This is our village.

# Lesson 7 — பாடம் 7.

## செந்தமிழ் நாடு I

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே — எங்கள்
தந்தையர் நாடெனும் பேச்சினிலே — ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே — எங்கள்
(செந்தமிழ்)

2. வேதம் நிறைந்த தமிழ்நாடு — உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு — நல்ல
காதல் புரியும் அரம்பையர் போலிளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு — (செந்தமிழ்)

3. காவிரி தென்பெண்ணை பாலாறு — தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி — என
மேவிய யாறு பலவோடத் — திரு
மேனி செழித்த தமிழ்நாடு — (செந்தமிழ்)

4. முத்தமிழ் மாமுனி நீள்வரையே — நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ்நாடு — செல்வம்
எத்தனை உண்டு புவிமீதே — அவை
யாவும் படைத்த தமிழ்நாடு. — (செந்தமிழ்)

### பயிற்சி

**I விளக்கம் :-**

தமிழ் ஒரு திருத்தமான இனிய மொழி (பாஷை). அதனால் அது செந்தமிழ் எனப்படும். செம்மையான

தமிழ்ப் பாஷையைப் பேசுகிற தமிழர் வசிக்கிற தேசம் செந்தமிழ் நாடு என்று சொல்லப்படும். எங்கள் தமிழ் நாட்டின் சிறப்புக்களை இப் பாட்டுக்கள் அழகாகச் சொல்லுகின்றன. இப்பாட்டுக்கள் எவ்வளவு இனிமையாய் இருக்கின்றன! இப்பாட்டுக்களை இசையோடு பாடினால் அவை காதுக்கும் மனத்துக்கும் மிக்க இன்பத்தைத் தரும்.

இந்த இனிய பாட்டைச் செய்தவர் சுப்பிரமணிய பாரதியார் என்பவர். அவரைப்பற்றி 2-ம் பாடத்தில் படித்திருக்கிறோம். நமது தாய்மொழியாகிய தமிழிலும் தமிழ் நாட்டிலும் அவர் எவ்வளவு அன்பு உடையவராக இருந்தாரென்பது நாம் இதனால் அறியலாம். நாமும் அப்படி இருத்தல்வேண்டும். இந்தப் பாடத்தில் நாலு செய்யுட்கள் வந்திருக்கின்றன. இன்னும் நாலு செய்யுட்கள் 9-ம் பாடத்தில் வரும். இச்செய்யுட்களை இசையோடு பாடிப் பயிலுதல்வேண்டும். சில பாட்டுக்கள் படிக்கப் படிக்கத் தேன்போல இனிக்கும். படித்துப் பாருங்கள்.

## II சொற்கள் :-

(1) முதலாம் பாட்டிலுள்ள சொற்களைத் தனித் தனியே பிரித்துச் சொல்வோம். அவை :- செம் (செம்மை), தமிழ், நாடு, எனும், போதினில், எ, இன்பம், தேன், வந்து, பாயுது (பாய்கிறது), காதினில், எ, எங்கள். இனித் **தந்தையர்** என்று தொடங்கி நீங்கள் ஒவ்வொன்றையுஞ் சொல்லுங்கள்.

(2) இரண்டாவது செய்யுளில் எத்தனை சொற்கள் வந்தன என்று எண்ணிச் சொல்லுங்கள்.

(3) அவற்றுள் எத்தனை பெயர்ச்சொற்கள்? எத்தனை வினைச்சொற்கள்?

(4) மொய்ம்பு என்பது வலிமை. அதனோடு உற என்னும் சொல் சேர்ந்து மொய்ம்புற என்று இருக்கிறது; வலிமை பொருந்த என்பது அதன் கருத்து. அதுபோல, பலவோட என்பதைப் பிரித்துச் சொல்லுக.

(5) யாறு என்பதை ஆறு என்றுஞ் சொல்லலாம். இதுபோல உள்ள வேறும் மூன்று சொற்கள் உண்டு. அவை: (1) ________ னை, ________ னை; (2) ________ டு, ________ டு; (3) ________ ர், ________ ர். இவற்றை நிரப்பிச் சொல்லுக. யாறு என்னும் கருத்துள்ள இன்னும் ஒரு சொல் இப்பாட்டில் உண்டு. அது எது?

(6) சத்தி ( = பெலம் ), அரம்பையர் ( = தேவப் பெண்கள் ), வரை ( = மலை ), மொய்ம்பு ( = வலிமை ), புவி ( = பூமி ) என்னும் இச்சொற்களையும் பொருளையும் அறிந்துகொள்ளல் வேண்டும்.

## III எழுத்து :-

(1) முதலாவது செய்யுளில் மொத்தம் 24 சொற்கள் உண்டு. அவற்றுள் 15 பெயர்ச் சொற்கள்; 5 வினைச்சொற்கள். பெயர்ச்சொற்களையும் வினைச்சொற்களையுந் தெரிந்து எடுத்து இரண்டு நிரையாய் எழுதுக.

(2) மூன்றாவது செய்யுளில் வந்த யாறுகளை எழுதுக.

(3) இலங்கையில் உள்ள மூன்று யாறுகளும், மூன்று வரைகளும் எழுதுக.

(4) தமிழில் இயல், இசை, நாடகம் என்று மூன்றுவகை உண்டு. இயல் என்பது பேச்சு, பாட்டு, இலக்கணம் என்னும் தமிழ். இசை என்பது சங்கீதம். நாடகம் என்பது நடித்தல். அதனால், தமிழை முத் தமிழ் என்று சொல்வார்கள். இந்த மூன்றுவகைத் தமிழையும் வளர்த்தவர் **அகத்திய முனிவர்** என்பவர். அதனால் அவர் **தமிழ்முனி** என்றும், **முத்தமிழ்முனி** என்றும் சொல்லப்படுவர். தமிழ்மொழியை எல்லாரும் செம்மையாய் அறிந்து பேசும்படி ஒரு பெரிய **இலக் கணம்** செய்தார். அதற்கு **அகத்தியம்** என்று பெயர். அந்த இலக்கணப் புத்தகம் இப்போது இல்லாமல் அழிந்துபோயிற்று. அகத்திய முனிவர் மிகப் பழைய காலத்தில் இருந்தவர். அவர் **போதியம்** என்னும் மலை யில் இருந்தார். இந்த மலை தென்னிந்தியாவில் தென் பாகத்தில் இருக்கிறது. அகத்திய முனிவர் இங்கு இருந் ததனால் இந்த மலை மிகச் சிறப்புப் பொருந்தியது ஆகும்.

இந்த வாசகத்தைப் பார்த்துப் பிரதி பண்ணுங்கள்.

(5) நாலாவது செய்யுளில் சொல்லியிருக்கிற இரண்டு காரியங்களைப்பற்றியும் இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

(6) இந்தப் பாட்டைப் படித்து நீர் சந்தோஷப் பட்டதைப்பற்றி (உமது தாய், தந்தை, அண்ணன், சிநேகிதன் என்பவர்களுள்) ஒருவருக்கு ஒரு கடிதம் எழுதுக.

## IV பகுஷை :-

உம்முடைய வாசிப்புப் புத்தகத்தில் இன்றைய பாடத்தில் இருந்து உமக்குப் பிரியமான ஐந்து வாக்கியங்கள் எழுதி, ஒவ்வொன்றையும் எழுவாய்ப் பகுதி பயனிலைப் பகுதி என இரண்டாகப் பிரித்துக் காட்டுக. எழுவாய்ப் பெயருக்குக் கீழும், பயனிலைச் சொல்லுக்குக் கீழும் ஒவ்வொரு கோடு கீறுக.

## V Translation :-

This is my son என்பதைத் தமிழில் இவன் என் மகன் என்றும், This is my dog என்பதை 'இது என் நாய்' என்றும் சொல்வோம். That is a girl என்பதை அவள் ஒரு பெண் என்றும், That is a book என்பதை அது ஒரு புத்தம் என்றும் சொல்வோம். பின் வருபவற்றை இப்படியே தமிழில் எழுதுக :-

1. That is a white dog. 2. That is my sister. 3. This is my younger brother. 4. This is a red flower. 5. This is his elder brother. 6. He is my uncle. 7. That is a farmer. 8. This is his paddy field. 9. That is my daughter. 10. It is a small bird. 11. This is a large house. 12. This is my younger sister.

# Lesson 8 — பாடம் 8.

## உழவுத் தொழில்



உழவர் வயலை உழுகிறார்கள். அவர்கள் கலப்பையினால் வயலை உழுகிறார்கள். தச்சன் கலப்பை செய்வான். அவன் கலப்பையை மரத்தினாற் செய்வான். கலப்பையின் அடியில் ஓர் இரும்புக் கூர் செருகி இருக்கும். அது கொழு எனப்படும். கொழு மண்ணைக் கிளறும். நாம் கலப்பையை ஏர் என்று சொல்லுகிறோம். உழவர் ஏரில் இரண்டு மாடுகளைப் பூட்டுவார்கள்.

மாடுகள் ஏரை இழுக்கும். ஏரை இழுத்து உழும் மாடுகளுக்கும் ஏர் என்று பெயர். உழுத நிலத்தில் வேளாளன் நெல்லை விதைப்பான். சிலர் உழுமுன்பே நெல்லை விதைப்பார்கள். நெல் விதைப்பவன் நடந்துகொண்டே நெல்லை விதைப்பான். அவன் தானியத்தை அள்ளி வீசிக்கொண்டு நடப்பான். மாடுகள் வளைந்து வளைந்து வயலை உழுகின்றன. விதைத்து உழுத நிலத்தை வேளாளன் இரண்டாம் முறையும் உழுவான். இது மறை உழவு எனப்படும். உழவுத் தொழில் செய்பவனை நாம் கமக்காரன் என்றுஞ் சொல்லுகிறோம்.

கமக்காரன் நமக்கு வேண்டிய தானியத்தை உண்டாக்குகிறான். கமக்காரர் இல்லாவிட்டால் நாம் உணவுப் பொருட்கள் இல்லாமல் துன்பப்படுவோம். உழவுத் தொழில் இல்லாமல் உலகம் நடவாது. கமக்காரன் எல்லாருக்கும் உணவைக் கொடுக்கிறான். உணவு இல்லாமல் ஒருவரும் ஒரு தொழிலுஞ் செய்யமாட்டார்கள். அதனால் கமத்தொழிலை மிக மேலான தொழிலாக நாம் எண்ணுகிறோம்.

கமத்தொழிலுக்கு மாடுகள் அவசியம் வேண்டும். கமக்காரன் மாடுகள் வளர்க்கிறான். மாடுகள் வைக்கோல் தின்னும். கமக்காரன் தன் மாடுகளை அன்போடு பாதுகாக்கிறான்.

## பயிற்சி

### I விளக்கம் :-

பாடத்தை வாசித்தபின் இவ்வினுக்களுக்கு விடை கூறுக :-

1. உழவருக்கு வேறு என்ன பெயர்கள் உண்டு? 2. கலப்பை எதனுற் செய்யப்படும்? 3. ஏர் என்பது யாது? 4. வேறும் எதற்கு ஏர் என்று பெயர்? 5. கொழு எதனுற் செய்யப்படும்? 6. உழுகிறபோது கொழு என்ன செய்கிறது? 7. மறை உழவு என்பது யாது? 8. மற்றெல்லாத் தொழிலினும் உழவுத் தொழிலை ஏன் மேலாக எண்ணுகிருேம்?

### II எழுத்து :-

(a) பின்வரும் சொற்களில் விடப்பட்டிருக்கும் எழுத்துக்களை வைத்து நிரப்பி எழுதுக :-

1. தொ — ல். 2. உ — கி — ர்க —. 3. க — ப்பை. 4. இ — ம்பு. 5. கொ —. 6. மாடுக —. 7. நெ —. 8. தா — யம். 9. வ — ந்து. 10. வே — ளன். 11. உ — வு. 12. வ — ர்க்கி — ன்.

(b) இச்சொற்களைத் திருத்தி எழுதுக :-

1. உலவன். 2 நெள்ளு. 3. திண்னும், 4. சொர்க்கள். 5. எலுது. 6. என்னுகிரோம். 7. புள்லு. 8. உன்டு. 9. அண்போடு. 10. தமில்.

(c) விளக்க விணுக்களுக்கு உரிய விடைகளை எழுதுக.

(d) நெல் விதைத்தலைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

(e) நெல் நாற்று நடுதலைப்பற்றி உமக்குத் தெரிந்ததை எழுதும்.

(f) வயலில் வேலை செய்பவர்கள் வேலை செய்யும்போது பாடுகிற ஏதும் ஒரு பாட்டு (யாரிடத்திலாவது விசாரித்து அறிந்து) எழுதுக.

III பாஷை :-

ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய்ப் பகுதி, பயனிலைப் பகுதி என இரண்டு பிரிவு உடையதாய் இருக்கும் என்று 2-ம் பாடத்தில் படித்தோம். அப்படியே உழவர் வயலை உழுகிறார்கள் என்னும் வாக்கியத்தில் **உழவர்** எழுவாய்ப் பகுதி. **வயலை உழுகிறார்கள்** என்பது பயனிலைப் பகுதி ஆகும். இந்தப் பயனிலைப்பகுதியை ஆராய்ந்து பார்ப்போம். **என்னத்தை** உழுகிறார்கள்? என்று வினவினால் **வயலை** உழுகிறார்கள் என்று மறுமொழி வரும். இன்னும் “ தச்சன் கலப்பை செய்வான் ” என்பதில், தச்சன் **என்னத்தைச்** செய்வான்? என்று வினவினால் **கலப்பையைச்** செய்வான் என்று மறுமொழி வரும். “ நான் என் சிநேகிதனைக் கண்டேன் ” என்னும் வாக்கியத்தில், **யாரைக்** கண்டேன் என்று விசாரித்தால் **சிநேகிதனைக்** கண்டேன் என்று மறுமொழி வரும். இப்படி மறுமொழியாய் வரும் சொல் ஒவ்வொன்றும் (வயல், கலப்பை, சிநேகிதனை) ஒரு பெயர்ச்சொல் என்று அறிகிறோம். இப் பெயர்ச்சொற்கள் வினைச்சொல் குறிக்குஞ் செய்கையால் **செய்யப்படும் பொருளைக்** குறிக்கின்றன. அதனால் இச் சொற்கள் **செயப்படுபொருள்** எனப்படும். ஆகவே, இவ்வாக்கியங்களில் உள்ள பயனிலைப் பகுதியைச் **செயப்படுபொருள்** என்றும் **பயனிலை** என்றும் இரண்டாகப்

பிரிக்கலாம் என்று அறிகிறோம். இதனை அடியில் வருமாறு கோட்டுள் அட்டவணைப்படுத்தி எழுதுவோம்.

| எழுவாய்ப் பகுதி | பயனிலைப் பகுதி | |
|---|---|---|
| | செயப்படு பொருள் | பயனிலை |
| 1. உழவர் | வயலை | உழுகிறார்கள் |
| 2. தச்சன் | கலப்பை | செய்வான் |
| 3. நான் | என் சினேகிதனை | கண்டேன் |

எனினும், ஒவ்வொரு வாக்கியத்திலும் இவ்வாறு ஒரு செயப்படுபொருள் வரும் என்று நாம் நினைத்தலாகாது. உதாரணமாக, **மாடு ஓடுகிறது**; மாடு தெருவில் ஓடுகிறது; மாடு வெருண்டு தெருவில் ஓடுகிறது என்னும் வாக்கியங்களில், **என்னத்தை** ஓடுகிறது? என்று வினவினால், பொருத்தமான மறுமொழி ஒன்றும் வராது. **தெருவை** ஓடுகிறது என்று சொல்லலாமா? அப்படிச் சொல்வதில் ஒரு கருத்தும் இல்லை. அப்படியே, **நான் போனேன்**; நான் வீட்டுக்குப் போனேன்; நான் நேற்று வீட்டுக்குப் போனேன் என்னும் வாக்கியங்களிலும், **என்னத்தைப்** போனேன்? என்று வினவினால், பொருத்தமான மறுமொழி ஒன்றும் வராது. **வீட்டைப்** போனேன் என்று சொல்வது பொருத்தமில்லாத பேச்சு. இதனால், இவ்வாக்கியங்களில் **செயப்படு பொருள்** என்னும் பகுதி **இல்லை** என்று அறிகிறோம். இவ்வாக்கியங்களையும் அட்டவணைப்படுத்தி எழுதுவோம்.

| எழுவாய்ப் பகுதி | பயனிலைப் பகுதி | |
|---|---|---|
| | செயப்படு பொருள் | பயனிலை |
| 1. மாடு | —— | ஓடுகிறது |
| 2. மாடு | —— | தெருவில் ஓடுகிறது |
| 3. மாடு | —— | தெருவில் வெருண்டு ஓடுகிறது |
| 4. நான் | —— | போனேன் |
| 5. நான் | —— | வீட்டுக்குப்போனேன் |
| 6. நான் | —— | நேற்று வீட்டுக்குப் போனேன். |

இதுகாறும் யாம் ஆராய்ந்த உதாரணங்களில் இருந்து அறிந்து தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகள் இரண்டு உள்ளன.

**முதலாவது** — ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை என்னும் இரண்டு பகுதிகளும் இருக்கும். இவை இல்லாதது வாக்கியம் ஆகாது.

**இரண்டாவது** — செயப்படுபொருள் என்னும் பகுதி சில வாக்கியத்தில் இருக்கும்; சில வாக்கியத்தில் இராது.

ஒரு வாக்கியத்துக்குச் செயப்படுபொருள் என்னும் பகுதி இருக்கிறதோ இல்லையோ என்பதைப் பயனிலை வினைச்சொல்லைப் பார்த்து ஆராய்ந்து அறியலாம். பயனிலை வினைச்சொல்லோடு **என்னத்தை**, அல்லது யாரை என்பதைச்சேர்த்துவினவும்போது **இன்னத்தை** அல்லது **இன்னாரை** என்று பொருத்தமான மறுமொழி

வந்தால், செயப்படுபொருள் உண்டு என்றும், மறுமொழியாய் வரும் பெயர்ச்சொல்லே அச் செயப்படுபொருள் என்றும் அறிந்துகொள்ளலாம். அப் பெயர்ச்சொல் ஐ என்னும் எழுத்தைக்கொண்டு முடியும். அப்படி ஐ என்னும் எழுத்தைக்கொண்டு முடிகிற பொருத்தமான மறுமொழிச் சொல் இல்லையாயின், அவ்வாக்கியத்துக்குச் செயப்படுபொருள் இல்லை என்று அறிதல் வேண்டும்.

நாம் பேசும்போது செயப்படுபொருளாக வரும் பெயர்ச்சொல்லோடு ஐ என்பதைச் சேர்த்துஞ் சொல்லலாம், சேராமலுஞ் சொல்லலாம்; உ - ம். தச்சன் **மரத்தை** வெட்டுகிறான் என்றுஞ் சொல்லலாம், தச்சன் **மரம்** வெட்டுகிறான் என்றுஞ் சொல்லலாம். ஆதலால் கருத்தை நோக்கியே நாம் அதனை நிச்சயம் பண்ணுதல் வேண்டும், பெயர்ச்சொல்லின் வெளித்தோற்றத்தினால் அன்று என அறிக.

(a) இவ் வாக்கியங்களில் வந்துள்ள செயப்படுபொருள்களைக் கூறுக :—

1 கடவுள் எங்களைக் காப்பாற்றுகிறார். 2. நாய் வீட்டைக் காக்கும். 3. பூனை எலி பிடிக்கும். 4. அவன் தனது தலையை ஆட்டுகிறான். 5. சனங்கள் தங்கள் அரசனை வாழ்த்தினார்கள். 6. நான் அவனை நேற்றுக் கண்டேன். 7. கரிய மேகங்கள் சூரியனை மறைத்தன. 8. என் தாய் குத்துவிளக்கைக் கொளுத்தினாள்.

(b) இவ்வாக்கியங்களிற் செயப்படுபொருள் உண்டோ இல்லையோ என்றும், உண்டாயின் எது என்றுங் கூறுக (அல்லது எழுதுக).

1. என் மகன் பாடசாலைக்குப் போனான். 2. இந்த மனிதனை நான் தெருவிற் கண்டேன். 3. நாலு மாடுகள்

தோட்டத்தில் நின்றன. 4. என் புத்தகத்தை அவன் எடுத்தான். 5. நேற்று ஒரு யானை இங்கு வந்தது. 6. இந்தப் பூனை நன்ருய்ப் பாயும். 7 பட்சிகள் வானத்தில் பறக்கும். 8. சூரியன் எங்களுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிருன். 9. ஓர் அழகிய வீட்டை அவர்கள் கண்டார்கள். 10. நல்ல மனிதரை எல்லாரும் விரும்புவார்கள்.

(c) இந்த வாக்கியங்களில் உள்ள செயப்படுபொருள்களைக் கூறுக (அல்லது எழுதுக):—

1. நான் ஒரு வீடு கட்டினேன். 2. மரம் நிழலைத் தரும். 3. இந்த வயலை ஒரு யானை உழக்கி அழித்தது. 4. அந்தப் பெண் ஒரு நல்ல பாட்டுப் பாடினுள். 5. பறவைகள் மரத்தில் கூடு கட்டுகின்றன. 6. வாழை இனிய கனி தரும். 7. பூஞ்சோலை மனிதருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். 8. பசுக்கள் இனிய பால் கொடுக்கும். 9. உழவர் வயலில் நெல் விதைத்தார்கள். 10. மிருகங்கள் ஆற்றில் தண்ணீர் குடித்தன.

(d) இப்பாடத்து முதலாம் பத்தியில் 19 வாக்கியங்கள் உண்டு அவற்றுள் செயப்படுபொருள் உள்ள வாக்கியம் எத்தனை? செ. பொ. இல்லாத வாக்கியம் எத்தனை?

(e) இரண்டாம்பத்தியில் உள்ள வாக்கியங்களை (6) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் எனப் பாகுபாடு செய்து அட்டவணைப்படுத்தி எழுதுக.

(f) (1). செயப்படுபொருள் உள்ள வாக்கியங்கள் மூன்று எழுதுக. (2) செயப்படுபொருள் இல்லாத வாக்கியங்கள் மூன்று எழுதுக.

## IV Translation :

I have a book என்பதைத் தமிழில் 'நான் ஒரு புத்தகம் வைத்திருக்கிறேன்' என்று சொல்வதைப் பார்க்கிலும் 'எனக்கு ஒரு புத்தகம் உண்டு' என்று சொல்வது சிறப்பாகும். அப்படியே, I have a brother என்பதை 'எனக்கு ஒரு சகோதரன் உண்டு (அல்லது உளன்)' என்பது நல்ல தமிழ் ஆகும். அதை விட்டு, 'நான் ஒரு சகோதரனை வைத்திருக்கிறேன்' என்று சொல்லுதல் தமிழ் முறை ஆகாது. மிகச் சிறிய பொருளாயின் have என்பதை 'வைத்திரு' என்றும், பெரிய பொருளாயின் have என்பதை 'உண்டு' என்றும் சொல்வது பொருத்தமாகும். உ–ம்: I have a rupee = நான் ஒரு ரூபா வைத்திருக்கிறேன்; I have a house = எனக்கு ஒரு வீடு உண்டு (அல்லது இருக்கிறது).

(a) பின்வரும் வாக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுக :-

1. The dog has a tail. 2. I have two hands. 3. The carpenter made a table. 4. The table has two drawers. 5. It has four legs. 6. The teacher calls you. 7. The birds fly in the sky. 8. All the dogs are barking. 9. This house has four windows. 10. The palmyra has no branches. 11. It is a beggar woman. 12. She has a vessel in her hand. 13. This girl has a sweet voice. 14. My father has two large estates. 15. Some birds have beautiful feathers.

---

# Lesson 9 — பாடம் 9.

## செந்தமிழ் நாடு II

5. நீலத் திரைக்கட லோரத்திலே நின்று
நித்தந் தவஞ்செய் குமரியெல்லை — வட
மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு. — (செந்தமிழ்)

6. கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு — நல்ல
பல்வித மாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு. — (செந்தமிழ்)

7. வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு — நெஞ்சை
அள்ளுஞ் சிலப்பதி காரமென் றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு. — (செந்தமிழ்)

8. சிங்களம் புட்பகம் சாவகம் ஆதிய
தீவு பலவினுஞ் சென்றேறி — அங்கு
தங்கள் புலிக்கொடி மீன்கொடி யுநின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு. — (செந்தமிழ்)

### பயிற்சி

I விளக்கம் :-

7-ம் பாடத்தில் படித்த செய்யுட்களின் தொடர்ச்சியே இப்பாடத்துச் செய்யுட்கள் என்று அறிகிறோம்.

அவற்றைப்போலவே இவையும் அழகான பாட்டுக்கள். இவற்றின் கருத்தை அறிதல்வேண்டும்.

5-ம் செய்யுள் — இந்தியாவுக்குத் தெற்கே கடல் இருக்கிறது. அந்த நீலநிறமான கடல் ஓரத்தில் கன்னியாகுமரி என்ற முனைத்தேசம் உண்டு. இது கடலுக்கு அருகிலே நின்று தவஞ் செய்கிறதுபோலிருக்கிறதாம். இதுதான் தெற்கு எல்லை. வடக்கே வேங்கடமலை. இது திருப்பதி மலை என்று இக்காலத்தில் வழங்கும். இங்கே திருமால் (விஷ்ணு) கோயில் இருக்கிறது. மாலவன் என்பது விஷ்ணு. குன்றம் என்பது மலை. இந்த இரண்டு எல்லைக்கும் இடையில் பரந்து கிடப்பது தமிழ்நாடு.

6-ம் செய்யுள் — இந்தத் தமிழ் நாட்டில் படித்த பெரிய அறிவாளிகள் பலர் இருந்தார்கள். மிகப் பெரிய புலவராகிய **கம்பர்** இங்குத்தான் பிறந்தார். பல பல சாத்திரங்கள் தமிழ்நாட்டில் விளங்கின. இந்தச் சாத்திரங்களின் மணம் மற்றத் தேசங்களிலும் சென்று மணத்ததாம். (அது எப்படி என்று ஆலோசித்துச் சொல்லுங்கள்.)

7-ம் செய்யுள் — **வள்ளுவர்** என்னும் தமிழ்ப் புலவர் இந்தத் தமிழ்நாட்டிற் பிறந்தவர். அவர் ஒரு பெரிய ஞானி. அவர் தமிழில் **குறள்** என்னும் ஒரு நூல் செய்தார். அந்த நூலை உலகத்திலுள்ள மற்றச் சாதியார் தங்கள் பாஷையில் எழுதிப் படிக்கிறார்கள். அதனால் தமிழ்நாட்டுக்குப் பெரிய பேர் உண்டாயிற்று. **சிலப்பதிகாரம்** என்று ஒரு தமிழ் நூல் உண்டு. அதனைப் படிக்கப் படிக்க மனம் வேறொன்றிலுஞ் செல்லாது. அது அவ்வளவு இனியது. இரத்தினமாலைபோலத், தமிழ்

மக்களுக்குப் பெருமை கொடுக்கிற அழகிய ஆபரண மாம் இந்தச் சிலப்பதிகாரம்.

8-ம் செய்யுள் — இலங்கை, மலாய்நாடு, யாவா, முதலிய தேசங்களுக்குக் கடல்கடந்து சென்று அங்கே தங்கள் வீரத்தை நிலைநாட்டிய தமிழ்மக்களது தாய்நாடு ஆகும் இச் செந்தமிழ்நாடு, என்பதாம்.

சொற்கள் :— இச் செய்யுட்களில் வந்த **ஓரம், நித்தம், மாலவன், குன்றம், சாத்திரம், பார், மணி, ஆரம், சால்பு,** என்னும் சொற்களின் பொருளை அறிதல் வேண்டும்.

(1) 'நீலத்திரை' என்ற பாட்டில் உள்ள சொற் களைப் பிரித்து — நீலம், திரை, கடல், ஓரத்தில், ஏ, என்று இப்படித் தனித்தனியாய்ச் சொல்லுங்கள் (அல் லது எழுதுங்கள். மொத்தம் 21 சொற்கள் உண்டு).

(2) இப்பாடல்களிற் சொல்லிய தமிழ்ப் புலவர் இருவர் பெயர்களையும் அவர்கள் செய்த நூல்களின் பெயரையுங் கூறுக.

(3) சிலப்பதிகாரம் என்ற தமிழ் நூலைச் செய்த புலவர் பெயரை விசாரித்து அறிந்து சொல்லுங்கள்.

(4) புலியின் உருவம் எழுதப்பெற்றது புலிக்கொடி. மீன்கொடி என்றால் என்ன என்று சொல்லுங்கள். புலிக் கொடி சோழதேசத்துக் கொடி; மீன்கொடி பாண்டிய தேசத்துக்கொடி என்று அறியுங்கள். ஒவ்வொரு கொடி யையும் யார் யார் கொண்டுபோய்ப் பிறநாடுகளில் நாட் டினார்கள்? ஆங்கிலருடைய கொடி யாது?

(5) இந்தப் பாட்டுக்களை இசையோடு நன்றாகப் பாடுங்கள்.

## II எழுத்து :-

(1) இச் சொற்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக :—

கள்வி, தமிள், புகள், பிரந்த, தமில், ஞடு, வல்லுவன், உளகு, புளிக்கொடி, பயநிலே, பெயற்சொள்.

(2) (a) குலம், குளம்; (b) நீலம், நீளம்; (c) வெல்லம், வெள்ளம்; (d) புலி, புளி; (e) வலே, வளே;

இவ்விரண்டாக இருக்கும் சொற்களுக்குள்ள வேறுபாடு விளங்க அவற்றை வைத்து வாக்கியம் எழுதிக் காட்டுக.

(3) கம்பரைப் பற்றி மூன்று வாக்கியமும், வள்ளுவரைப் பற்றி மூன்று வாக்கியமும் எழுதுக.

(4) ஒரு புலிக்கொடியும் ஒரு மீன்கொடியும் (படமாக) வரைக.

(5) தமிழ் மக்கள் தாய்நாட்டிலிருந்து எங்கெங்கு போனர்கள்? எவ்வாறு போனர்கள்? என்பதைப்பற்றி ஐந்து வாக்கியங்களுக்குக் குறையாமல் எழுதுக.

## III பாஷை :-

இப் பாட்டுக்களில் வந்துள்ள பெயர்ச் சொற்களே ஆராய்வோம். நீலம், திரை, கடல், தவம், மாலவன், நாடு, கம்பன், வள்ளுவன், நெஞ்சு, மணி, என்பன பெயர்ச்சொற்கள்.

இவற்றுள் மாலவன் என்பது விஷ்ணு (திருமால்) என்னும் ஒரு தெய்வத்தின் பெயர். கம்பன், வள்ளு

வன் என்பன மனிதருடைய பெயர்கள். மற்ற ஏழு பெயர்ச் சொற்களும் தேவர்களுடைய பெயரும் அல்ல; மனிதருடைய பெயரும் அல்ல என்பது தெரிகிறது. அப்படியே, தேவன், பராபரன், அல்லா, பிரமன், ஆண்டவன், இலக்குமி, சரஸ்வதி, தேவர் என்பன தேவர்களுடைய பெயர்கள்: மனிதன், அரசன், வண்ணான், வேடன், குறத்தி, உழவர், சனங்கள், என்பன மனிதர்களுடைய பெயர்கள். மாடு, எருது, பசு, சேவல், கல், மரம், நன்மை, தீமை, பறவை, புல் என்பன இந்த இரண்டும் அல்லாத பொருள்களின் பெயர்கள். தேவரும் மனிதரும் **உயர்ந்த** சாதி. இவர் அல்லாத மற்றைய பொருட்கள் உயர்ந்த **அல்லாத** சாதி. அதனால் **உயர்ந்த** சாதிக்குரிய பெயர் **உயர்திணைப்** பெயர்ச்சொல் என்றும், உயர்ந்த **அல்**லாத சாதிப் பெயர் **அல்திணைப்** பெயர்ச்சொல் என்றும் சொல்லப்படும். **திணை** என்பது சாதி. அல்திணை என்பதைச் சேர்த்து **அஃறிணை** என்று சொல்லலாம். இதனால், பெயர்ச்சொற்கள் உயர்திணை, அல்திணை (அஃறிணை) என இரண்டுவகைப்படும் என்று அறிகிறோம்.

(1) குரங்கு, கடவுள், கந்தையா, தாமரை, பொன்னம்மா, தலை, வீடு, கணபதி, விஷ்ணு, கண்ணன், பார்வதி, யானை: இப் பெயர்ச் சொற்களுள் உயர்திணைப் பெயர்களை ஒரு நிரையாயும், அல்திணை (அஃறிணை)ப் பெயர்களை ஒரு நிரையாயும் எழுதுக.

(2) முதலாம் பாடத்து முதற்பந்தியிலுள்ள பெயர்ச் சொற்களுள் ஐந்து உயர்திணைப் பெயர்களும், ஐந்து அல்திணைப் பெயர்களும், தெரிந்தெடுத்து எழுதுக.

(3) ஐந்தாம் பாடத்தில் முதற் பத்தியிலுள்ள பெயர்ச் சொற்கள் ஒவ்வொன்றும் உயர்திணைப் பெயரோ அஃறிணைப் பெயரோ என்று கூறுக.

(4) உமது வாசினைப் புத்தகத்தில் இன்றைய பாடத்தில் வந்த ஐந்து உயர்திணைப் பெயரும், ஐந்து அஃறிணைப் பெயரும், ஐந்து வினைச்சொற்களும் எழுதுக.

(5) மாடு, பறக்கிறது, பேசும், பறவை, உழுகிறான், கிளி, ஓடும், பெய்கிறது, கமக்காரன், மழை: இங்கு தரப்பட்டிருக்கும் பத்துச் சொற்களுள் ஐந்து பெயர்ச்சொல்; ஐந்து வினைச்சொல். பொருத்தமான ஒரு பெயரையும் ஒரு வினையையுஞ் சேர்த்து ஐந்து வாக்கியங்களாக எழுதுக.

**IV Translation :-**

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :-

1. I have a head. 2. A dog has four legs. 3. My brother has a fine horse. 4. I close the door. 5. The servant closes the doors. 6. The baby cries. 7. My mother calls me. 8. This is a very big house. 9. My father has many servants. 10. That is my father. 11. This is my grandmother. 12. They are my brothers.

# Lesson 10 — பாடம் 10.

## ஒரு கள்வனின் ஏமாற்றம்



ஓர் ஊரில் ஒரு பிரபு இருந்தார். அவர் தம் மனைவி மக்களுடன் ஓர் அழகிய மாளிகையில் வசித்து வந்தார். அவரிடத்தில் ஓர் அழகான குதிரை இருந்தது. பிரபு அக் குதிரையில் ஏறிச் சவாரி செய்வார். ஒருநாட் காலையில் அவர் சவாரி செய்துவிட்டுத் திரும்பி வீட்டுக்கு வந்தார். குதிரையினின்றும் இறங்கி அவர் தமது குதிரைக்காரனைக் கூப்பிட்டார். அவன்

அங்கே காணப்படவில்லை. மற்ற வேலைக்கார ரும் பிரபு கூப்பிட்டதைக் கேட்கவில்லை. அதனால் பிரபு குதிரையை வாசலில் ஒரு மரத்தில் கட்டிவிட்டு மாளிகைக்குட் சென்றார்.

அப்போது ஒரு திருடன் அந்தவழியே வந்தான். அவன் குதிரை தனியே நிற்பதைக் கண்டான். உடனே அவன் சத்தஞ் செய்யாமல் மெதுவாகச் சென்று குதிரையை அவிழ்த்து அதன்மேல் ஏறி ஓட்டிக்கொண்டு போனான். குதிரையினது காலடிச் சத்தத்தைக் கேட்டுப் பிரபு வெளியே வந்து பார்த்தபோது, ஓர் அன்னியன் தன் குதிரையை ஓட்டிச் செல்வதைக் கண்டார். உடனே அவர் "திருடன்! திருடன்! பிடி! பிடி!" என்று கூவிக்கொண்டு துரத்திச் சென்றார். தெருவழியே போன சனங்களுஞ் சேர்ந்து திருடனைத் துரத்தினார்கள். அப்போது எதிர்ப்பக்கமாய் வந்த ஒரு நகரிகாவலன் (பொலீசுச் சேவகன்) சனங்களது கூச்சலைக் கேட்டுக் கள்வனைப் பிடித்துக்கொண்டான். பிரபு நடந்த சம்பவத்தைப் பொலீசுச் சேவகனுக்குச் சொன்னார். அவன் குதிரையோடு அவ்விருவரையும் இட்டுக்கொண்டு போய், அவ்வூர் நியாயாதிபதிமுன் நிறுத்தினான். நியாயாதிபதி அவர்களது வழக்கை விசாரித்தார்.

பிரபு குதிரை தன்னுடையது என்று சொன்னார். திருடனும் அது தன்னுடையது என்

றான். மேலும் அது சிறு குட்டியாய் இருந்தது முதல் தன்னிடமே இருக்கிறதாகவுஞ் சொன்னான். அப்போது பிரபு ஓர் உபாயஞ் செய்தார். அவர் தமது கைக்குட்டையை எடுத்து அதனால் குதிரையினது தலையை மூடினார். அப்படி மூடிவிட்டுத் திருடனைப் பார்த்து, "இது உன்னுடைய குதிரையானால் இதற்கு எந்தக் கண் குருடு என்று சொல் பார்ப்போம்" என்று திடீரென வினவினார். திருடன் அந்தக் குதிரைக்கு ஏதோ ஒரு கண் குருடாயிருக்கும் என்று தனக்குள் எண்ணி, "இதற்கு இடது கண் பொட்டை" என்றான். பிரபு குதிரையின் கண்களை மூடியிருந்த துணியை எடுத்துவிட்டு நியாயாதிபதிக்குக் காட்டி, "அப்படியானால் இது இவனுடைய குதிரை அன்று. இதன் இரண்டு கண்களும் நல்லவை. ஒன்றும் பொட்டையே இல்லை" என்று சொன்னார். திருடன் ஏமாற்றம் அடைந்தான்.

நியாயாதிபதி திருடனைக் குற்றவாளியெனக் கண்டு அவனுக்குச் சிறைத் தண்டனை விதித்தார். அவர் பிரபுவினது சமயோசித புத்தியை மெச்சிப் புகழ்ந்தார். பிரபுவும் நியாயாதிபதிக்கு வந்தனஞ் சொல்லித் தமது குதிரையில் ஏறிச் சென்று தம் மாளிகையை அடைந்தார். திருடுதல் மிக இழிவான செய்கை.

## பயிற்சி

**I விளக்கம் :-**

(a) மனைவி, மாளிகை, அன்னியன், நகரிகாவலன், நியாயாதிபதி, கைக்குட்டை, சிறை, சமயோசிதம், மெச்சி, ஏமாற்றம், இழிவு :- இச்சொற்களுக்குப் பொருள் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

(b) பாடத்தை வாசித்தபின் அடியில் வரும் வினக் களுக்கு விடை கூறுக :-

1. பிரபு என் குதிரையை வாசலில் கட்டிவிட்டு உள்ளே போனர்?

2. திருடன் குதிரையைத் திருடத் துணிந்தது எதனல்?

3. பொலீசுச் சேவகன் எப்படி அவன் கள்வன் என்று அறிந்து பிடித்தான்?

4. குதிரை கள்வனுடையது அன்று என நியா யாதிபதி எப்படி அறிந்தார்?

5. இவ்வழக்கில் பிரபு வெற்றியடைந்தது எதனல்?

**II எழுத்து :-**

(a) தாயும், ஆண்டு, இவரது, புலவர், இருந்தார், கம்பர் :— இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களுள் பொருத்தமான ஒரு சொல்லைத் தெரிந்து அடியில் கீறிட்ட இடத்தில் வைத்து நிரப்பி எழுதுக :-

தமிழ்நாட்டில்________பலர் இருந்தனர். அவர் களில்________ஒருவர். அவர் எண்ணூறு________ களுக்கு முன்________. குழந்தையாக இருந்த போதே________தந்தையும்________இறந்தனர்.

(b) விடப்பட்டிருக்கும் எழுத்துக்களை வைத்து நிரப்பி எழுதுக. இச்சொற்கள் இப்பாடத்தில் வந்தவை:-

(1) மா — கை. (2) ம — வி. (3) சென் —. (4) மக்க —. (5) வே — க்காரர். (6) எதி — — பக்கம். (7) வ — க்கு. (8) தி — டன். (9) த — யை. (10) இ — வான.

(c) விளக்க வினக்களுக்குரிய விடைகளை எழுதுக.

(d) ஒரு பொலீசுச் சேவகன் செய்யும் கடமைகளைப்பற்றித் தெரிந்தவற்றை எழுதுக.

(e) தபாற்காரனைப்பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

(f) இப்பாடத்துக் கதையில் பிரபு சமயோசிதமாய்ச் செய்த உபாயம் என்ன என்று எழுதுக.

## III பாஷை :-

(1) இப்பாடத்து முதற் பத்தியில் எத்தனை வாக்கியங்கள் உண்டு?

(2) இவற்றுள் செயப்படுபொருள் உள்ள வாக்கியம் ஒன்றுதான் இருக்கிறது. அது எது? அதிலுள்ள செயப்படுபொருள் யாது?

(3) மற்ற வாக்கியங்களை எழுவாய்ப் பகுதி பயனிலைப் பகுதி எனப் பாகுபாடு செய்க.

(4) கடைசிப் பத்தியிலுள்ள முதல் மூன்று வாக்கியங்களையும் பாகுபாடு செய்து கோட்டுள் அட்டவணைப்படுத்திக் காட்டு. செயப்படுபொருளும் வேறாக எழுதப்படுதல் வேண்டும்.

(5) இரண்டாம் பத்தியிலுள்ள வாக்கியங்களில் வந்திருக்கும் (i) ஐந்து உயர்திணைப் பெயர்ச் சொற்களும், (ii) ஐந்து அல்திணை (அஃறிணை) ப் பெயர்ச் சொற்களும், (iii) ஐந்து வினைச்சொற்களும் தெரிந்து எடுத்து எழுதுக.

(6) குதிரை, மாளிகை, நியாயாதிபதி :— என்னும் பெயர்ச் சொற்கள் எழுவாயாக வர வைத்து (ஒவ்வொரு சொல்லுக்கு ஒவ்வொரு) வாக்கியம் எழுதுக.

(7) அப்படியே, வேலைக்காரர், நகரிகாவலன், மரம் :— என்பவை செயப்படுபொருளாக வர மூன்று வாக்கியம் எழுதுக.

(8) சனங்கள் என்னும் பெயர்ச்சொல் எழுவாயாக வர ஒரு வாக்கியமும், செயப்படுபொருளாக வர ஒரு வாக்கியமும் ஆக இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

(9) இப்பாடத்தில் வராதனவாக உமக்குப் பிரியமான ஐந்து உயர்திணைப் பெயர்ச் சொற்களும், ஐந்து அஃறிணைப் பெயர்ச் சொற்களும் எழுதுக (சொல்லுக).

(10) பின்வரும் வாக்கியங்களுக்கு ஏற்ற செயப்படுபொருள் சேர்த்துச் சொல்லுக (அல்லது எழுதுக):-

மாடுகள் மேய்ந்தன. என் மகன் படித்தான். உன் எசமான் கூப்பிட்டார். பிள்ளைகள் பார்த்தார்கள். எனது தாய் சமைக்கிறாள். வியாபாரி விற்கிறான். கடவுள் காப்பாற்றுகிறார். அரசன் ஆளுகிறான். பெற்றோர் நேசிக்கிறார்கள். வண்ணான் வெளுக்கிறான்.

டால் :-

(a) மனிதன், மகன், தந்தை, அரசன், வேலன், இராமன், வேளாளன், வேலைக்காரன், பையன், குரு

டன், கண்ணன், சேவகன் :- இவை சில உயர்திணைப் பெயர்ச்சொற்கள். ஒவ்வொரு பெயரும் ஆணைக் குறிப்பதோ? பெண்ணைக் குறிப்பதோ? என்றும், ஒருவரைக் குறிப்பதோ? பலரைக் குறிப்பதோ? என்றும் பார்த்துச் சொல்லுங்கள்.

(b) மனுஷி, மகள், தாய், அரசி, பொன்னி, இலக்குமி, வேலைக்காரி, குருடி, கண்ணி, சேவகி, மீனாட்சி, பாத்தும்மா, சகோதரி, மாமி :— இவைகள் சில உயர்திணைப் பெயர்ச் சொற்கள். இவைகளையும் முன் (a யில்) போல ஆராய்ந்து சொல்லுங்கள்.

(c) மனிதர், மக்கள், அரசர், வேளாளர், வேலைக்காரர், குருடர், சேவகர், துரைமார், மனுஷிகள், தாய்மார், அரசியர், வேலைக்காரிகள், குருடிகள், சேவகிகள், சகோதரிகள், மாமிமார், பெண்கள் :- இவையுஞ் சில உயர்திணைப் பெயர்ச் சொற்கள். ஒவ்வொரு சொல்லும் ஒருவரைக் குறிப்பதோ பலரைக் குறிப்பதோ என்று பார்த்துச் சொல்லுங்கள்.

மேலே சொல்லிய மூன்று பிரிவிலும் உள்ள உயர்திணைப் பெயர்ச் சொற்களை ஆராய்ந்து நாம் என்ன அறிகிறோம்? (1) சில பெயர்ச்சொற்கள் **ஆணாகிய ஒருவனைக்** குறிப்பன என்றும், (2) சில சொற்கள் **பெண்ணாகிய ஒருத்தியைக்** குறிப்பன என்றும், (3) சில சொற்கள் ஆணாயினும் பெண்ணாயினும் **பலரைக்** குறிப்பன என்றும் அறிகிறோம். இந்த மூன்று பிரிவும் மூன்று **பால்** என்று சொல்லப்படும். அதனால், உயர்திணைப் பெயர்ச்சொற்கள் **ஆண்பால், பெண்பால், பலர்பால்** என்று மூன்று பிரிவு உடையன என்று அறிந்துகொள்ளல் வேண்டும்.

(1) சிங்களவர், தங்கச்சி, அண்ணன், ஆறுமுகன், பார்வதி, தேவிமார், தமிழர், வேடர், வேடிச்சிகள்; சின்னம்மா, ஆண்டாள், தேவன், தம்பி, நாதன் :- இவ் வுயர்திணைப் பெயர்ச்சொற்களை அடியிற் காணும் அட்டவணைப்படி மூன்று பிரிவாக்கி எழுதுக :-

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் |
|---|---|---|
| | | |

(d) ஆடு, குதிரை, மரங்கள், பசுக்கள், பறவை, வீடுகள், புத்தகம், பூக்கள் :- இச்சொற்கள் அஃறிணைப் பெயர்ச் சொற்களாகும். இவற்றுள், ஆடு, குதிரை, பறவை, புத்தகம் என்பன ஓர் ஆடு, ஒரு குதிரை, ஒரு பறவை, ஒரு புத்தகம் என **ஒன்றனையே** குறிப்பன. இப்படி ஒன்றனை மாத்திரங் குறிக்கும் அஃறிணைப் பெயர்கள் **ஒன்றன்பால்** பெயர்ச்சொற்கள் எனப்படும்.

(e) மரங்கள், பசுக்கள், வீடுகள், பூக்கள்: என்பன பல மரங்கள், பல பசுக்கள், பல வீடுகள், பல பூக்கள் எனப் **பல** பொருட்களைக் குறிப்பன. **பல** பொருட்களைக் குறிக்கும் பெயர்ச்சொல் **பலவின்பால்** பெயர்ச்சொல் எனப்படும்.

ஆகவே, பெயர்ச் சொற்களுக்குரிய **பால்** ஐந்து ஆகும். அவற்றைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்திக் காட்டலாம்.

### பெயர்ச் சொற்கள்

| திணை – 2 | பால் – 5 |
|---|---|
| 1. உயர்திணை | 1. ஆண்பால்<br>2. பெண்பால்<br>3. பலர்பால் |
| 2. அஃறிணை | 4. ஒன்றன்பால்<br>5. பலவின்பால் |

(2) மூன்றும் பாடத்து முதற் பத்தியில் வந்த பெயர்ச் சொற்களுள் **ஒன்றன்**பாற் சொற்களையும், **பலவின்**பாற் சொற்களையுந் தெரிந்து சொல்லுக.

(3) ஐந்தாம் பாடத்து முதற்பத்தியில் உள்ள பெயர்ச்சொல் ஒவ்வொன்றும் என்ன **பால்** என்று கூறுக (அல்லது எழுதுக).

(4) பின்வரும் பெயர்ச் சொற்களுக்கு திணையும் பாலுங் கூறுக (எழுதுக).

சேவல், யானைகள், அம்மான், பிள்ளைகள், இலை, கந்தையா, மாணவர், அப்துல்காதர், தெய்வானை, மனைவி, இஸ்மாயில், சகோதரர், எருது, வண்டுகள், மறிகள்.

## IV Translation :-

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :-

1. This man has a good horse. 2. The horse has two ears 3. This is a thief 4. The thief stole my horse. 5. My horsekeeper was sleeping. 6. A policeman caught the thief. 7. This policeman is a clever man. 8. His name is Ramasamy. 9. Abdulla is a postman 10. He carries a bag with him. 11. He has many letters in his bag. 12. Kampan is a great Tamil poet.

# Lesson 11 — பாடம் 11.

## இலங்கை III

இலங்கைத்தீவில் நாம் வசிக்கிறோம். இலங்கைத்தீவு தென்னிந்தியாவுக்கு அருகில் இருக்கிறது. தென்னிந்தியாவில் தமிழ் மக்கள் வசிக்கிறார்கள். இவைகளை நீங்கள் முன் ஒரு பாடத்தில் படித்திருக்கிறீர்கள். ஆதிகாலந் தொடங்கி தென் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் போக்கு வரவு இருந்து வருகிறது. ஆதியில் இலங்கையில் வசித்தவர்கள் பழைய தமிழ்ச்சாதியைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். கந்தபுராணத்தில் இலங்கையைப்பற்றிய கதை காணப்படுகின்றது. முற்காலத்தில் இலங்கையில் அசுரர் என்ற சாதியார் இருந்தார்கள். சூரபன்மன் என்பவன் அவர்களுக்கு அரசனாக இருந்தான். அந்த அசுரர்களையும் அவர்கள் அரசனாகிய சூரனையும் கந்தசுவாமி போர்செய்து அழித்தார். கந்தபுராணத்தில் இக்கதை சொல்லப்படுகிறது. கதிர்காமம் இலங்கையிலுள்ள மிகப் பழைய ஒரு தலம். அங்கே கந்தசுவாமிக்குரிய ஒரு கோயில் இருக்கிறது. கதிர்காமத் தலத்தைத் தரிசிக்க விரும்பி ஆயிரக்கணக்கான சனங்கள் இப்போதும் போகிறார்கள்.

இராமாயணத்தில் இலங்கையைப் பற்றிய கதை வருகிறது. அக்காலத்தில் இலங்கையில்

இராக்கதர் என்ற ஒரு சாதியார் வசித்தார்கள். இராவணன் என்பவன் அவர்களுக்கு அரசனாக இருந்தான். அவனுக்கு இரண்டு தம்பிமார் இருந்தனர். ஒரு தங்கையும் இருந்தாள். அவள் பெயர் சூர்ப்பநகை எனப்படும். வட இந்தியாவில் உள்ள அயோத்தியாபுரியில் தசரதன் என்னும் ஒரு பெரிய அரசனிருந்தான். அவனுக்கு நான்கு புத்திரர் இருந்தனர். மூத்த குமாரனாகிய இராமன் கல்வியறிவிலும் ஒழுக்கத்திலும் வீரத்திலும் சிறந்து விளங்கினான். இராமன் தன் மனைவியாகிய சீதா தேவியுடன் சிலகாலங் காட்டில் சென்று வசித்தான். அப்போது இராவணன் அங்கே சென்று சீதையைக் களவாகக் கவர்ந்துகொண்டுபோய் இலங்கையிற் சிறையில் வைத்தான். இராமன் பெரிய சேனையோடு இலங்கைக்கு வந்து இராவணனை எதிர்த்தான். அவன் இராவணனையும் மற்றைய அரக்கர்களையும் போரிலே கொன்று சீதையைச் சிறை மீட்டான்.

இராமன் இலங்கையிலிருந்து மீண்டு இந்தியாக் கரையை அடைந்தான். அங்கே சிவபெருமானை வழிபட்டான். அந்த இடம் இராமேச்வரம் என்று இன்றும் வழங்குகின்றது. இராவணன் திருக்கோணமலையில் சிவபெருமானைப் பூசித்தான். அங்கு உள்ள கன்னியாய் என்னுந் தீர்த்தம் இராவணனால் உண்டாக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதில் சிறு கிணறு

கள் போன்ற ஏழு நீர் ஊற்றுக்கள் உண்டு. இவற்றின் நீர் சூடாய் இருக்கும். கேர்ணேசர் மலையிலுள்ள ஒருபிளவு **இராவணன்வெட்டு** என்று இன்றும் வழங்கி வருகிறது. இப்போது நுவரெலியா எனப்படும் பகுதியில்தான் இராவணன் சீதையைச் சிறைவைத்திருந்தான் எனச் சனங்கள் சொல்லுகிருர்கள். நுவரெலியாவில் **சீதாஎலியா** என்று ஓர் இடம் இப்போதும் இருக்கிறது. அங்குச் சீதையம்மன்கோயில் என ஒரு சிறுகோயிலும் உண்டு.

இராவணனது இளைய தம்பி ஆகிய விபீஷணன் தமயனை வெறுத்து இராமனது பக்கஞ் சேர்ந்தான். அதனல் அவன் உயிர் பிழைத்து இருந்து இராவணனுக்குப் பின் இலங்கைக்கு அரசன் ஆனன். சிங்கள மக்கள் விபீஷணனையும் ஒரு தெய்வமாக இன்றுங் கொண்டாடி வருகிருர்கள். கொழும்பை அடுத்த களனியா என்னும் இடத்தில் விபீஷணன்கோயில் ஒன்று இருக்கிறது.

## பயிற்சி

**I விளக்கம் :**

பின்வரும் வினக்களுக்கு விடை கூறுக :-

(1) கந்தபுராணத்தில் இலங்கையைப்பற்றி என்ன சம்பவஞ் சொல்லப்பட்டிருக்கிறது? (2) இராமாயணத்திலிருந்து இலங்கையைப்பற்றி என்ன, அறிகிறேம்? (3) இராவணன், சீதை, இராமன் என்னும் இவர்க

ருடைய பெயரோடு தொடர்புற்று விளங்கும் இடங்கள் எவை? (4) கந்தபுராணத்தைப் பாடியவர் யாவர்? இராமாயணத்தைப் பாடியவர் யாவர்? என்று விசாரித்து அறியுங்கள். இவை இரண்டும் இனிமையான பாட்டுக்கள் உள்ள தமிழ் நூல்கள்.

## II எழுத்து :-

(1) பின்வரும் வாக்கியங்களில் விடப்பட்ட எழுத்துக்களை வைத்து நிரப்பி எழுதுக :-

(a) திருக்கோ — ம — யில் இராவ — ன் சிவ — சை செய் — ன். (b) க — னியாயி — ஏ — கி — றுக — உண்டு. (c) கதி — காமத் த — ந்தைந் த — சிக்க — ச — ங்க — போகி — ர்க —.

(2) பின்வருஞ் சொற்களில் விடப்பட்டிருக்கும் எழுத்துக்களை வைத்து நிரப்பி எழுதுக :-

(1) மக்க —. (2) அவர்க — க்கு. (3) அ — சன். (4) அ — த்தார். (5) ம — வி. (6) பி — வு. (7) ப — ய. (8) உ — ள. (9) சி — கா — ம். (10) தச — தன்.

(3) பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக :-

இவைகழை நீங்கள் அரிந்திருக்கிரீர்கல். இந்த வாக்கியத்துக்கு எலுவாய் பயநிலை எலுதுங்கல். இராமன் கள்வியிலும் ஒலுக்கத்திலும் சிரந்து விலங்கினான்.

(4) 'விளக்க' வினாக்களுக்குரிய விடைகளை எழுதுங்கள்.

(5) திருக்கோணமலை, நுவரெலியா, கதிர்காமம் என்னும் இவற்றுள் ஏதும் ஒன்றைப்பற்றித் தெரிந்ததை எழுதுங்கள்.

(6) விபீஷணனைப்பற்றி ஒரு வாசகம் எழுதுக (10 வரி வரையில்).

(7) மகன் என்னுங் கருத்துள்ள ஐந்து பெயர்ச் சொற்கள் எழுதுக.

(8) பிற ஊரில் உத்தியோகமாய் இருக்கும் ஒரு தகப்பனுக்கு அவர் மகன் புத்தகம் வாங்கப் பணம் அனுப்பும்படி வேண்டி எழுதியதாக ஒரு கடிதம் எழுதுக.

## III பாஷை :-

(1) முதற் பத்தியில் உள்ள வாக்கியங்களை எழுவாய்ப் பகுதி, பயனிலைப் பகுதியாகப் பிரித்துச் சொல்லுக (அல்லது எழுதுக).

(2) இரண்டாம் பத்தியில் செயப்படுபொருள் உள்ள வாக்கியங்கள் மூன்று உள்ளன. அவை எவை? ஒவ்வொன்றிலும் வந்த செயப்படுபொருளைக் கூறுக.

(3) மூன்றும் பத்தியிலுள்ள முதல் நாலு வாக்கியங்களுக்கும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்கள் அட்டவணைப்படுத்தி எழுதுக.

(4) இப்பாடத்தில் வந்துள்ள 5 ஆண்பால், 5 பெண்பால், 5 பலர்பாற் பெயர்ச்சொற்கள் எழுதுக.

(5) குமாரன், அயோத்தியா, பிளவு, ஊற்றுக்கள், அரக்கர், கிணறுகள், சீதை :- இப்பெயர்கள் ஒவ்வொன்றும் என்ன திணை? என்ன பால்? என்று கூறுக.

(6) **மகன்** என்பது ஆண்பாற் பெயர்; அதற்குரிய பெண்பாற் பெயர் **மகள்** என்பது. **அரசன்** என்பது ஆண்பால்; அதன் பெண்பால் **அரசி** என்

பது. இப்படியே பின்வரும் ஆண்பாற் பெயர்களுக்குரிய பெண்பாற் சொற்களைச் சொல்லுக (அல்லது எழுதுக):- குமாரன், அரக்கன், தம்பி, தந்தை, வேலைக்காரன், அவன், தமிழன், சிங்களவன், எவ்பவன், வேடன்.

(7) பின்வரும் பெண்பாற் சொற்களுக்குரிய ஆண்பாற் சொற்களைச் சொல்லுக:- மனைவி, அன்னை, மாமி, தோழி, தலைவி, பெண், பொன்னி, தேவி, குறத்தி, சகோதரி.

(8) சென்றான், படுத்தேன், படிக்கிறாள், உண்டார்கள், குடித்தது:- இவ் வினைச்சொற்களை வைத்து ஒவ்வொரு வாக்கியம் இயற்றுக.

## IV Translation :-

There என்பது அங்கே என்றும், Here என்பது இங்கே என்றும் இடத்தைக் குறிக்குஞ் சொற்களாம். My book is there என்பதை, எனது புத்தகம் அங்கே (அதோ) இருக்கிறது என்று சொல்லலாம். அப்படியே My dog is here என்பதை எனது நாய் இங்கே (இதோ) இருக்கிறது என்று சொல்லலாம். There was a king என்பதை ஓர் அரசன் இருந்தான் என்றே சொல்லுவோம். There were many people என்பதை அநேக சனங்கள் இருந்தார்கள் என்று சொல்வோம். இந்த வாக்கியங்களில் There என்னும் சொல்லு அங்கே என்ற இடப் பொருளில் வரவில்லை. வாக்கியத்தைத் தொடங்குவதற்காக முதலில் There என்பதை வைத்துச் சொல்லுதல் ஆங்கில பாஷை முறை. அதைத் தமிழிற் சொல்லும்போது, அங்கே என்பதைச் சொல்லாது விடுதல்

தமிழ் முறை. There stands a man at the door என்பதை வாயிலில் ஒரு மனிதன் நிற்கிறான் என்று சொல்லுதல் நல்லது; அங்கே நிற்கிறான் என்று சொல்ல வேண்டியது இல்லை.

தமிழில் மொழிபெயர்த்து எழுதுங்கள் :-

1. There is a book on the table. 2. There lived a thief in this house. 3. There were many people in my house. 4. There were five servants in our house. 5. There are seven hot springs at Kanniya 6. I wish to go there. 7. Ravana had two brothers and a sister. 8. There was a king, called Dasaratha, in Northern India. 9. There are no rivers in Jaffna. 10. There is no mountain also. 11. Here is a pretty little bird. 12. Where is your servant gone.

---

## Lesson 12 — பாடம் 12.

### பயிற்சி

**I எழுத்து :-**

பாடல்களிலும் பேச்சிலும் ஒரே சத்தமாய் முடிகிற பல சொற்கள் அடுத்தடுத்து வருவது அழகாயும் இனிமையாயும் இருக்கும். உதாரணமாக :-

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| காடு | குடம் | வானம் | ஆசனம் | ஆட்டம் |
| மாடு | மடம் | தானம் | போசனம் | ஓட்டம் |
| பாடு | படம் | மானம் | மோசனம் | பாட்டம் |
| வீடு | வடம் | கானம் | சாசனம் | நாட்டம் |

இங்கு ஐந்து தொகுதியான சொற்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தொகுதியிலும் (Group) ஒரே சத்தமாய் முடிகிற நாலு சொற்கள் உள்ளன. இச் சொற்களில் முதல் எழுத்துக்கள் வித்தியாசமாய் இருக்கும். இரண்டாம், மூன்றும் எழுத்துக்கள் ஒரே எழுத்தாய் இருக்கும். இப்படியாக ஒரே சத்தமாய் முடிகிற சொற்களைப் புலவர்கள் **எதுகைச்** சொற்கள் என்று சொல்வார்கள். இப்படி எதுகைச் சொற்கள் நீங்கள் படிக்கும் பாடல்களில் வருவதைப் பார்த்து அறியுங்கள்.

(1) மலை, தந்தை, மணம், அண்ணன் :- இந்த ஒவ்வொரு சொல்லுக்கும் எதுகையான மும்மூன்று சொற்கள் தேடி எடுத்து எழுதுங்கள்.

(2) வீட்டை, வேட்டை, காட்டை :- இங்கு கொடுக்கப்பட்ட சொற்களுள் பொருத்தமான ஒன்றைத் தெரிந்தெடுத்து அடியில் கீறிட்ட இடத்தில் வைத்து நிரப்பி எழுதுக: (இது ஒரு பாட்டு).

நாட்டை விட்டு நடந்து மரஞ்செறி
__________எய்திக் கணங்கொள் விலங்கினம்
__________ஆடி மிகுந்த களைப்பொடு
__________நோக்கி விரைந்தனன் வீரனே.

(3) பின்வரும் பத்துச் சொற்களுள் ஐந்து குதிரையைக் குறிப்பன; ஐந்து சொற்கள் கடவுளைக் குறிப்பன. அவற்றைப் பிரித்து இரண்டு தொகுதியாக எழுதுக :-

தெய்வம், பரி, ஈசன், அச்சுவம், குதிரை, கடவுள், பரிமா, துரகம், ஆண்டவன், கர்த்தா.

## II பாஷை:-

(a) பால்: ஒவ்வொரு பெயர்ச்சொல்லும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐந்து பிரிவுகளுள் எதும் ஒன்றைச் சேர்ந்ததாய் இருக்கும் என்று படித்தோம். அப்படியே பயனிலையாய் வரும் வினைச்சொல்லும் இந்த ஐந்து பாலுள் எதும் ஒன்றைச் சேர்ந்ததாய் இருக்கும். இதனை அடியிற் காணும் அட்டவணையிற் பார்த்து அறியலாம்:-

| | பெயர் | வினை | பால் |
|---|---|---|---|
| 1. | அவன் | வருகிறுன் | ஆண்பால் |
| 2. | அவள் | வருகிறுள் | பெண்பால் |
| 3. | அவர் | வருகிறுர் | பலர்பால் |
| 4. | அது | வருகிறது | ஒன்றன்பால் |
| 5. | அவ்வ<br>அவைகள் | வருகின்றன | பலவின்பால் |

(b) எண்: **யான், நான்** என்பவை பேசுகிற ஒருவர் தன்னை மாத்திரங் குறித்துச் சொல்லும் பெயர்ச்சொல். **யாம், நாம்** என்பவை தன்னோடு வேறு பலரையுஞ் சேர்த்துச் சொல்லும் பெயர்ச்சொல்.

**நீ** என்பது முன்பு நிற்கும் ஒருவரை மாத்திரம் குறித்துச் சொல்லும் பெயர்ச்சொல். **நீர், நீவிர், நீங்கள்** என்பவை முன்பு நிற்கும் பலரைக் குறித்துச் சொல்லும் பெயர்ச்சொல்.

இந்தப் பெயர்ச் சொற்களுக்கு ஆண்பால், பெண்பால் என்ற வித்தியாசம் இல்லை. இவை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான சொற்கள்: யான், நான், நீ என்னும் இவை ஓர் ஆளை மாத்திரம் எண்ணிச் சொல்வதால் **ஒருமைச்** சொற்கள் என்றும்; யாம், நாம்,

நீர், நீவிர், நீங்கள் என்னும் இவை பலரை எண்ணிச் சொல்வதால் **பன்மைச்** சொற்கள் என்றும் வழங்கும்.

| ஒருமை | | பன்மை | |
|---|---|---|---|
| 1. யான் (நான்) | வருகிறேன் | யாம் (நாம்) (யாங்கள், நாங்கள்) | வருகிறோம். |
| 2. நீ வருகிறாய். | | நீர் (நீவிர்) வருகிறீர். | |
| | | நீங்கள் வருகிறீர்கள். | |

இந்த வாக்கியங்களைப் பாருங்கள். இவற்றில் எழுவாய்ப் பெயர் **ஒருமைச்** சொல்லானால், பயனிலையாய் வந்த வினைச்சொல்லும் **ஒருமையாய்** இருப்பதையும், எழுவாய் **பன்மைப்** பெயரானால் பயனிலை வினைச்சொல்லும் **பன்மையாய்** இருப்பதையும் உற்று நோக்கி அறியுங்கள்.

ஒரு வாக்கியத்திற்குரிய **எழுவாயும்** அதனை முடிக்கிற **பயனிலையும்** ஆகிய இரண்டு சொற்களும் **ஒரே திணை, பால், எண்** என்பவற்றில் இருத்தல் வேண்டும் என்பதை நன்கு தெளிந்து நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

(1) மேல் வரும் பயனிலைகளுக்கேற்ற எழுவாய் சேர்த்து வாக்கியமாக்கி எழுதுக :—

வருகிறேன், படிக்கிறோம், போகிறாய், வருகிறீர், சிரிக்கிறாள், வந்தோம், இருக்கிறீர்கள், அழுதன, பாடுகின்றது, அழுகிறார்கள், நிற்கிறீர்கள், பறக்கும், ஓடுகிறது, உண்டோம், குளித்தாள்.

(2) கீறிட்ட இடத்தில் ஏற்ற சொல் வைத்து வாக்கியத்தை நிரப்பி எழுதுக :-

(1) நான் பாடம்______. (2) ______சிரிக்கிறாய். (3) அவன் ஒரு ______பாடினான். (4) இந்த மாடு பயிரை ______. (5) நாங்கள் ஒரு வீடு______. (6) அங்கு நின்ற______ பயந்து ஓடின. (7) சனங்கள் தெருவில்

______. (8) ______ ______. கடைக்கு அனுப்பினாள். (9) நீர்______ஏன் அடிக்கிறீர்? (10) ______ எந்த______வசிக்கிறீர்கள்?

(c) வினைச்சொற்கள் :-

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| போகிறான் | போகிறாள் | போகிறார் | போகிறது | போகின்றன |
| போனான் | போனாள் | போனார் | போனது | போயின |
| போவான் | போவாள் | போவார் | போகும் | போகும் |

போ என்னும் வினைச்சொல்லை ஐந்து பாலிலுஞ் சொல்லும்போது ஒவ்வொரு பாலிலும் அது என்ன மாறுதல் அடைகிறது என்பதை மேலே காட்டிய அட்டவணையிற் பார்த்து இலகுவாய் அறியலாம். ஒவ்வொன்றிலுங் கடை(சி) எழுத்துத்தான் வித்தியாசப்படுவதைக் காணலாம். எல்லா வினைச்சொற்களும் இப்படித்தான் வரும். இதனால்,

1. ஆண்பாற் சொல் **ன்** என்ற எழுத்தைக் கொண்டு முடியும்,

2. பெண்பாற்சொல் **ள்** என்ற எழுத்தைக் கொண்டு முடியும்,

3. பலர்பாற் சொல் **ர்** என்ற எழுத்தைக் கொண்டு முடியும்,

4. ஒன்றன்பாற்சொல் **து** என்ற எழுத்தைக்கொண்டு முடியும்,

5. பலவின்பாற் சொல் **அ** (ன) என்ற எழுத்தைக் கொண்டு முடியும் என்று அறிகிறோம். வினைச்சொற்கள் இவையல்லாமல் வேறு எழுத்துக்களையுங் கொண்டு முடிவதை மேல் வகுப்புக்களிற் படிப்போம்.

(d) கீறிட்ட இடங்களில் ஏற்ற எழுத்துக்களை வைத்து வினைச்சொல்லை முடித்து எழுதுக (அல்லது) சொல்லுக:-

(1) ஒரு மாடு வந்த—. (2) மாடுகள் வந்த—. (3) ஒரு நாய் குலைத்த—. (4) பறவைகள் வானத்தில் பறக்கின்ற—. (5) வேலைக்காரி வருகிற—. (6) தாய் தன் குழந்தையை நேசிக்கிற—. (7) தோழியர் என்னை அழைத்தன—. (8) வண்ணார் சீலை வெளுப்பு—. (9) பெண்கள் சமையல் செய்தன —. (10) எருதுகள் வயல் உழுத —.

## III Translation :-

ஆங்கிலத்தில் This என்பது ஒருமை, These என்பது பன்மை. அப்படியே That என்பது ஒருமை, Those என்பது பன்மை. இச்சொற்களைத் தமிழில் சொல்லும்போது திணை, பால், எண், என்பவற்றுக்கு இசையச் சொல்லல் வேண்டும். உதாரணமாக, This is a boy = இவன் ஒரு பையன், This is a girl = இவள் ஒரு சிறுமி, This is a book = இது ஒரு புத்தகம், These are my friends = இவர்கள் எனது சினேகிதர், These are my books = இவைகள் எனது புத்தகங்கள் என்று சொல்லுவோம். That என்பதும் இதுபோலவே என்று அறியுங்கள்.

தமிழில் மொழிபெயர்த்து எழுதுங்கள் :-

1. This is my servant. 2. This is my daughter. 3. This is my motor car. 4. This (இவர்) is my mother. 5. These are my sisters. 6. They are my sons. 7. They are your books. 8. These are your things. 9. That is a lame man 10. There is a blind man at the gate. 11. Those are her cows. 12. These cows are mine. 13. They are mine. 14. That is a green parrot. 15. These are my uncle and aunt. 16. There are two crows on that tree. 17. That man is a merchant. 18. Those are coconut trees 19. He has a son and a daughter. 20. That is a beggar woman.

# Lesson 13 — பாடம் 13

## பொது நன்மை



உலகத்தில் உள்ள ஒவ்வொருவரும் இன்பத்தை விரும்புகின்றனர். அதனால் எல்லாரும் அதனை அடைய முயல்கின்றனர். பெரும்பாலும் மனிதர் தம்முடைய நன்மையைத் தேடுவதிலே தான் தம் முழுக் கருத்தையுஞ் செலுத்துவர். தாம் இன்பம் அடைதலையே அவர் பெரிதாகக் கருதுவர். மற்றவர்கள் படுந் துன்பத்தை அவர் நோக்குவது இல்லை. மற்றவர்களும் தம்மைப் போல நன்மையைப் பெற்று இனிது வாழ வேண்டும் என்று எண்ணுவதில்லை. தங்கள் காரியம் முடிந்தால் அதுவே போதும், மற்றை

யோர். எப்படித் துன்பமுற்றாலும் அது அவர்கள் பாடு என்று எண்ணி நடப்பது உயர்ந்த மனிதக் குணம் ஆகாது. அது மிருகத் தன்மையைச் சார்ந்த இழிந்த குணமாகும். எல்லோரும் சுகமாக இருத்தல்வேண்டும் என்று எண்ணுதலும், மற்றவர்களுக்கு உபகாரமான செயல்களை விரும்பிச் செய்தலும் நல்ல மனிதருடைய குணமாகும். மற்றவர்களுடைய நன்மையை விரும்பி ஒரு செயலுஞ் செய்யாதவர் தாமும் பெரிய நன்மையை அடையமாட்டார்.

ஈழநாட்டில் ஓர் ஊர் உண்டு. அவ்வூர்க் கிராம சங்கத்தார் ஊரவர்களது நன்மைக்காகப் புதிதாய் ஒரு தெரு அமைப்பித்தார்கள். அத்தெரு ஊருக்கு நடுவணாகச் சென்றது. அதனால் அவ்வூரவர்கள் பெரும் நன்மையை அடைந்தார்கள். ஒருநாட் காலையில் அந்தத் தெருவில் ஓரிடத்தில் ஒரு பெரிய பாறைக்கல் காணப்பட்டது. அது தெருவில் நடுவழியில் கிடந்தது. அது எப்படி அங்கே வந்தது என்று ஒருவரும் விசாரணை செய்யவில்லை. அவ்வழியே போனவர்கள் எல்லாரும் விலகி அக்கல்லைச் சுற்றிக்கொண்டு போனார்கள். வண்டிகளும் அப்படியே போயின. சிலர் அக்கல்லை வழியிற் போட்டவரை ஏசிக்கொண்டு போனார்கள். எனினும் ஒருவராவது அக்கல்லைப் புரட்டித் தெரு ஓரமாகத் தள்ளவேயில்லை.

இப்படியாகப் பல நாட்கள் சென்றன. இன்னும் அந்தக் கல் கிடந்த இடத்திலேயே கிடந்தது. பின்பு ஒருநாள் அந்த ஊர்க் கிராம சங்கத் தலைவர் தன் வண்டியில் ஏறி அந்தத் தெருவழியாக வந்தார். அந்தக் கல்லுக்குச் சமீபமாக வந்ததும் அவர் தம் வண்டியை நிறுத்தும்படி சொன்னார். அவர் வண்டியினின்றும் இறங்கிக் கல் கிடந்த இடத்துக்குப் போனார். அப்போது அவ்வழியே போனவர்களும், அயலில் இருந்தவர்களும் அங்கு கூடி ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டு நின்றார்கள். தலைவர் தாமாகவே தமது கையால் அக்கல்லைப் புரட்டித் தெரு ஓரமாகத் தள்ளிவிட்டார். அக்கல்லின் அடியில் என்ன இருந்தது என்று நினைக்கிறீர்கள்! ஒரு பணப்பையும் ஒரு சீட்டும் இருந்தன.

தலைவர் அந்தச் சீட்டை எடுத்து எல்லாருக்குங் காட்டி வாசித்தார். "இந்தக் கல்லைப் புரட்டித் தெரு ஓரமாகத் தள்ளுகிறவருக்கு இந்தப் பணப்பை உரியது" என ஓர் அறிவித்தல் அதில் எழுதியிருந்தது. அப்போது அங்கு நின்றவர்கள் எல்லாரும் வருத்தப்பட்டார்கள். தலைவர் அவர்களை நோக்கிப் பின் வருமாறு சொன்னார். "நான்தான் இக்கல்லை இங்கு போட்டு வைத்தேன். உங்களில் யார் மற்றவர்களுக்கும் உபகாரமான செயலைச் செய்வீர்கள்

என்று பார்ப்பதற்கே அவ்வாறு செய்தேன். நீங்கள் ஒருவரும் அதனைச் செய்யவில்லை. யாராவது செய்திருந்தால் இப் பணப் பரிசைப் பெற்றிருப்பீர்கள். நீங்கள் ஒவ்வொருவரும் உங்களைப்பற்றி மாத்திரம் நினைத்து விலகிப் போனீர்களே ஒழியப் பிறர் காலில் இக்கல் இடிக்குமே என்று நினைக்கவில்லை. அப்படிப் பிறரது சுகத்தைப்பற்றியும் நினைப்பீர்களானால் பணம்மட்டும் அன்று, கடவுளுடைய கிருபையும் உங்களுக்குக் கிடைக்கும்'' என்று சொல்லி அவர் அவர்களுக்கு நற்புத்தி புகட்டினார்.

## பயிற்சி

### I விளக்கம் :-

இப் பாடத்தை வாசித்தபின் கீழ்வரும் வினாக்களுக்கு விடை கூறுக :-

1. சனங்கள் எல்லாரும் எதனை அடைய விரும்புகிறார்கள்? எதனை வெறுக்கிறார்கள்?

2. உயர்ந்த மனிதக் குணம் யாது? இழிந்த குணம் யாது?

3. புதிய தெருவை யார் எதற்காக அமைத்தார்கள்?

4. வழியிற் கிடந்த கல்லைக் கண்ட சனங்கள் யாது செய்தனர்?

5. அந்தக் கல் எப்படி அங்கே வந்தது?

6. கிராமசங்கத் தலைவர் சீட்டைப் படித்துக் காட்டியபோது நின்ற சனங்கள் ஏன் வருத்தப்பட்டார்கள்?

7. சீட்டில் என்ன எழுதியிருந்தது?

8. தலைவர் பணப் பையைத் தானே எடுத்துக் கொண்டது ஏன்?

9. இக் கதை எதனை விளக்குகிறது? (பாடத்தில் எந்த வாக்கியப் பொருளை விளக்குகிறது?)

10. ஒருவர் மற்றவர்களுக்குச் செய்யும் நன்மைகளையெல்லாம் யார் அறிந்து அவருக்குப் பலன் கொடுப்பார்?

## II எழுத்து :-

(a) 1. விளக்க வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

2. இப்பாடத்தில் வந்த கதையை (உமது மொழியாக) எழுதுக.

3. பிறர்க்கு உபகாரமாக நீர் ஒரு காரியஞ் செய்திருந்தால் அந்தச் சம்பவத்தை எழுதுக.

4. உமது ஊரிலுள்ள கிராமசங்கம் (அல்லது வேறு சங்கம்) செய்யும் வேலையைப்பற்றித் தெரிந்ததை எழுதுக.

5. உமது கிராமத்தில் புதிதாய் ஒரு தெரு அமைத்து உதவி செய்யும்படி வேண்டிச் சங்கத்தலைவருக்கு ஒரு கடிதம் எழுதுக.

(b) 1. கல்லின் அடியில் இருந்த சீட்டைப்போல ஒரு சீட்டு அமைக்குக.

2. தலைவர் புகட்டிய நற்புத்தியைப் புத்தகத்தைப் பார்த்துப் பிரதி பண்ணுக.

3. எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக:-

உளகத்தில் உல்ல எள்ளாரும் யின்பத்தையே விறும்பிகிறார்கல். தெறுவில் ஒரு கள் கிடந்தது. மற்ற வர்கலுடைய நண்மையையும் நாம் பாற்க்கவேண்டும்.

4. கொளம், வயறு, கணறு, காச்சல், பாச்சல், எலே, கொடம், குடுத்தல், தேள்வை, அப்போ:— பிழையாக இருக்கும் இச்சொற்களைத் திருத்தி எழுதுக.

III பாஷை:-

1. இப்பாடத்து முதற் பத்தியிலுள்ள முதல் மூன்று வாக்கியங்களையும் எழுவாய்ப்பகுதி பயனிலைப் பகுதியாகப் பிரித்து எழுதுக (சொல்லுக).

2. எழுதியபின் எழுவாய்ச் சொல்லின்கீழ் ஒரு கீறும் பயனிலைச் சொல்லின்கீழ் ஒரு கீறும் இடுக.

3. இரண்டாம் பத்தியில் செயப்படுபொருள் இல்லாத வாக்கியங்கள் மூன்று எடுத்துக் காட்டுக.

4. ஒரு பச்சைக் கிளியை, ஒரு பெரிய கல்லை, அங்கே நின்றவர்களை, இரண்டு ஆடுகளை, எனது கிழிந்த சீலையை: இவை ஒவ்வொன்றும் செயப்படுபொருளாய் வர ஒவ்வொரு வாக்கியம் எழுதுக (அல்லது சொல்லுக).

5. சென்றது, கிடந்தது, இருந்தது: இவை ஒன்றன்பால் வினைச்சொற்கள். இவற்றைப் பலவின்பாலாக்கி ஏற்ற எழுவாய் வைத்து வாக்கியமாக்கு.

6. போனார்கள், சொன்னான், வைத்தேன், செய்வீர்கள், போனீர்கள், நினைத்தாய், படிக்கிறோம், அழுதாள் :— இவ் வினைச்சொற்கள் ஒவ்வொன்றும் என்ன இடம்? ஒருமையோ? பன்மையோ? என்று எழுதுக (சொல்லுக)

எ. இவ்வினைச்சொற்களுக்கேற்ற எழுவாய் சேர்த்து, வாக்கியம் ஆக்குக (6-ம் பயிற்சியிற் கொடுக்கப்பட்ட வினைச்சொற்கள்).

## IV Translation :-

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :-

1. I have a small puppy. 2. Its colour is white. 3. I call it Veeran. 4. My little sister likes it very much. 5. It plays with me and my sister. 6. We go out in the evening for a walk. 7. Then Veeran also would go with us. 8. There is a small stream in our village. 9. We bathe in it. 10. Veeran can swim in the stream. 11. After bathing, we return home. 12. Veeran sleeps in my room at night.

# Lesson 14 — பாடம் 14.

## நன்றி செய்தல்



இதற்கு முந்தின பாடத்தில் ஒவ்வொருவரும் பிறர்க்குத் தம்மாலியன்ற நன்றி செய்தல் வேண்டும் என்று படித்தீர்கள். அப்படி நாம் நன்றிசெய்தால் நாமும் நல்ல பயனை அடைவோம் என்றும் படித்தீர்கள். ஒன்றும் இல்லாத் ஒரு வறியவனுக்கு நாம் உதவி செய்கிறோம்; ஒரு குருடனுக்கு, ஒரு முடவனுக்கு, ஒரு முதியோனுக்கு ஒரு நன்றி செய்கிறோம்; முன்பு அறியாத ஒரு வழிப்போக்கனுக்கு ஓர் உதவி

செய்கிறோம்; என வைத்துக்கொள்வோம். இவர்கள் நமக்கு எப்படித் திரும்ப உதவி செய்தல் முடியும்? என்று ஆலோசிக்கலாம் அல்லவா? அப்படி ஆலோசித்துச் சிலவேளை நன்றி செய்யாமல் விடவுங் கூடும் அல்லவா? அப்படி நன்றி செய்யாமல் இருக்கலாமா? இருக்கலாகாது. ஏன்?

இதற்கு ஓர் உதாரணம் இருக்கிறது, பாருங்கள். நாம் மரங்கள் வளர்க்கிறோம். மரத்தின் அடியில் நீர் ஊற்றுகிறோம். அம் மரம் தளராமல் வளர்கிறது; வளர்ந்து பலன் தருகிறது. மரத்தில் எந்த இடத்திலிருந்து பலன் கிடைக்கிறது, நீரை ஊற்றின அடியிலோ? அதற்கு மேலுள்ள நுனியிலோ? அதுபோலவேதான், ஒருவர்க்கு நாம் ஒரு நன்றிசெய்தால் அதன் பலன் நமக்கு வேறு எங்கிருந்தாயினும் தவறாமல் வந்துசேரும் என்று அறிதல் வேண்டும். இந்த உண்மையை ஒரு பாட்டு அழகாகச் சொல்கிறது. அந்தப் பாட்டை இப்போது படிப்போம்.

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

## பயிற்சி

**I விளக்கம் :-**

தெங்கு என்பது தென்னைமரம். தாள் என்பது அடி. தலை என்பது உச்சி, முடி. தென்னைமரம் தாளினால் நீரை

உண்ணுகிறது. அதனல் அது தளராமல் வளர்கிறது; வளர்ந்து தலையால்தான் இளநீரைக் கொடுக்கிறது. அது போல ஒருவர்க்கு நாம் ஒரு நன்றியைச்செய்தால் அவர் எப்போது நமக்குத் திரும்ப நன்றிசெய்வார் என்று ஆலோசிக்கவேண்டியது இல்லை. நமக்குப் பலன் ஈங்கிருந்தாயினுந் திரும்பு வந்தே தீரும். இதுதான் இப் பாட்டின் கருத்து.

1. இச் செய்யுளில் தென்னை மரத்தைப் பற்றிச் சொல்லும் பகுதியை வேருகச் சொல்க.

2. எஞ்சிய பகுதியைச் சொல்க.

3. இந்த இரண்டு பகுதியில் உதாரணமாகச் சொன்னபகுதி எது? நீதியைச் சொன்னபகுதி எது?

4. இச்செய்புளில் நாம் படிக்கும் நீதி என்ன?

5. நாம் செய்யும் நன்றிகளை எல்லாம் அறிந்து பலன் கிடைக்கச் செய்பவர் யார்.

இச்செய்புளை இசையோடு படியுங்கள். (இரண்டு தரம் படித்தபின் புத்தகத்தைப் பாராமல் சொல்ல முயலல் வேண்டும்).

## II எழுத்து :-

1. அந்நன்றி என்பது அ, **நன்றி**, என்னும் இரண்டுசொல் சேர்ந்தது. அதனை அன்னன்றி என்ருவது, அன்நன்றி என்ருவது எழுதுவது பிழை என்று அறிக. இதைப்போலவே பின்வரும் இவ்விரண்டு சொற்களைச் சேர்த்து எழுதுங்கள் :-

அ, நாய்; இ, நாய்; அ, நாடு; எ, நாடு; இ, நரி.

2. இச்செய்யுளில் உள்ள சொற்களைத் தனித்தனியாகப் பிரித்து எழுதுக (மொத்தம் 20 சொற்கள் உண்டு).

3. 'கொல்' என்பது இந்தச் செய்யுளில் "கொல்லுதல்" என்ற பொருளில் வரவில்லை. வினவுதற்கு வரும் ஓ என்பதுபோல வந்தது. "நீ படித்தாய் ஓ?" என்பதை "நீ படித்தாய் கொல்?" என்றுஞ் சொல்லலாம். அப்படி, **கொல்**, என்பதுவர இரண்டு வாக்கியம் எழுதுக. இந்தக் 'கொல்' ஒரு வினைச்சொல் அன்று. இந்தப் பாம்பை அடித்துக் **கொல்**, என்பதில் தான் கொல் ஒரு வினைச்சொல் என்று அறிதல் வேண்டும். இது வினைச்சொல்லாக வர வைத்து மூன்று வாக்கியம் எழுதுக.

4. தென்னையைப் பற்றி 12 வரிகளுக்கு மேற்படாமல் ஒரு பத்தி (a paragraph) எழுதுக.

5. 'பிறர்க்கு நன்றி செய்தல்' என்பதைப்பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக.

6. பொருள்களில் மிக இளமையாய் இருக்கிறவைகளுக்கு (1) பிள்ளை, (2) குட்டி, (3) கன்று, (4) குஞ்சு, முதலிய பெயர்களை வழங்குகிறோம். உதாரணமாக:- அணிற்பிள்ளை, நாய்க்குட்டி, பசுக்கன்று, காகக்குஞ்சு, மாங்கன்று.

இப்படியே பின்வருஞ் சொற்களுக்குப் பொருத்தமான இளமையைக் குறிக்கிற பெயர் சேர்த்து எழுதுக.

எலி, புலி, யானை, குதிரை, பலா, தென்னை, ஆல், கிளி, கீரி, குயில், நரி, பூனை, மயில், வாழை, வேம்பு, மீன், முதலை, எருமை, ஆடு, மான்.

III பாஷை :-

(a) பின்வரும் வாக்கியங்களில் எழுவாய்ப் பெயர் ஆண்பாலானால் பெண்பாலாகவும், பெண்பாலானால் ஆண்பாலாகவும் மாற்றி வாக்கியத்தை ஏற்றபடி திருத்திச் சொல்லுக (அல்லது எழுதுக) :-

1. வண்ணான் நேற்று வந்தான். 2. அவன் தன் மனைவியைக் கூப்பிட்டான். 3. என் வேலைக்காரி ஓர் இடையனை விவாகஞ் செய்தாள். 4. மனைவி தன் கணவனைக் கண்டாள். 5. ஒரு குயவன் பானை செய்கிறான். 6. ஒரு பிச்சைக்காரன் பெரிய பணக்காரன் ஆனான். 7. எங்கள் அரசி ஒரு பெரிய குணவதி. 8. உனது சிநேகிதனுடைய மனைவி நேற்று இறந்தாள். 9. குருடன் ஒருவன் வாசலில் நிற்கிறான். 10. இவள் என் சகோதரிகளுள் மூத்தவள்.

(b) பின்வரும் வாக்கியங்களில் உள்ள ஒருமை எழுவாயைப் பன்மையாகவும், பன்மை எழுவாயை ஒருமையாகவும் மாற்றி வாக்கியத்தை ஏற்றபடி திருத்தி எழுதுக :-

1. நாய் குலைக்கிறது. 2. கண் பார்க்கிறது. 3. நாங்கள் அங்கு போனோம். 4. மாடுகள் பயிரை அழித்தன. 5. இன்று பல காட்சிகள் நான் கண்டேன். 6. நீங்கள் நேற்று என்ன செய்தீர்கள்? 7. இந்தப் பூனை எல்லாப் பாலையுங் குடித்தது. 8. இந்தக் குதிரை மிகச் சிறந்தது. 9. குருவிகள் கூடு கட்டின. 10. ஒரு யானை ஆற்றில் குளிக்கிறது.

(c) பின்வரும் ஆண்பாற் சொற்களுக்குப் பெண்பாலும் பலர் பாலும் எழுதுக (அல்லது சொல்லுக) :-

(1) நல்லான், (2) சிறியான், (3) அண்ணன், (4) உடையான், (5) அரசன், (6) சேவகன், (7) பாட்டன், (8) முதியவன், (9) மகன், (10) மைத்துனன்.

(d) பின்வரும் வாக்கியங்களைப் பாகுபாடு செய்து அட்டவணைப்படுத்தி எழுதுக :-

(பாகுபாடு செய்தல் என்பது எழுவாய் பயனிலை முதலியனவாகப் பிரித்தல்.)

1. இந்த மனிதனை நான் யாழ்ப்பாணத்திற் கண்டேன்.

2. நேற்று இந்தக் கணக்கை எல்லாப் பிள்ளைகளுஞ் செய்தார்கள்.

3. இன்று காலையில் இங்கே மழை பெய்தது.

4. ஓர் அழகிய படம் அந்த அறையில் இருந்தது.

5. ஒரு சிறு வீடு நான் விலைக்கு வாங்கினேன்.

## IV Translation :-

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :—

1. This is a bunch of coconuts. 2. There are eight coconuts in this bunch. 3. There are ten coconut trees in my garden. 4. That is a white lamb. 5. I have a large hen. 6. There are nine chickens in the yard. 7. This is a tiger cub. 8. Those are my wife's books. 9. These are my sister's children. 10. There are very fine dolls in that shop.

---

# Lesson 15 — பாடம் 15.

## நல்லவருந் தீயவரும்

நல்லார் ஒருவற்குச் செய்த உபகாரங்
கல்மேல் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரம்இலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று.

### பயிற்சி

**I விளக்கம் :-**

1-ம் செய்யுள்—நல்லவர்க்குச் செய்த நன்றி கல்லில் எழுதின எழுத்துப்போல இருக்கும்; அழியாது. ஈரம் என்பது அன்பு. மனத்திலே அன்பு இல்லாதவர் தீயவர். தீயவருக்குச் செய்த நன்றி நீரில் எழுதின எழுத்துக்குச் சரியாகும்; அழிந்துபோம். நெஞ்சத்தார்க்கீந்த என்பதில் நெஞ்சத்தார்க்கு, ஈந்த, என்று இரண்டு சொற்கள் சேர்ந்திருக்கின்றன. ஈதல்என்பது கொடுத்தல். ஈந்த = கொடுத்த, அல்லது, செய்த. பின்வரும் வினாக்களுக்கு விடைகூறுக :-

(1) கல்லில் எழுதுவது எப்படி?

(2) கல்லில் எழுதின எழுத்து எவ்வளவு காலத்துக்கு இருக்கும்?

(3) நீரில் எழுதின எழுத்து எவ்வளவு காலத்துக்கு இருக்கும்?

(4) நல்லவருக்குச் செய்தநன்றி எதற்குச் சரி?

(5) செய்தநன்றியை நல்லவர் என்ன செய்யமாட்டார்? பின், எப்போதும் அதை என்ன செய்து இருப்பர்?

(6) தீயவருக்குச் செய்த உபகாரம் எதற்குச் சரி?

(7) அவர் அதை உடனே என்ன செய்துவிடுவர்?

(8) அதை எங்கு வைத்திருக்கமாட்டார்?

இரண்டாவது செய்யுள் மிக இலகுவானது. கருத்து வெளிப்படையாய்த் தெரிகிறது. நலம், உரைப்பது, இணங்கி, என்னும் சொற்களை அறிதல் வேண்டும்.

(9) நல்லவர் அளவில் (அதாவது அவர் விஷயத்தில்) நாம் செய்யத்தக்க செயல்கள் இப்பாட்டில் எத்தனை சொல்லப்பட்டிருக்கின்றன? எண்ணிச் சொல்லுங்கள்.

(10) முதல் மூன்று செயல்களும் கண்ணால், காதால், வாயால், செய்யத்தக்கன. நாலாவதாகிய 'இணங்கி இருப்பது' எதனுற் செய்வது?

(11) நல்லவர் அளவில் நாம் இப்படிச் செய்தல் நல்லது. நமக்கு அதனால் நன்மை உண்டாகும். தீயவர் விஷயத்தில் அப்படிச் செய்தால் என்ன உண்டாகும்?

(12) இச் செய்யுளில் இருக்கும் 'நல்லார்' என்பதை மாற்றி 'தீயார்' என்றும், 'நன்றே' என்பதை மாற்றி 'தீதே' என்றும், 'நலமிக்க' என்பதை மாற்றி 'திருவற்ற' என்றும் வைத்துப் பாட்டைப் படித்துப் பாருங்கள். அப்போது அது ஒரு புதுப்பாட்டு ஆகும்.

(13) மூன்று செய்யுட்களையும் இசையோடு படியுங்கள். முதலாம் பாட்டைப் படிக்கும்போது ஒருவர் 'கீந்த' என்று வேறாகச் சொன்னால் அதனை எப்படித் திருத்திச் சொல்லுவீர்?

**II எழுத்து :-**

(1) புதிதாய் ஆக்கின மூன்றாவது செய்யுளை எழுதுக.

(2) இதன் கருத்தை எழுதுக.

(3) "கண்மேல் எலுத்துப்போர் கானுமே—அள்ளாத", இது ஒருவர் பிழையாய் எழுதியது. நீர் இதனைத் திருத்தி எழுதும்.

(4) நன்று என்னும் சொல்லைப்போல இரண்டாம் மூன்றும் எழுத்துக்கள் ஒரே சத்தமுள்ளனவாக, அன்று, இன்று, ஒன்று, கன்று என்னுஞ் சொற்கள் (எதுகைச் சொற்கள்) உண்டு. அதுபோலப் பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் எதுகையான 3 சொற்கள் எழுதுக.

(a) நல்லார். (b) குணம். (c) தெங்கு.

(5) கல்லில் எழுதியிருந்ததை நீர் எங்காவது கண்டிருந்தால் அதைப்பற்றி ஒரு சிறு வாசகம் எழுதுக.

## III பாஷை :-

(1) முதலாவது செய்யுளில் இரண்டு வாக்கியம் உண்டு; இரண்டாவது செய்யுளில் நாலு வாக்கியம் உண்டு. ஆறு வாக்கியங்களையும் எழுவாய்ப்பகுதி, பயனிலைப் பகுதியாகப் பாகுபாடுபண்ணி எழுதுக (சொல்லுக).

(2) "நல்லார் ஒருவற்கு" என்ற செய்யுளில் உள்ள பெயர்ச் சொற்களைச் சொல்லுக. (ii பெ. சொ. உண்டு.)

(3) நல்லார், கல், என்னும் சொற்கள் எழுவாயாக வர 2 வாக்கியம் எழுதுக. (சொல்க)

(4) ஈரம், உபகாரம், நீர், என்னும் பெயர்கள் செயப்படுபொருளாக வர வைத்து 3 வாக்கியம் எழுதுக.

## IV Translation :-

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :—

1. I met two poor men on the road. 2. They were very hungry. 3. There was no one to help them. 4. They had no friends in this place. 5. I gave them fifty cents each. 6. They thanked me for my help. 7. This is a clever girl. 8. She is the first in her class. 9. Those are her books. 10. They are very clean.

# Lesson 16 — பாடம் 16.

## தோட்டம்



இந்தப் படத்தில் ஒரு பெரிய தோட்டங் காணப்படுகிறது. இரண்டு ஆட்கள் நிலத்தைக் கொத்துகிறார்கள். அவர்கள் ஈரமான நிலத்தைக் கொத்துகிறார்கள். அவர்கள் மண்வெட்டியால் நிலத்தைக் கொத்துகிறார்கள். வட்டமான ஒரு கிணறு இருக்கிறது. அதில் நல்ல நீர் உண்டு. அந்த நல்ல நீரைத் துலாவிற் கட்டிய இறை கூடையினால் தோட்டக்காரர் வெளியே ஏற்றுகிறார்கள். வெளியேற்றிய நீரைப் பயிர்களுக்குப் பாய்ச்சுவார்கள். துலாவைச் சில ஊர்களில்

துலாந்து என்றுஞ் சில ஊர்களில் ஏற்றம் என்றுஞ் சனங்கள் சொல்வார்கள். இரு தென்னை மரங்கள் கிணற்றடியில் நிற்கின்றன. பலவித மான பயிர்கள் செய்யப்பட்டிருக்கின்றன. பயிர்கள் செழிப்பாய் வளர்ந்து இருக்கின்றன. புகையிலைச் செடிகள் ஒரு பக்கத்தில் வளர்கின்றன. பசிய வாழைகள் நிற்கின்றன. பயிரில்லாத நிலத்தைத் தோட்டக்காரர் கொத்துகிறார்கள்.

இவர்கள் விடியுமுன்னே வந்து தங்கள் வேலையைத் தொடங்குவார்கள். காலை ஒன்பது மணிவரையும் அவர்கள் அவ்வேலையைச் செய்வார்கள். அவ்விருவரும் அதன்பின் காலை உணவு உண்பார்கள். வேலை செய்யும் இவ்விருவருந் தகப்பனும் மகனும் ஆவர். இந்தப் பெரிய தோட்டம் இவர்களுக்கு உரியது. இவர்கள் தோட்ட வேலையை ஊக்கமாய்ச் செய்வார்கள். தகப்பன் பயிரிடுந் தொழிலில் நீண்டகால அனுபவம் பெற்றவன். இளைஞனாகிய மகன் பாடசாலையில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றுத் தேறியவன். அவன் தகப்பனோடு சேர்ந்து இப்போது கமவேலை செய்துவருகிறான். அவனது கல்வியறிவு அவனுக்குப் பெருந்துணையாய் இருக்கிறது. அவன் பாடசாலையிற் படித்த நாட்டுச்சீவன சாத்திர அறிவு அவனுக்கு இப்போது நன்கு பயன்படுகிறது. பயிர்ச் செய்கை முறைகளை இருவருங் கலந்து ஆலோசிப்பார்கள்.

திருத்தமான முறைகளைக் கைக்கொண்டு பயிர்த் தொழில் செய்கிறார்கள். அவர்கள் தோட்டம் இப்போது முன்னையிலும் பன்மடங்கு அதிகமான பலனைக் கொடுக்கிறது. அதனால் அவர்களது குடும்பம் சீருஞ் செழிப்புமாக நடந்து வருகிறது.

## பயிற்சி

### I விளக்கம் :-

பாடத்தை வாசித்தபின் அடியில் வரும் வினாக்களுக்கு விடை கூறுக :-

1. தோட்டத்தில் என்ன என்ன பயிர்கள் உண்டு? அவை எப்படி இருக்கின்றன? 2. பயிருக்கு வேண்டும் நீர் எப்படிக் கிடைக்கிறது? 3. தோட்டத்தில் வேலை செய்யும் இருவரும் யார்? ஒவ்வொருவரும் என்ன தன்மையுடையவர்? 4. தோட்டம் இப்போது அதிகமான பலனைக்கொடுப்பது எதனால்? 5. அதனால் வந்த பயன் என்ன?

### II எழுத்து :-

(1) கிணற்றிலிருந்து நீரை இறைக்கும் முறைகளைப் பற்றி நீங்கள் அறிந்ததை எழுதுக.

(2) துலாவைப் பற்றிச் சில விபரம் எழுதுக (துலாவைக்கண்டிருந்தால்).

(3) வாழையைப் பற்றி 10 வாக்கியங்கள் வரையில் எழுதுக.

(4) தோட்டத்தில் நாட்டிப் பயிரிடுவதற்காகக் குறித்த சில பயிர் விதைகள் அனுப்பும்படி கிருஷிக உத்தியோகத்தருக்கு ஒரு கடிதம் எழுதுக.

(5) ஒரு தோட்டக்காரனது நாளாந்த வேலையைப் பற்றி ஒரு பத்தி எழுதுக.

(6) பின்வருஞ் சொற்களைத் திருத்திப் பிழையில்லாமல் எழுதுக :-

நிளத்தை, அவர்கல், மம்பெட்டி, கிணரு, பயிற்கலுக்கு, பாச்சுவார்கள், போயிலே, வாளைமரம், வேளை செய்வார்கல், வாலையிளை.

(7) ஓட்டத்திலே, கூட்டத்திலே, பாட்டத்திலே :- இங்கு கொடுக்கப்பட்டிருக்குஞ் சொற்களுள் பொருத்தமான ஒரு சொல்லைத் தெரிந்து அடியிற் கீறிட்ட இடத்தில் வைத்து நிரப்பி எழுதுக :-

தோட்டத்திலே தொகையாய் வளர்ந்தமரக்
________________நின்ற குலைவாழை—ஒன்று
________________விழக் கண்டவென் நாய் பயந்(து)
________________சென்றொளித்ததுவே.

## III பாஷை :-

தோட்டம், நிலம், கிணறு, என்பன பொருட்களின் பெயர்கள். இவை பெயர்ச் சொற்களாம். **பெரிய** தோட்டம் என்பதினால், தோட்டம் என்ன விதமான தோட்டம் என்று அறிகிறோம். **பெரிய** என்னுஞ் சொல் **தோட்டம்** என்னுஞ் சொல்லை **அடுத்து** நிற்பதால் இதனை அறிகிறோம். அப்படியே, **ஈரமான** நிலம் என்பதிலும் என்னவிதமான நிலம் என்றும், **வட்டமான** கிணறு என்பதில் என்னவிதமான கிணறு என்றும் அறிகிறோம். **இப்படத்தில்** காணப்படுகிறது என்பதில், எங்கு (எவ்விடத்தில்) காணப்படுகிறது என்று காணப்படுகிற இடத்தை 'இப்படத்தில்' என்பது குறிக்கிறது. அது

"காணப்படுகிறது" என்ற பயனிலை வினைச்சொல்லை அடுத்தது. இவற்றை எல்லாம் அடியில் வரும் அட்டவணையில் பார்த்து ஆராய்வோம்.

## 5 வாக்கியங்கள்

| எழுவாய்ப் பகுதி | பயனிலைப் பகுதி |
|---|---|
| 1. ஒருபெரியதோட்டம் | இப்படத்தில் காணப்படுகிறது |
| 2. இரண்டு ஆட்கள் | நிலத்தைக் கொத்துகிறார்கள் |
| 3. அவர்கள் | ஈரமானநிலத்தைக்கொத்துகிறார்கள் |
| 4. அவர்கள் | நிலத்தைமண்வெட்டியால் கொத்து[கிறார்கள் |
| 5. வட்டமானஒருகிணறு | இருக்கிறது. |

(1) முதல் வாக்கியத்தில் எழுவாய்ப் பகுதியில் மூன்று சொற்கள் உண்டு. இவற்றுள் **தோட்டம்** என்பது எழுவாய்ப் பெயர்ச்சொல். மற்ற **ஒரு பெரிய**, என்னும் இரண்டும் அந்த எழுவாய்ச்சொல்லை அடுத்து நிற்குஞ் சொற்கள். பயனிலைப்பகுதியில் **காணப்படுகிறது** என்பது பயனிலை வினைச்சொல். **இப் படத்தில்** என்பது பயனிலையை அடுத்து நிற்பது.

(2) இரண்டாம் வாக்கியத்தில், **இரண்டு** என்ற சொல் **ஆட்கள்** என்ற எழுவாயை அடுத்து நிற்கிறது. அதனால் எத்தனை ஆட்கள் என்று அறிகிறோம். பயனிலைப் பகுதியில் **கொத்துகிறார்கள்** என்ற பயனிலையும், **நிலத்தை** என்ற செயப்படுபொருளும் இருக்கின்றன.

(3) மூன்றாம் வாக்கியத்தில் எழுவாயை அடுத்து நிற்குஞ் சொல் ஒன்றுமில்லை. **ஈரமான** என்பது செயப்படுபொருளை அடுத்து நிற்கிறது.

(4) நாலாம் வாக்கியத்தில் "மண்வெட்டியால் கொத்துகிறார்கள்" என **மண்வெட்டியால்** என்பது பயனிலையை அடுத்து நிற்கிறது. **எதனால்** கொத்துகிறார்கள் என்பது இச் சொல்லால் அறியப்படுகிறது.

(5) ஐந்தாம் வாக்கியத்தில், **வட்டமான; ஒரு,** என்னுஞ் சொற்கள் எழுவாயை அடுத்து நிற்கின்றன; பயனிலையை அடுத்து ஒரு சொல்லும் இல்லை.

இவ்வினாக்களுக்கு விடை அறிக:- (1) எழுவாய் தனிச் சொல்லாய் வந்தது எந்த வாக்கியங்களில்? (2) வேறு சொற்களும் அடுத்து வந்தது எந்த வாக்கியங்களில்? (3) பயனிலை தனிச் சொல்லாய் வந்தது எந்த வாக்கியத்தில்? (4) வேறு சொற்கள் சேர்ந்து வந்தது எந்த வாக்கியங்களில்? (5) செயப்படுபொருள் இல்லாத வாக்கியங்கள் எவை? (6) செயப்படுபொருள் தனிச் சொல்லாய் நிற்பது எந்த வாக்கியத்தில்? (7) செயப்படுபொருள் வேறு சொல் அடுத்துவர வந்தது எந்த வாக்கியத்தில்?

இவ்வுதாரண வாக்கியங்களை ஆராய்ந்து நாம் என்ன அறிகிறோம்? வாக்கியங்களில், எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவை **தனிச்சொல்லாயும்** வரலாம், **வேறு சொற்கள் அடுத்து வரவும்** பெறலாம் என்று அறிகிறோம். அடுத்துவருஞ் சொல்லுக்கு (அல்லது சொற்களுக்கு) **அடைச்சொல்** என்று பெயர். அடைச்சொல், அடைமொழி, விசேடணம் என்பன ஒரு பொருட் சொற்கள் என்று அறிதல் வேண்டும்.

(a) பின்வரும் வாக்கியங்களை எழுவாய்க்கு அடைமொழி சேர்த்து விரித்து எழுதுக:-

(1) மனிதன் வந்தான். (2) கோழி கூவும். (3) மாடு ஓடுகிறது. (4) நாய் வருகிறது. (5) இலைகள் வீழ்ந்தன. (6) பூனை பாலைக் குடித்தது. (7) சீலை கிழிந்தது. (8) மகன் படிக்கிறான்.

(b) இவ் வாக்கியங்களைப் பயனிலைக்கு அடைமொழி சேர்த்து விரித்து எழுதுக:-

(1) மீன் வசிக்கும். (2) வேலைக்காரன் போனான். (3) ஒரு பையன் ஓடினான். (4) மாடு நிற்கிறது. (5) என் மகள் போனாள். (6) உழவர் நெல் விதைப்பார்கள். (7) ஒரு தேங்காய் விழுந்தது. (8) அவன் தன் புத்தகங்களை வைத்தான்.

(c) இவ்வாக்கியங்களைச் செயப்படுபொருளுக்கு அடைமொழி சேர்த்து விரித்து எழுதுக:-

(1) அவள் பாட்டுப் பாடினாள். (2) கூலிக்காரர் மரத்தை வெட்டினார்கள். (3) நான் பிள்ளைகளை நேசிக்கிறேன். (4) உபாத்தியாயர் மாணாக்கரை விரும்புகிறார். (5) உழவன் வயலை உழுகிறான். (6) சனங்கள் அரசனை வெறுப்பார்கள். (7) அவள் துணியைத் தைக்கிறாள். (8) என் தம்பி வீடு கட்டினான்.

(d) இப்பாடத்து முதலாம் பத்தியில் "இரு தென்னைமரங்கள்" என்ற வாக்கியந் தொடக்கமாக உள்ள ஆறு வாக்கியங்களிலும் வந்திருக்கும் அடைமொழிகளைத் தெரிந்து [(1) எ. அடை., (2) ப. அடை., (3) செ. அடை., என] மூன்று நிரையாக எழுதுக.

(e) வாக்கியப் பாகுபாடு:-

வேலை செய்த அவ்விருவரும் அதன்பின் காலை உணவு உண்பார்கள் என்னும் வாக்கியத்தில்,

(1) எழுவாய்ப் பகுதி :— வேலை செய்த அ இருவர் (உம்).

(2) பயனிலைப் பகுதி :— அதன்பின் காலை உணவு உண்பார்கள்.

(1) எழுவாய்ப் பகுதியில், இருவர் (உம்) என்னும் எழுவாயும், வேலை செய்த, அ, என்னும் 2 அடைமொழியும் உண்டு. (2) பயனிலைப் பகுதியில், உண்பார்கள் என்னும் பயனிலையும், அதன்பின் என்னும் பயனிலை அடைமொழியும், உணவு என்னுஞ் செயப்படுபொருளும் காலை என்னும் செய. பொ. அடைமொழியும் உண்டு. இதனைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்திக் காட்டலாம் :-

## வாக்கியம்

| எழுவாய்ப்பகுதி | | பயனிலைப் பகுதி | | | |
|---|---|---|---|---|---|
| எ. அடை | எழுவாய் | செ. அ. | செ. பொ. | ப அ. | பயனிலை |
| வேலை செய்த அ | இருவர் (உம்) | காலை | உணவு | அதன்பின் | உண்பார்கள் |

(f) இப்பாடத்தில் இரண்டாம் பத்தியில் " இளைஞனாகிய மகன் " என்று தொடங்கும் வாக்கியம் முதலாகப் பாடம் முடியவுள்ள வாக்கியங்களை மேலே காட்டியவாறு பாகுபாடு செய்க.

**IV Translation :-**

The grass in the field என்பதைத் தமிழில், வயலில் உள்ள புல், என்று சொல்லுவோம். அப்படியே;

The grass in the field is green என்பதை, வயலில் உள்ள புல் பச்சையாய் இருக்கிறது, என்று சொல்லலாம். The grass is in the field என்பதை, புல்லு வயலில் இருக்கிறது, என்னல் வேண்டும். He went to a shop என்பதை, அவன் ஒரு கடைக்குப் போனுன், என்று மாற்றிச் சொல்லுவோம். ஆங்கிலத்தில் இருக்கிறபடி, அவன் போனுன் ஒரு கடைக்கு, என்று சொல்வது தமிழ் முறை அன்று.

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :—

1. This man can walk fast. 2. He put the book on the table. 3. The leaves on that branch are green. 4. There are many branches in this tree. 5. The water in this well is good. 6. The water is very deep in this well. 7. Two cows ate all the plants in my garden. 8. The plants in this garden are all green. 9. My dcg is playing in the garden. 10. Good children do their work well. 11. He goes in the rain without an umbrella. 12. The people in this village are all good farmers.

# Lesson 17 — பாடம் 17.

## மழை பெய்தல்



அடியில் வரும் பாட்டு மழை பெய்வதைச் சொல்லும் பாட்டு ஆகும். மழை பெய்யும்போது நிகழுங் காட்சிகளை நாம் நேரிற் கண்ணுற் காண முடியும். மழை பெய்யாமல் இருக்கும்போது மழைக் காட்சியைக் கண்ணுற் காண முடியுமா? முடியாது. எனினும் இந்தப் பாட்டை மழை பெய்யாத நேரத்திற் படித்தாலும், அப்போது மழை பெய்வது போன்ற ஒரு குறிப்பை (எண்ணத்தை) இது நம் மனத்தில் தோன்றச்

செய்யும். இது அவ்வளவு சிறப்பான பாட்டு. இப் பாட்டில் வரும் மழைக் காட்சிகளைப் பார்ப் போம். காட்டுப் பக்கமான ஓர் இடத்தில் மழை பெய்கிறது. சோ! என்று பெரிய இரைச்சலோடு பெரும் மழை பெய்கிறது. அப்போது மயில்கள் களிப்போடு ஆடுகின்றனவாம். குயில்கள் கூவா மல் சோர்ந்து இருக்கின்றனவாம். குரங்குகள் கூட்டங் கூட்டமாய் ஓடுகின்றனவாம். கரடி, கலை மான், புலி, சிங்கம், மரை என்னும் இவைகள் மலைப்பக்கத்திலுள்ள குகைகளிலே பதுங்கி, ஒதுங்கி நடுங்கிக்கொண்டு நிற்கின்றனவாம். அருகிலே பெண் மான் பயந்து பதுங்குகிறதாம். மலைப் பாறைகள் தகர்ந்து விழுகின்றன. மலைப் பக்கத்தில் நிற்கும் பெரிய மூங்கில்களிலிருந்து முத்துச் சொரிகிறது. மரத்தில் இருந்து பூக்கள் சொரிகின்றன. அகில் முதலிய பல மரங்கள் முரிந்து விழுகின்றன. இப்படியாக, மழை சோ என்று பொழிந்தது; என இப் பாட்டுச் சொல் கின்றது. பாட்டின் ஓசையும் இந் நிகழ்ச்சிகளது ஆரவாரத்தைக் காட்டுவதாய் அழகாய் இருக் கிறது. பாட்டில் வருஞ் சில சொற்களை முதலில் அறிந்துகொள்ளுதல் நன்று. கவி இனம் (குரங் குக் கூட்டம்), புல்வாய் (ஆண்மான், கலைமான்), ஆளி (சிங்கம்), சாரல் (மலைப்பக்கம்), முழை (குகை), கிடுகிட (நடுங்க), உழை (பெண் மான்), தடம் திகிரி (பெரிய மூங்கில்), அகில் (ஒரு வகை வாசனை மரம்), மாரி (மழை). பாட்டை இப்போது படித்துப் பார்ப்போம்.

கருமயில் ஆடக் குயில்இனம் வாடக்
கவிஇனம் ஓடக் கரடி புல்வாய்
பொருபுலி ஆளித் திரள்மரை சாரற்
புறமுழை பதறிக் கிடுகிடவே,
அருகுழை தவழக் குலமலை தகரத்
தடதிகிரியின்முத்(து) உதிர்தரவே
சொரிமலர் அகில்அப் பலமரம் முறியச்
சோஎன மாரி பொழிந்ததுவே.

காட்டுப் பக்கத்தில் பெரிய மழை பெய்யும் போது தோன்றுங் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் எடுத்துச் சொல்வது இப் பாட்டு. இதன் ஓசையும் நடையும் எவ்வளவு பொருத்தமாய் இருக்கின்றன! சித்திரம் வரைபவர் ஒரு காட்சியை வர்ணங்களால் சித்திரித்து ஒரு படமாகக் காட்டுவார். நாம் அதனைக் கண்ணுற் பார்த்து மகிழ்வோம். இப் பாடத்திலுள்ள படத்தைப் பாருங்கள். புலவனும் அப்படியே அந்தக் காட்சியைச் சொற்களாலும் ஓசையாலும் படம் பிடித்துக் காட்டுகிறான். புலவனுடைய பாடல் ஆகிய படத்தை நாம் மனத்தால் உணர்ந்துங் காதால் கேட்டும் மகிழ்கிறோம்.

இச் செய்யுளை இயற்றியவர் யாழ்ப் பாணத்து நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவர் என்பவர். இவர் யாழ்ப்பாணத்தில் நல்லூரிற் பிறந்தவர். இற்றைக்கு ஏறக்குறைய 150 வருஷங்களுக்கு முன் இருந்தவர். சிறுவனாக

இருக்கும்போதே இவர் செய்யுள் இயற்ற வல்லவராய் இருந்தாராம். இவருடைய பாடல்கள் மிக்க ஓசை நயம் உடையன.

## பயிற்சி

### I விளக்கம் :-

பின்வரும் வினாக்களுக்கு ஆராய்ந்து விடை கூறுக :-

1. மயில்கள் ஏன் ஆடின? குயில்கள் ஏன் கூவவில்லை?

2. மிருகங்கள் ஏன் முழைக்குள்ளே போய்ப் பதுங்கின?

3. இப் பாட்டில் மழை பெய்யுஞ் சத்தத்தைக் குறிக்கும் சொல் எது?

4. புலவனது பாடலாகிய படத்தை நாம் எந்தக் கண்ணால் காணலாம்?

### II எழுத்து :-

(a) 1. இப் பாட்டிற் சொல்லிய காட்சிகளை எழுதுக.

2. உங்கள் ஊரில் பெரும் மழை பெய்ததைப்பற்றி விபரமாய் எழுதுக.

3. இந்தச் செய்யுளைப் படித்து இன்புறும்படி அதனைப்பற்றி உமது சிநேகிதர் ஒருவர்க்கு ஒரு கடிதம் எழுதுக.

4. சின்னத்தம்பிப் புலவரைப் பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக. அவர் செய்த நூல்கள் எவை என்று அறிவிக்கும்படி வேண்டி உமது உபாத்தியாயருக்கு ஒரு கடிதம் எழுதுக.

(b) "மயில் ஆட" என்பதை 'மயில் ஆடினது' என ஒரு வாக்கியமாக மாற்றி எழுதலாம். அப்படியே பின்வருபவைகளையும் வாக்கியமாக எழுதுக:-

(1) குயில் வாட, (2) கவிகள் ஓட, (3) மலை தகர, (4) முத்து உதிர, (5) பல மரங்கள் முரிய.

(c) அடைப்புக்குள் இருக்கும் இரண்டு எழுத்துக்களுள் பொருத்தமான ஒன்றைக் கீறிட்ட இடத்தில் வைத்து நிரப்பிப் பின்வரும் சொற்களை எழுதுக. இவை இப் பாடத்தில் வந்த சொற்கள்:-

(1) மயி—, குயி—, பு—வாய் (ல், ள்); (2) பு—, ஆ—, (லி, ளி); (3) க—டி, ம—ம் (ர, ற); (4) மு—, உ—, ம— (லை, ழை); (5) சொ—, மு—ய, மூா— (ரி, றி); (6) ம—ர், ப—, கு—ம் (ல, ள); பொ—ந் தது (லி, ழி).

## III பாஷை:-

(a) காலம்:- மழை பெய்கிறது, என்று சொன்னால் அப்படிச் சொல்லும் நேரத்தில் மழை பெய்தல் நிகழுகிறது என்று அறிவோம். நேற்று மழை பெய்ததைச் சொல்ல விரும்பினால், மழை பெய்தது, என்று சொல்வோம். இந்த நேரத்தில் பெய்யவில்லை என்றும் மழை பெய்த நேரம் (காலம்) சென்றுவிட்டது, அல்லது, கடந்துவிட்டது, அல்லது, இறந்துவிட்டது என்றும் அறிவோம். இனி, இந்த நேரத்தில் பெய்யாமல் இனிமேல் மழை பெய்வதைச் சொல்ல விரும்பினால், மழை பெய்யும் என்று சொல்லுவோம். அப்படியே, ஒரு

பையன் படித்துக்கொண்டிருக்கிற நேரத்தில், பையன் படிக்கிறான், என்று சொல்கிறோம். படித்தல் செய்து முடிந்து அந்த நேரம் கடந்த பின்பு அந்தச் செயலைச் சொல்ல விரும்பினால், பையன் படித்தான், என்று சொல்கிறோம். இனிமேல் வருங்காலத்தில் அவன் படிப்பதைச் சொல்ல விரும்பினால், பையன் படிப்பான், என்று சொல்கிறோம்.

(1) பெய்தது, படித்தான், என்னும்போது செய்கை முடிந்து அந்தக் காலம் கடந்து விட்டது (அல்லது, இறந்துவிட்டது.)

(2) பெய்கிறது, படிக்கிறன், என்னும்போது செய்கை தொடங்கி முடிவுபெறாமல் அதன் காலம் நிகழ்கிறது.

(3) பெய்யும், படிப்பான், என்னும்போது செய்கை இப்போது நடவாமல் இனி வருங்காலத்தில் தொடங்கும். இந்த மூன்றுவகையையும் ஆராய்ந்ததனால் நாம் என்ன அறிந்துகொள்ளுகிறோம் எனில்; (1) ஒரு செய்கை செய்து முடிந்த காலம், (2) அது தொடங்கி நிகழுகிற காலம், (3) செய்கை இனிமேல் தொடங்கவரும் காலம் என மூன்று காலங்கள் உண்டு என்று அறிகிறோம். அந்த மூன்றுகாலமும் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று பெயர் பெறும். இறந்தகாலத்தை செல்காலம், கடந்தகாலம் என்றுஞ் சொல்லலாம். எதிர் காலத்தை வருங்காலம் என்றுஞ் சொல்லலாம்.

செய்கையைக் குறிக்குஞ் சொல் வினைச்சொல் என 5-ம் பாடத்தில் படித்தோம். ஆகையால் செய்கைக்குரிய

காலங்களைக் காட்டுவது வினைச்சொல்லேயாம். பொருட்களின் பெயரைமாத்திரங் குறிக்கும் பெயர்ச்சொல் காலங்காட்டமாட்டாது.

(1) வினைச்சொல் காலங்காட்டும்.

(2) பெயர்ச்சொல்லுக்குக் காலம் இல்லை. இதனை நன்றாய் நினைவில் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

(b) இடம்: 12-ம் பாடத்தில், பேசும் ஒருவர் தன்னைக் குறித்துச் சொல்லும் பெயர்கள் (யான், யாம்), முன்னிலையில் உள்ளவரைக் குறித்துச் சொல்லும் பெயர்கள் ( நீ, நீர், நீங்கள் ) என்பவற்றைப்பற்றிப் படித்தோம். தன்னைக் குறித்துச் சொல்வதாகிய தன்மை இடம் என்றும், முன்னிற்பவரைக் குறித்துச் சொல்வதாகிய முன்னிலை இடம் என்றும், இந்த இரண்டும் அல்லாமல் பிறரைக் குறித்துச் சொல்வதாகிய படர்க்கை இடம் என்றும் மூன்று இடம் உண்டு. அவற்றுக்குரிய பெயர்ச்சொல்லும் தன்மைப்பெயர், முன்னிலைப்பெயர், படர்க்கைப்பெயர் என்று வழங்கும். வினைச்சொற்களும் தன்மைவினை, முன்னிலைவினை, படர்க்கைவினை என்று வழங்கும் என்று அறிக.

தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்று இடங்களிலும், இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் மூன்று காலங்களிலும், இரு என்கிற வினைச்சொல் வருவதை அடியிற் காணும் அட்டவணையிற் பார்த்து அறியலாம்.

இடமும் காலமும். இரு

| எழுவாய்ப் பெயர் | பயனிலை வினைச்சொல் | | |
|---|---|---|---|
| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| தன்மைஇடம் | | | |
| ஒருமை—நான் | இருந்தேன் | இருக்கிறேன் | இருப்பேன் |
| பன்மை – யாம் | இருந்தோம் | இருக்கிறோம் | இருப்போம் |
| முன்னிலை இடம் | | | |
| ஒ — நீ | இருந்தாய் | இருக்கிறாய் | இருப்பாய் |
| ப. — நீர் | இருந்தீர் | இருக்கிறீர் | இருப்பீர் |
| படர்க்கை இடம் | | | |
| ஆ — அவன் | இருந்தான் | இருக்கிறான் | இருப்பான் |
| பெ — அவள் | இருந்தாள் | இருக்கிறாள் | இருப்பாள் |
| பலர் — அவர் | இருந்தார் | இருக்கிறார் | இருப்பார் |
| ஒன். — அது | இருந்தது | இருக்கிறது | இருக்கும் |
| பல — அவை | இருந்தன | இருக்கின்றன | இருக்கும் |

1. அடியில் வரும் வாக்கியங்களை ஏற்ற வினைச் சொல் வைத்து முடிக்குக :-

(1) நேற்று நான் ஒரு நாயை______. (2) நீங்கள் இப்போது என்ன______? (3) வேலைக்காரன் நேற்று இங்கே______. (4) அவர்கள் இப்போது வயலில்______. (5) என் பெற்றார் நாளைக்கு இங்கே______. (6) முற் காலத்தில் பல தமிழ் அரசர்______. (7) இனி நீ எப் போது______. (8) கல்லைக் கண்டால் காகங்கள்______. (9) அந்த நாய் ஆட்களைக் கண்டால்______. (10) இந்த மரத்தைப் போனவருடத்தில் நான்______.

2. பின்வரும் இறந்தகால வினைச்சொற்களை நிகழ் காலத்தில் சொல்க :-

(1) போனன். (2) வந்தார். (3) பறந்தது. (4) விழுந்தது. (5) ஓடிற்று. (6) இறந்தன. (7) முடித்தோம். (8) வந்தீர்கள். (9) பாடினள். (10) கண்டனன்.

3. பின்வரும் நிகழ்கால வினைச்சொற்களை இறந்தகாலத்திலும் எதிர்காலத்திலுஞ் சொல்க :-

(1) உண்கிறேன். (2) சிரிக்கிறாய். (3) வருகின்றன. (4) மேய்கிறது. (5) செய்கிறார்கள். (6) மடிக்கிறோம். (7) விடுகிறாள். (8) கூவுகிறது. (9) வைக்கிறான். (10) செல்கின்றீர்கள்.

4. இரண்டாவது பயிற்சியிற் சொல்லிய 'போனன்' முதலிய வினைச்சொற்களுக்கு ஏற்ற எழுவாயும் எழுவாய் அடைமொழியும் பயனிலை அடைமொழியுஞ் சேர்த்து வாக்கியமாக விரித்து எழுதுக. (7-ம் 8-ம் வாக்கியங்களில் எழு-அடை. வேண்டியதில்லை).

5. மூன்றும் பயிற்சியில் சொல்லிய 'உண்கிறேன்' முதலியவற்றிற்கு ஏற்ற எழுவாயும் எழு-அடையுஞ் சேர்த்து வாக்கியமாக விரித்து எழுதுக.

6. உமது வாசினைப் புத்தகத்தில் இன்று படித்த பாடத்தில் வந்த வினைச்சொற்கள் பத்து எழுதி அவற்றுள் ஒவ்வொன்றும் என்ன காலம் என்று எழுதுக.

**IV Translation :-**

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :—

1. Everywhere there are motor cars now. 2. They are seen in all towns. 3. They are seen even in many villages. 4. Many years ago there were no motor cars. 5. A motor car will run for a long time without stopping. 6. Horses cannot run for a long time without stopping. 7. In every motor car there is an engine. 8. The driver starts the engine. 9. Then the car moves. 10. I shall buy a motor car next year. 11. You will not find me here tomorrow. 12. Many people will go to Colombo during the holidays.

# Lesson 18 — பாடம் 18.

## தமிழ்நாட்டு மூவேந்தர்

ஆறாம் பாடத்தில் தென் இந்தியா தமிழ்த் தேசம் என்று படித்தோம். இலங்கையும் தென் இந்தியாவுக்கு அயலில் உள்ள ஒரு தீவு என்றும் படித்தோம். தமிழ் மொழியைப் பேசும் மக்கள் வசிக்கும் நாடுகள் எல்லாஞ்சேர்ந்து **தமிழகம்** எனப் படும். இலங்கையுந் தமிழகத்திற்சேர்ந்த ஒருநாடு. அது ஈழநாடு, அல்லது, ஈழமண்டலம் எனப் படும். அங்ஙனமே, தென் இந்தியாவிலுள்ள சோழ நாடு, பாண்டிநாடு, சேரநாடு, தொண்டைநாடு என்பனவும் தமிழகத்தில் அடங்கிய நாடுகளாம். முற்காலத்தில் இத் தமிழ்நாடுகளை மூன்று பெரிய அரசர் ஆண்டுவந்தனர். அவர்கள் சோழ அரசர், பாண்டிய அரசர், சேரஅரசர் என்பவர்கள். ஈழநாட்டைச் சிலகாலங்களில் தமிழ் அரசர்களுஞ் சிலகாலங்களிற் சிங்கள அரசர்களும் ஆண்டனர். தென்னிந்தியாவில் எப்போதுந் தமிழ் அரசர்களே ஆண்டுவந்தார்கள். அதனாலேதான் சேரர், சோழர், பாண்டியர் ஆகிய மூன்று அரசர்களையுந் தமிழ்நாட்டு மூவேந்தர் என்று சிறப்பித்துச் சொல்லுகிறோம்.

இத் தமிழ் அரசர்கள் தங்கள் குடிசனங்களை அன்போடு பாதுகாத்து வந்தனர். இவர்

களுடைய ஆட்சிக் காலத்தில் தேசம் பலவழி யிலும் முன்னேற்றம் அடைந்தது. தேச மக்கள் கல்வி செல்வம் வாணிகம். வீரம் என்பவற்றில் சிறந்து விளங்கினர். இந்த அரசர் காலத்தில் கட்டப்பட்ட பெரிய கோயில்கள், குளங்கள், கட் டடங்களை இன்னும் நாங் காணலாம். இவர்கள் கல்வி வளர்ச்சியில் மிக்க ஊக்கம் உடையவராக இருந்தனர். இவ்வரசர்களுள்ளே பலர் தாங்களே பெரிய புலவர்களாக இருந்தனர். தமிழ்ப் புல வர்களை ஆதரித்து வந்தார்கள். இவர்கள் காலத் தில் தமிழ்மொழி மிகச் சிறப்புற்றிருந்தது. தமி ழில் அரிய பெரிய நூல்களைச் செய்வித்தார்கள். திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரியபுராணம், நன்னூல் முதலிய நூல்கள் அக் காலத்திற் செய்யப்பட்டன. சங்கீதம், நாட்டியம், சிற்பம் முதலிய கலைகள் வளர்ச்சி உற்றன.

பழைய தமிழ் அரசர்கள் வீரத்திலுஞ் சிறந்து விளங்கினர். அக்காலத்தில் தமிழர் உடல்வலியும் அஞ்சாநெஞ்சும் படைத்த பெரிய வீரராயிருந்தனர். எதிரிகள் தங்கள் நாட்டுட் புகுந்து அழிவுசெய்ய ஒட்டாமல் அவர்களைத் தோற்று ஓடச் செய்தனர். அதுவுமன்றி வெளி நாடுகளிலுஞ் சென்று போர்செய்து வென்று தங்கள் வீரத்தைக் காட்டினர்கள். இந்தியாவின் வடக்கு எல்லையாகிய இமயமலைவரையுந் தமிழ ரது வீரம் பரவி இருந்தது. கிழக்கே பர்மா

தேசம், சாவுகத்தீவு முதலிய தேசங்களையுந் தமிழர்கள் வென்று அங்கெல்லாந் தங்கள் கொடியை நாட்டினார்கள். சோழ அரசர்களும் பாண்டிய அரசர்களும் யாழ்ப்பாணத் தமிழ் அரசர்களும் பலமுறைகளில் இலங்கைச் சிங்கள அரசர்களைப் போரில் வென்று இலங்கையை ஆட்சி செய்தார்கள். தமிழ் அரசர் காலத்தில் தமிழ்மக்கள் நாகரிகம், கல்வி, வீரம் என்பவற்றிற் சிறந்து விளங்கினார்கள் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

## பயிற்சி

I விளக்கம் :-

சொற்கள்—தமிழகம், ஊக்கம் (உற்சாகம், முயற்சி), நாட்டியம் (கூத்து), சிற்பம் (சித்திரம், வீடுகட்டுதல் முதலிய தொழில்வகை), கலைகள் (கல்விவகைகள்), நாகரிகம் (திருத்தம், செப்பம்): இச்சொற்களை அறிதல் வேண்டும்.

பாடத்தை வாசித்தபின் அடியில் வரும் வினாக்களுக்கு விடை கூறுக :-

1. தமிழகம் என்பது யாது?
2. தமிழகத்தில் அடங்கிய சில நாடுகள் கூறு.
3. தமிழ்நாட்டு மூவேந்தர் யாவர்?
4. தமிழ் அரசர்கள் எவ்வாறு தமிழை வளர்த்தார்கள்?
5. தமிழ் அரசர் ஆட்சியை நினைவூட்டும் அடையாளங்கள் இலங்கையில் எங்கு என்ன உண்டு? (விசாரித்து அறிந்து சொல்க).

6. இலங்கையில் தமிழ்அரசர் எங்கிருந்து ஆண்டனர்?

7. பழைய தமிழர்களுடைய வீரச்செயல்கள் சில கூறுக.

## II எழுத்து :-

(a) 1. விளக்க வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

2. சிலப்பதிகாரத்தில் யாருடைய கதை சொல்லப் படுகிறது? அதில் எந்த எந்த அரசர்களுடைய பெருமை சொல்லப்பட்டிருக்கிறது? என்று விசாரித்து அறிந்த பின், சிலப்பதிகாரத்தைப்பற்றி 12 வரிக்கு மேற்படாமல் ஒரு வாசகம் எழுதுக.

3. இரண்டாம் பத்தியிற் சொல்லப்பட்ட "திருக் குறள்" முதலிய ஐந்து நூல்களையும் இயற்றியவர் யார் யார் என்று விசாரித்து அறிந்து எழுதுக.

4. தமிழர் வீரத்தைப்பற்றி 5 வாக்கியங்கள் எழுதுக.

5. நீர் கண்ட பழையகாலத்துக் குளம், ஒரு பழைய காலத்துக் கோயில், ஒரு புராதன கட்டடம் என்பவற்றுள் ஏதும் ஒன்றைப்பற்றி விபரமாகச் சொல்லி ஒரு கடிதம் (உமக்குப் பிரியமான ஒருவருக்கு) எழுதுக.

(b) 1. விளக்கப் பகுதியில் முதலிற் சொல்லி யிருக்கும் ஆறு சொற்களையும் வழங்கி (ஒரு சொல்லுக்கு ஒன்றாக) ஆறு வாக்கியம் இயற்றுக.

2. நாடு, தேசம், மண்டலம், என்பன ஒரு பொருட் சொற்கள். அதுபோல, ஊர் என்பதைக் குறிக்கிற 5 பெயர்கள் எழுது; அரசன் என்பதைக் குறிக்கிற ஐந்து

பெயர்கள் எழுது. அவை சிலவற்றின் முதல் எழுத்துக்கள் மாத்திரம் கீழே காட்டப்பட்டிருக்கின்றன:—

ஊர்:- பட்— — —, பு— —, பு—, ந— —, ந— — —, ப—, கி— — —.

அரசன்: ம— — —, வே— — —, காவ— —, இ— —, புர— — —, கொ— — — —.

3. இன்றே, சுற்றம், விருந்தும், முகத்தில், நன்றே, வேருடன்:- இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களுள் பொருத்தமான ஒன்றைத் தெரிந்து அடியில் கீறிட்ட இடங்களில் வைத்து நிரப்பி எழுதுக:-

(1) அகத்தின் அழகு ________ தெரியும்.

(2) ஒன்றே செய்யவும் வேண்டும் ஒன்றும்
________ செய்யவும் வேண்டும் இன்றும்
________ செய்யவும் வேண்டும் நன்றும்.

(3) ஊருடன் பகைக்கின் ________ கெடும்.

(4) குற்றம் பார்க்கிற் ________ இல்லை.

(5) மருந்தும் ________ மூன்று நாள்.

## III பாஷை:-

1. இப்பாடத்து வாக்கியங்களில் வந்த (1) ஆண்டு வந்தனர், (2) ஆண்டனர், (3) அடைந்தது, (4) சொல்லுகிறோம், (5) காட்டினார்கள், என்னும் பயனிலைகளுக்குரிய எழுவாய்களை அது அதுக்கு நேரே எழுதுக.

2. இவ் வினைச்சொற்கள் ஒவ்வொன்றும் என்ன காலம்? ஒவ்வொன்றையும் மற்ற இரு காலங்களிலுஞ் சொல்லுக.

3. தேசம், இந்தியா, மக்கள், அரசன், வேந்தர், கலைகள், வீரம்:- இப் பெயர்ச்சொற்களுக்குப் பால் சொல்க.

4. 'இத் தமிழ் அரசர்கள் தங்கள் குடிசனங்களை' என்ற வாக்கியத்தைப் பாகுபாடு செய்து அட்டவணைப் படுத்தி எழுதுக.

5. 'பழைய தமிழ் அரசர்கள் வீரத்திலுஞ் சிறந்து விளங்கினர்' என்ற வாக்கியத்தில் எழுவாய் அடைமொழி யாது? பயனிலை அடைமொழி யாது?

6. அரசர் ஆண்டார்கள்: இந்த வாக்கியத்தில் எழுவாய்க்கு அடைமொழியும் செயப்படுபொருளுஞ் சேர்த்து அதனை விரித்து எழுதுக.

7. எழுவாய் பயனிலை செயப்படுபொருள் என்னும் மூன்றும் அடைமொழி பெற்றுவர இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

## IV Translation :-

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக:—

1. This is my Reading Book. 2. It has eighty pages. 3. There are many pictures in this book. 4. The price of this book is seventy-five cents. 5. I was late to school yesterday. 6. My school begins at 8 o'clock in the morning. 7. The pupils will play a match next Saturday. 8. Last year I was in the Third Standard. 9. I shall go to Colombo next month. 10. This is the first boy in our class.

# Lesson 19 — பாடம் 19.

## இலங்கை IV

இலங்கை ஒரு பெரிய தீவு. அதன் தலை நகர் கொழும்பு. கண்டி அதன் பழைய தலை நகர். அனுராதபுரி ஒரு புராதன நகரம். அது தான் இலங்கைக்கு முதலில் இராஜதானியாக இருந்தது. அது இப்போது பாழடைந்த ஒரு சிறு நகரமாக இருக்கிறது. யாழ்ப்பாணம் இலங் கையின் வடபாகத்துள்ள ஒரு பெரிய பட்டினம். சனத்தொகையால் கொழும்புக்கு இரண்டாவ தாக இருப்பது யாழ்ப்பாணப் பட்டினம். இங்குத் தமிழ் அரசர்கள் இருந்து அரசாண்டார்கள். திருக்கோணமலை இலங்கையின் கிழக்குக் கரை யில் உள்ள ஒரு துறைமுகப் பட்டினம். அங் குள்ள துறைமுகத்தில் சண்டைக் கப்பல்கள் வந்து தங்கும். பெரிய எண்ணெய்க் கிணறுகள் (தாங்கிகள்) அங்குக் கட்டப்பட்டிருக்கின்றன. பீதுருதலாகலை இலங்கையிலுள்ள அதி உயர்ந்த மலை.

நான் ஒரு தமிழன். நீ ஒரு மூஸ்லீம். அவன் ஒரு சிங்களவன். நாம் எல்லாரும் இலங்கைத் தாயின் புத்திரர்கள். எங்களை ஆளும் அரசர் இங்கிலாந்தில் வசிக்கிறார். அவர் பெயர் ஆறும் ஜோர்ஜ். அவர் மிக நல்லவர். அரசியின் பெயர்

ராணி எலிசபெத். இவர்களுக்கு இரண்டு புதல்வியர் உளர். அரசரையும் அரசியையும் எல்லாரும் நேசிக்கிறார்கள். நாங்கள் எங்கள் அரசரை வாழ்த்துவோம்.

## பயிற்சி

**I விளக்கம் :-**

இப்பாடத்து வந்த, தலைநகர், புராதன, இராஜதானி, தாங்கி, புதல்வியர், என்னுஞ் சொற்களை அறிதல் வேண்டும். பாடத்தை வாசித்துப் பொருளை விளங்கிக் கொள்க.

1. இலங்கையில் அரசர்கள் இருந்து அரசாண்ட நகரங்கள் எவை யெவை? 2. திருக்கோணமலையைப் பற்றிய சிறப்பு யாது? 3. தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் எல்லாரும் சகோதரர் ஆவது எதனால்?

**II எழுத்து :-**

(a) கிளி ஒரு பறவை; சிங்கம் ஒரு கொடிய மிருகம்; அவள் ஒரு வேலைக்காரி:- இவ் வாக்கியங்களைப் போலப் பின்வரும் பெயர்ச் சொற்களை எழுவாயாக வைத்து வாக்கியங்கள் எழுதுக: கிளி, சிங்கம், காகம், தாமரை, கோபாலன், வதுளை, மட்டக்களப்பு, கோழி, நாய், பொன்னம்மா, கம்பன், திருக்குறள், மகாவலி கங்கை, மல்லிகை, வேம்பு.

(b) பின்வரும் சம்பவங்களைப்பற்றி விசாரித்து அறிந்துகொண்டு ஒவ்வொன்றையும்பற்றி 5 வாக்கியங்கள் எழுது :-

1. அனுராதபுரியில் உள்ள ஒரு புத்த விகாரை.
2. விஜயன் இலங்கைக்கு வந்தது.

3. வெள்ளரச மரம் காட்டியது.

4. இஸ்லாம் மதம் எங்கு யாரால் தாபிக்கப்பட்டது?

5. கிறிஸ்த மதம் எங்கு யாரால் தாபிக்கப்பட்டது?

(c) இச்செய்யுளைப் பார்த்துப் பிரதிபண்ணுங்கள் :-

இன்னல்வந் துற்றிடும் போததற்(கு) அஞ்சோம்
ஏழைய ராகி இனிமண்ணில் துஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்
கின்னலுந் தேனுங் கனியுமின் பாலும்
கதலியுஞ் செந்நெலும் நல்குமெக் காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கிலை ஈடே

1. இச்செய்யுளின் பொருளை அறியுங்கள் (விசாரித்து அறியலாம்).

2. இச்செயுளில், 2-ம் 3-ம் எழுத்துகள் ஒன்றாய் ஒரே சத்தமாய் இருக்கிற (எதுகைச்) சொற்களைத் தெரிந்து எடுத்துத் தொகுதி தொகுதியாய் எழுதுங்கள் :-

## III பாஷை :-

பெயர்ப் பயனிலை :—இதுவரையும் நாம் ஆராய்ந்த வாக்கியங்களில் பயனிலைச் சொல் எப்போதும் ஒரு **வினைச்சொல்**லாய் இருப்பக் கண்டோம். இந்தப் பாடத்தில் வந்த வாக்கியங்களை ஆராய்வோம். "இலங்கை ஒரு பெரிய தீவு" என்ற முதல் வாக்கியத்தில், இலங்கை தான் பேசப்படும் பொருள்; அதனால் இலங்கை என்பது எழுவாய். இலங்கையைப்பற்றி என்ன சொல்லப் படுகிறது? இலங்கை "ஒரு பெரிய தீவு" என்று

சொல்லப்படுகிறது. வாக்கியப் பொருளை முடிக்கிற சொல் **தீவு** என்பது. அதனால் தீவு என்பது தான் பயனிலை. அதுபோல், "அதன் தலைநகர் கொழும்பு" என்னும் வாக்கியத்தில், எழுவாய் **தலைநகர்;** பயனிலையாய் முடிக்குஞ் சொல் **கொழும்பு** என்னும் பெயர்ச் சொல். அப்படியே ஏனைய வாக்கியங்களிலும் பெயர்ச் சொல் பயனிலையாய் இருப்பதைக் காணலாம்.

1. உனது வீடு யாது? 2. இவன் யார்? 3. இவனது பெயர் யாது? 4. அப்பெட்டியுள் இருப்பது என்ன? 5. நீ படித்த பாடங்கள் எவை?— இந்த ஐந்து வாக்கியங்களையும் ஆராய்ந்து பாருங்கள். முதல் வாக்கியத்தில் **வீடு** என்பது எழுவாய்; அதனைப்பற்றி சொல்லி முடிக்குஞ் சொல் **யாது** என்பது; அதுதான் பயனிலை. இரண்டாம் வாக்கியத்தில் **இவன்** என்பது எழுவாய். **யார்** என்பது பயனிலை. அப்படியே மற்ற **3** வாக்கியங்களிலும் **யாது, என்ன, எவை** என்பன பயனிலையாம். யாது, யார் முதலியவைகளும் பெயர்ச் சொற்கள் தான். இவைகள் ஒன்றைப்பற்றி **வினவுதற்கு** (விசாரித்தற்கு) வருவதால், இவைகள் **வினப்பெயர்கள்** என்னப்படும். இந்த வாக்கியங்களில் வினச்சொற்கள் பயனிலையாய் வருதலைக் காணலாம்.

ஆகவே, ஒரு வாக்கியத்தை முடிக்கிற பயனிலை

1. ஒரு **வினைச்சொல்**லாக இருக்கலாம்.

2. ஒரு **பெயர்ச்சொல்**லாக இருக்கலாம்.

3. ஒரு **வின (பெயர்ச்) ச்சொல்**லாக இருக்கலாம் என்று இதனால் அறிகிறோம்.

(a) இப்பாடத்துள்ள வாக்கியங்களைப் பாகுபாடு செய்து எழுதுக (அல்லது சொல்லுக).

(b) உமது வாசினைப் புத்தகத்தில் இன்று படித்த பாடத்தில் எவையேனும் 5 வாக்கியங்களை எடுத்து அவற்றுக்கு எழுவாயும் பயனிலையுங் கூறுக. செய. பொருள் உளதாயின் அத்தினையுங் கூறுக.

(c) படித்தேன், போகிறாள், குடிக்கும், கண்டார்கள், பறந்தன :— இவ்வினைச்சொற்களுள் செ. பொருள் ஏற்பன எவை? செய. பொருள் ஏலாதன எவை?

இச்சொற்கள் பயனிலையாக வர வைத்து வாக்கியம் இயற்றுக.

(d) முந்திய (c) என்னும் பயிற்சியிற் சொல்லிய வினைச்சொல் ஒவ்வொன்றும் என்னகாலம்? மற்ற இரண்டு காலத்திலும் ஒவ்வொன்றையுஞ் சொல்லுக.

IV பாஷை :- வினு வாக்கியம்.

(a) வினுவுதல் என்பது ஒருவரை ஒன்றைப்பற்றி விசாரித்தல். அப்படி விசாரிக்கிற வாக்கியம் வினு வாக்கியம் எனப்படும்; வினுவுவதற்கு வருஞ் சொல் வினுச்சொல் எனப்படும். இதற்கு முந்திய பத்தியிற் சொல்லிய "உனது வீடு யாது?" முதலிய ஐந்து வாக்கியங்களும் வினு வாக்கியங்கள் என்றும் அவற்றில் வந்த யாது, யார், என்ன, யாவை, என்பன வினுச் சொற்கள் என்றும் அறிகிறோம். வினு என்பதைக் கேள்வி என்றும் இக்காலத்திற் சிலர் சொல்வார்கள்.

எழுத்தில் ஒவ்வொரு வாக்கிய முடிவிலும் ஒரு முற்றுப் புள்ளி . இப்படி இடுகிறோம். எழுதும்போது வாக்கியம் முடிந்தவிடத்தில் இப்படி முற்றுப்புள்ளி இடுவது மிக அவசியம். வினு வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளி இடாமல் ? இப்படி ஒரு கொக்கி மாதிரி அடையாளம் இடுதல் வழக்கம் என்பது அறிக. நீங்கள் எழுதும்போது

இந்த இரண்டு அடையாளங்களையும் ஏற்றபடி இட்டு எழுதுதல் வேண்டும்.

வினாவிற்குரிய மறுமொழி ஆம் (ஓம்), அல்லது, **இல்லை**, என்று வருமாயின், அந்த வினா வாக்கியம் ஆ அல்லது ஓ என்னும் எழுத்தைக்கொண்டு முடியும். உ-ம். கந்தன் வந்தான் ஆ(வந்தானா?). மறுமொழி "ஆம், வந்தான்", அல்லது, "இல்லை, வரவில்லை" என்பதாம். வாக்கிய முடிவில் ஆ, ஓ, என்பவற்றைச் சேர்த்துச் சொன்னால் அது வினா வாக்கியமாகும் என்று அறிகிறோம்.

வாக்கியத்தின் முதலில் ஆவது நடுவிலாவது முடிவிலாவது எ, ஏ, யாது, யாவன், யாவை, யாவர், எவன், என், என்ன, எவள், எவர், ஏன், ஏவர், முதலிய வினாச் சொற்களை வைத்துச் சொல்வதனாலும் வினா வாக்கியம் ஆக்கலாம். உதாரணம்,

| எது. | யார். |
|---|---|
| 1. எது உன் புத்தகம்? | 1. யார் உன்னை அடித்தார்? |
| 2. இவற்றுள் எது உன் புத்தகம்? | 2. உன்னை யார் அடித்தார்? |
| 3. இவற்றுள் உன் புத்தகம் எது? | 3. உன்னை அடித்தார் யார்? |

(b) "நீ என்ன பாடம் படிக்கிறாய்?" என்னும் வினாவிற்கு, "நான் வாசினைப் பாடம் படிக்கிறேன்" என்பது மறுமொழியாகும். "அவன் எப்போது வந்தான்?" என்னும் வினாவிற்கு, "அவன் நேற்று வந்தான், அல்லது, காலையில் வந்தான், அல்லது எட்டுமணிக்கு வந்தான்" என்பது மறுமொழியாகும்.

வினா வாக்கியத்தைக்கொண்டு அதற்குரிய மறு வாக்கியத்தை ஆக்குவதுபோல, மறுமொழி வாக்கியத்தைக்கொண்டு அதற்குரிய வினா வாக்கியத்தையும் ஆக்கலாம். உதாரணமாக, நான் வீட்டுக்குப் போகிறேன்,

என்னும் மறுமொழி வாக்கியத்துக்கு 'நீ எங்கு போகிறாய்?' என்பது வினா ஆகலாம். உன் புத்தகம் இங்கே இருக்கிறது, என்னும் மறுமொழி வாக்கியத்துக்கு, 'என் புத்தகம் எங்கே இருக்கிறது?' என்பது வினா ஆகலாம். இப்படியே மறுமொழியைக்கொண்டு அதற்குரிய வினாவை அமைத்துக்கொள்ளலாம்.

(a) மேல் வரும் வாக்கியங்களை (ஆ, அல்லது, ஓ சேர்த்து) வினா ஆக்குக :-

(1) மாடு வந்தது. (2) நீ சோறு உண்டாய். (3) இந்தப் பசு பால் தருகிறது. (4) அவர்கள் கூட்டத்துக்கு வந்தார்கள். (5) தாய் தன் பிள்ளையைக் கண்டாள். (6) என் மகன் பாடசாலைக்கு வந்தான். (7) அவள் தெருவில் நிற்கிறாள். (8) இந்த நாய் கடிக்கும். (9) நீ என்னைக் கூப்பிட்டாய். (10) நாங்கள் இங்கு இருக்கலாம்.

(a 1) மேல் வரும் வினா வாக்கியங்களைச் சாதாரண வாக்கியமாக மாற்றி எழுதுக :-

(1) பசு புல் மேய்ந்ததா? (2) கன்று துள்ளுகிறதா? (3) குழந்தை சிரிக்குமா? (4) நெல் விளைந்ததா? (5) நீ நாளை வருவாயோ? (6) பயிர் வளர்ந்திருக்கிறதோ? (7) நீர் என் மகனைக் கண்டீரோ? (8) எல்லாரும் வந்தார்களா? (9) இந்த ஆறு வற்றிப் போகுமா? (10) இவன் உனது நண்பனோ?

(b) மேல் வரும் வினாக்களுக்கேற்ற மறுமொழி வாக்கியங்கள் எழுதுக :-

(1) உன் பெயர் என்ன? (2) அவர்கள் எங்கு போகிறார்கள்? (3) உன் வேலைக்காரன் என்ன செய்கிறான்? (4) நீர் எங்கிருந்து வருகிறீர்? (5) நீங்கள் எப்போது வந்தீர்கள்? (6) அவன் பிறந்த ஊர் யாது?

(7) மீன்கள் எதில் வாழும்? (8) சந்திரன் எப்போது பிரகாசிக்கும்? (9) சூரியன் எங்கு உதிக்கும்? (10) ஏன் இங்கு வந்தீர்கள்?

(b 1) மேல்வரும் வாக்கியங்கள் மறுமொழியாக வருவதற்கு ஏற்ற வினா வாக்கியங்கள் ஆக்குக :- (உதாரணமாக, என் மகன் கடைக்குப் போகிறான், என்ற மறுமொழிக்கு "உன் மகன் எங்கு போகிறான்" என்பது வினா ஆகலாம்.)

(1) என் மகன் கடைக்குப் போகிறான். (2) நான் நாலாந்தரத்தில் படிக்கிறேன். (3) ஆறுகள் மலையில் உற்பத்தியாகின்றன. (4) இங்கு வந்தவன் என் மகன். (5) அந்தப் பெண்கள் நாற்று நடுகிறார்கள். (6) இது ஒரு கணிதப் புத்தகம். (7) கூட்டத்தில் நூற்றுக்கு மேலானவர்கள் இருந்தார்கள். (8) என் மாமா தந்த உபகாரம் ஒரு பொன் மோதிரம். (9) எங்கள் பாடசாலை 8 மணிக்குத் தொடங்கும். (10) பீதுருதாலகலை என்பது இலங்கையிலுள்ள அதியுயர்ந்த மலை. (11) குழந்தை பசியினால் அழுகிறது. (12) இவன் என் அண்ணன் மகன்.

## V Translation :-

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக:—

1. Did you go home? 2. What is your father's name? 3. Did you see a man in my garden? 4. How many books are there on this table? 5. How many mango trees are there in your garden? 6. When did the meeting begin? 7. Where shall we keep this book? 8. Which of you will go with me now? 9. On which side of the road were you walking? 10. Did my brother write you a letter last month?

# Lesson 20 — பாடம் 20.

## பிறர்க்கு உதவுதல்

ஒளவையார் ஒரு கிழ அம்மையார். அவர் கல்வியிற் சிறந்தவர். உலக அறிவு நிரம்ப உடையவர். ஏழைகளிடத்தில் இரக்கங் கொண்டவர். மனிதர் நல்ல நடத்தை உடையராக இருக்கவேண்டும் என்று விரும்புபவர். அவர் ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு நீதியைப் போதிப்பார். எந்த வலியவர்களுக்கும் அஞ்சாமல் நீதியை எடுத்துச் சொல்வார். அவர் ஒரு பெரிய புலவர். எத்தனையோ நீதி நூல்களைச் செய்திருக்கிறார். அவையெல்லாம் சிறு பிள்ளைகள் படிக்கத்தக்கவை. 14-ம் 15-ம் பாடங்களில் வந்த செய்யுட்கள் ஒளவையார் பாடிய செய்யுட்களே. இப்பாடத்திலும் அவருடைய சில பாடல்களைப் படிப்போம்.

ஒருபாட்டு பின்வரும் நீதியைப் போதிக்கின்றது. உலகத்தில் பிறந்தவர்கள் எல்லாரும் இறப்பார்கள். அப்படி மாண்டவர்கள் திரும்ப உயிர்பெற்று வரமாட்டார்கள். மாண்டவரை நினைத்து நாம் ஆண்டுதோறும் அழுது நிலத்தில் புரண்டு துன்பப்படுவது வீண்செய்கை ஆகும். நாம் அங்ஙனஞ் செய்தல் ஆகாது. நாமும் அவர்களைப்போல இறக்கவேண்டியவர்கள் தான். நாம்

உயிரோடு இருக்குங்காலத்தில் மனத் துன்பம் இல்லாமல் மற்றவர்களுக்குங் கொடுத்து நாமும் உண்டு வாழுதல் வேண்டும்: என்னும் அழகான இந்த நீதியைச் சொல்லும் பாட்டைப் படிப்போம்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர்—வேண்டா
நமக்கும் அதுவழியே நாம்போம் அளவும்
எமக்(கு) என்என்(று) இட்(டு) உண்(டு) இரும்.
(எமக்கென்னென் றிட்டுண் டிரும்).

இச்செய்யுளில் நாலாம் அடியைச் சொல்வது முதலில் சிறிது கடினமாய்த் தோற்றும். சொற்களைத் தெரிந்துகொண்டால், பின்பு அவற்றை ஓசையின்படி சேர்த்துப் படித்தல் எளிதாகும். நாலாம் அடியில் உள்ள சொற்கள்: எமக்கு என் என்று இட்டு உண்டு இரும், என்னும் ஆறு சொற்கள். இவற்றைச் சொல்லும் போது முதல் மூன்றையும் (எமக்கு என் என்று) ஒருங்கு சேர்த்தும், பின் அடுத்த இரண்டையும் (இட்டு உண்டு) ஒன்றாகவும், இரும் என்பதைத் தனியாகவுஞ் சொல்லிப் பயிலல் வேண்டும்.

"ஆண்டாண்டுதோறும்" என்பது, ஆண்டு+ ஆண்டுதோறும், என இரண்டு சொற்கள் சேர்ந்து நிற்பது. முதலில் நிற்கும் ஆண்டு என்பது அவ்விடத்தில், அதாவது, அவர் இறந்த இடத்தில் எனப் பொருள்படும். ஆண்டுதோ

றும் என்பது வருடந்தோறும், ஒவ்வொரு வருடமும், என்றபடி.

பிறர்க்கு உதவி செய்தலைப்பற்றிச் சொல்லும் இன்னும் ஒரு செய்யுள் உண்டு. அது: இரப்பவர்களுக்குக் கொடுத்து உதவிசெய்பவரே உயர்ந்த சாதியார். கொடாதவர் தாழ்ந்த சாதியார். இப்படியாக இரண்டு சாதிகள்தான் உண்டு. இந்த இரண்டுக்கு மேற்பட்ட வேறு சாதியில்லை. இதுதான் உண்மை நூலில் சொல்லப்படுவது: என்ற நீதியைப் போதிக்கிறது. அந்தச் செய்யுளையும் படிப்போம்.

சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

## பயிற்சி

**I விளக்கம் :-**

சொற்கள் :— (1) ஆண்டு, ஆண்டு, தோறும், மாண்டார், இட்டு, (2) சாற்றுங்கால், நெறி, மேதினி, பட்டாங்கு :— இச்சொற்களையும் பொருளையும் அறிதல் வேண்டும்.

இரண்டாஞ் செய்யுளில் 4 வாக்கியங்கள் உண்டு. அவையாவன :-

1. சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை.

2. நீதிவழுவா நெறிமுறையில் மேதினியில் இட்டார் பெரியோர்.

3. இடாதார் இழிகுலத்தோர்.

4. (அது) பட்டாங்கில் உள்ளபடி : என்பனவாம்.

விளக்க வினாக்கள் :— இவ்வினாக்களுக்கு விடை கூறுக :

1. ஒளவையார் என்பவர் யார் ?

2. அவருடைய குணம் செயல்களைப் பற்றிக் கூறுக.

3. ஒளவையார் செய்த நீதி நூல்கள் ஐந்து கூறுக (விசாரித்து அறியலாம்).

4. வள்ளுவர் செய்த நீதி நூலுக்குப் பெயர் என்ன ?

1-ம் செய்யுள்—5. நாம் யாது செய்தல்வேண்டா ?

6. நமக்கும் எது வழி ? 7. நாம் யாது செய்தல் வேண்டும் ?

2-ம் செய்யுள் — 8. உண்மை நூலிற் சொல்லிய சாதிகள் இரண்டும் எவை ?

9. உயர்ந்த சாதியார் எவர் ? 10. தாழ்ந்த சாதியார் எவர் ?

## II எழுத்து :-

(a) விளக்கப் பயிற்சியின் முதலிற் சொல்லியிருக்குஞ் சொற்களுள் பொருத்தமான ஒரு சொல்லைத் தெரிந்து அடியிற் குறிட்ட இடங்களில் வைத்து நிரப்பி எழுதுக :-

1. இச்சண்டையில்__________மிகப் பலர். 2. இரப்பவர்க்கு எம்மால் இயன்றதை__________உதவல் வேண்

டும். 3. ஒருவர் தாம் கண்டதை________உண்மையையே சாற்றுதல் வேண்டும். 4. இச்சம்பவம் நடந்த போது நான்________நிற்கவில்லை. 5. தீபாவலி________கொண்டாடப்படும். 6. நாம் வசிக்கும் பூமிக்கு________என்றும் பெயர். 7. ________அறிந்தவர் தீ________யில் நடவார்.

(b) சொல்லுதல் என்னுங் கருத்தில் வரும் ஐந்து சொற்களும், பூமி என்னுங் கருத்தில் வரும் 5 சொற்களும் எழுதுக. அவ்வித சொற்கள் சிலவற்றின் முதல் எழுத்துக்கள் அடியிற் காட்டப்பட்டுள்ளன :—

(1) சொல்லுதல்: கூ — —, உ — — — —, சா — — —, மொ — — —, செப் — —.

(2) பூமி: மே — —, உ — —, அவ —, த —, பு — —, ச — —, ஞ — —.

(c) அ, அது, ஆண்டு என்பதுபோல, பின்வரும் மற்றச் சொற்களையும் அறிந்து எழுதுக :—

1. அ : அது : ஆண்டு : ஆண்டை : ஆண்டையான்.
2. இ : இது : ____ ____ ____ ____
3. யா : யாது : ____ ____ ____ ____

(d) ஔவை என்பதை அவ்வை என்றும் எழுதலாம்; அதுபோல் பின்வருஞ் சொற்களைப் பொருத்த முற எழுதுக :—

கௌவை, சௌக்கியம், கௌரி, மௌனம், மௌனி, பௌவம்.

(e) நாம் என்ன வழியாகப் பொருள் தேடலாகாது என்றும், என்ன வழியில் பொருளைச் செலவு செய்தல்வேண்டும் என்றும் காட்டி ஒரு வாசகம் எழுதுக.

III பரீசை :-

1. முதலாம் பத்தியிலுள்ள வாக்கியங்களுக்கு எழுவாய்ப் பகுதியும் பயனிலைப் பகுதியுங் கூறுக.

2. "ஆண்டு ஆண்டுதோறும் அழுதுபுரண்டாலும், மாண்டார் வருவரோ" என்னும் வாக்கியத்தைப் பாகுபாடு செய்க.

3. இரண்டாவது செய்யுளிலுள்ள 4 வாக்கியங்களுக்கும் எழுவாயும் பயனிலையுங் கூறுக.

4. மாண்டார், இட்டார், என்னுஞ் சொற்கள் பெயராக வர 2 வாக்கியங்களும், வினையாக வர 2 வாக்கியங்களும் எழுதுக.

5. ஊர்தோறும், வீடுதோறும், நாள்தோறும், என்னுஞ் சொற்களை வழங்கி வாக்கியம் இயற்றுக.

IV பாஷை :- கூட்டு எழுவாய் :

(a) நாய் ஓடுகிறது, பூனை ஓடுகிறது, மாடு ஓடுகிறது, என்னும் வாக்கியங்களில் ஒன்றன்பால் எழுவாய்க்கு ஒன்றன்பால் பயனிலை வந்தது. நாய்கள் ஓடுகின்றன என்பதில், பலவின்பால் எழுவாய்க்குப் பலவின்பால் பயனிலை வந்தது. இதனை 12-ம் பாடப் பயிற்சியில் படித்தோம். தனித்தனியாகச் சொல்லாமல், நாயும் பூனையும் என்று சேர்ந்துச் சொன்னால் "நாயும் பூனையும் ஓடுகின்றன" என்று சொல்வோம். அப்படியே, நாயும் மாடும் ஓடுகின்றன, நாயும் பூனையும் மாடும் ஓடுகின்றன, என்று சொல்வோம். அஃறிணைப்பெயர்ச்சொல் பல கூடி எழுவாயாக வந்தால் அவற்றை முடிக்கும் பயனிலை பலவின்பால் சொல்லாக இருத்தல் வேண்டும் என்று இதனால் அறிகிறோம்.

கந்தன் வந்தான், முருகன் வந்தான், பொன்னி வந்தாள், என்று தனித்தனியாகச் சொல்லாமல், கந்தனும் முருகனும், என்று கூட்டிச்சொன்னால் கந்தனும் முருகனும் **வந்தார்கள்,** என்று முடிப்போம். அப்படியே, கந்தனும் பொன்னியும் வந்தார்கள், கந்தனும் முருகனும் பொன்னியும் வந்தார்கள், என்று சொல்லுகிறோம். உயர்திணைப்பெயர்ச்சொல் **பல** கூடி எழுவாயாக வந்தால் அவற்றை முடிக்கும் பயனிலை **பலர்பால்** சொல்லாக இருத்தல்வேண்டும் என்று இதனால் அறிகிறோம்.

[குறிப்பு—தமிழில் உயர்திணைப்பெயரையும் அஃறிணைப்பெயரையுஞ் சேர்த்துக் கூட்டு எழுவாயாக வைத்து வாக்கியஞ் செய்வது அரிது. **மனிதனும் நாயும்** என்று எழுவாய் கொண்டால் அதனைப் பொருந்த முடித்தல் இயலாது; மனிதனும் நாயும் **வந்தார்கள்,** என்றுவது, மனிதனும் நாயும் **வந்தன,** என்றுவது சொல்லுதல் பொருத்தமில்லை. அதனால் இருதிணைப் பெயர்களைச் சேர்த்துக் கூட்டு எழுவாயாகக்கொண்டு வாக்கியஞ் செய்யத் தொடங்குதல் வேண்டாம்.]

(a) பின்வரும் எழுவாய்களுக்கு ஏற்ற பயனிலை வைத்து வாக்கியம் ஆக்குக :-

(1) ஆடும் மாடும்______. (2) பசுவுங் கன்றும் ______. (3) ஒரு நரியும் ஒரு சிங்கமும்______. (4) இடையனும் அவன் மகனும்______. (5) குருவுஞ் சீடனும்______. (6) எசமானும் வேலைக்காரனும்______. (7) யானையும் முயல்களும்______. (8) கோழியுங் குஞ்சுகளும்______. (9) கணவனும் மனைவியும்______. (10) அர

சனுங் குடிகளும் ______. (11) அலியாரும் இஸ்மாயி லும் ______. (12) குருவியுங் கொக்கும் ______.

(a 1) பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றும் சரியோ, பிழையோ என்று சொல்லுக :-

(1) வேடனும் நாயும் ஓடினர். (2) காட்டில் பல மரங்கள் உண்டு. (3) பசுவும் புலியும் நீர் குடித்தது. (4) அரசனும் மந்திரியும் வேட்டைக்குப் போனான். (5) ஒரு போர்வீரனும் அவன் குதிரையும் அங்கே காணப்பட்டனர். (6) தாயும் மகளும் வந்தார்கள். (7) பறவைகள் வானத்தில் பறக்கிறது. (8) அந்த ஆட்களும் வீடும் சாம்பராயின. (9) என் மகனும் பூனை யும் விளையாடுகிறார்கள். (10) சாரதியும் வண்டியும் பள் ளத்தில் விழுந்தன. (11) உம்முடைய புத்தகங்கள் எது? (12) இது எனது மாடுகள்.

(b) 1. நான் என்பது **தன்மை** இடப்பெயர்; நீ என்பது **முன்னிலை** இடப்பெயர்; இவை இரண்டுங் கூடி எழுவாயாக வந்தால், நானும் நீயும் படித்தனம், இருந்தனம், ஓடுவாம் என்று சொல்வோம். நாங்களும் நீயும் போவம், விளையாடுவாம், படிக்கிறோம்; என்று சொல்வோம். இவற்றில் பயனிலை **தன்மை** இடமாயிருத் தலை நோக்குக.

2. (நான், நாங்கள் என்ற) **தன்மைப்**பெயர்களும் (அவன், அவள், கந்தன், சினேகிதர், முதலிய) **படர்க் கைப்**பெயர்களுங் கூடி எழுவாயாக வந்தால், நானும் அவனும் போனோம், நாமும் அவனும் நடந்தோம், நானும் என்மனைவியும் வருவோம், என்று சொல்வோம். இவ்வாக்கியங்களிலும் பயனிலை **தன்மை** இடமாயிருக் தலை அறிக.

3. (நீ, நீங்கள் என்னும்) முன்னிலைப் பெயரும் (அவன் அவள் மனிதர் முதலிய) படர்க்கைப் பெயருஞ் சேர்ந்து எழுவாயாக வந்தால், நீயும் உன்மகனும் வந்தீர்கள், நீங்களும் உங்கள் சினேகிதரும் எப்போது வருவீர்கள்? நீயும் மனைவியும் எங்குச் செல்கிறீர்கள்?, என்று சொல்கிறோம். இவ்வாக்கியங்களில் பயனிலை **முன்னிலை** இடமாய் இருத்தலை அறிக.

பல பெயர்ச்சொற்கள் கூடி எழுவாயாக வரும்போது பயனிலைச்சொல் **பன்மையில்** இருத்தல் வேண்டும் என்பதையும், வெவ்வேறு இடப்பெயர்ச் சொற்கள் கூடி எழுவாயாக வரும்போது பயனிலை என்ன **இடம்** ஆக இருத்தல்வேண்டும் என்பதையும், அடியில் வரும் அட்டவணையிற் காணலாம்.

| கூட்டு எழுவாய் | பன்மைப் பயனிலை |
|---|---|
| (a) { நாயும் பூனையும் / கந்தனும் முருகனும் } (படர். + படர்.) | ஓடின / வந்தார்கள் } (படர்க்கை) |
| (b) நானும் நீயும் (தன்மை + முன்னிலை) | படித்தோம். (தன்மை) |
| நானும் மகனும் (தன்மை + படர்) | வந்தோம் (தன்மை) |
| நீயும் அவனும் (முன்னிலை + படர்.) | ஓடினீர்கள் (முன்னிலை) |

(b) பொருத்தமான பயனிலை வைத்து இவ்வாக்கியங்களை முடிக்குக :-

(1) நானும் என்தோழரும்_____. (2) ஒரு கிளியுங் காகமும்_____. (3) நீங்களும் நானும் இங்கே_____.

(4) நேற்று நீரும் உமதுபிள்ளைகளும்______. (5) மேசைமேல் ஒரு புத்தகமும் ஒரு பென்சிலும்______. (6) நானும் என் தாயாரும் நாளை______. (7) என் மனைவியும் மகளும்______. (8) நாங்களும் எங்கள் சுற்றத்தாரும் இந்த ஊரில்______. (9) சில மான்களும் மரைகளும் அங்கே______. (10) நானும் நீயும் அவனும் நேற்று______. (11) நீயுங் கந்தசாமியும் எப்போது______. (12) நானும் எனது இரண்டு சினேகிதரும்______.

(b 1) பின்வரும் வாக்கியங்களைப் பிழையில்லாமல் திருத்தி எழுதுக (அல்லது சொல்க) :-

(1) நீயும் உன் சினேகிதரும் எங்கு போனார்கள். (2) ஒரு கூட்டில் ஒரு கிளியும் ஒரு மைனாவும் இருந்தது. (3) ஒரு காட்டில் பல மிருகங்கள் வசித்தது. (4) அவர்களுக்குச் சிங்கம் இராசாவாக இருந்தன. (5) மிருகங்கள் எல்லாம் சிங்கத்தினிடம் போனார்கள். (6) நீங்கள் இங்கு ஏன் வந்தது ? (7) ஒரு தோட்டத்தில் குரக்கனுஞ் சாமியும் புகையிலையும் பயிரிடப்பட்டிருந்தது. (8) வழியில் திருடருந் துட்ட மிருகங்களும் இருப்பார்கள். (9) நானும் எனது பெற்றாரும் சுகமாய் இருக்கிறார்கள். (10) நீங்களும் வேலைக்காரரும் என்ன வேலை செய்தார்கள் ? (11) அவனுக்குப் பல வேலைக்காரரும் வண்டிகளும் இருக்கின்றன. (12) அவனும் நீயும் ஏன் சண்டைபிடித்தாய் ?

(b 2) இவ்வாக்கியங்களை எழுவாய்ப்பகுதி, பயனிலைப்பகுதியாகப் பாகுபாடு செய்க.

(1) இங்கே நிற்கும் மனிதன் என்னுடைய பழைய சினேகிதன். (2) உலகத்தை உண்டாக்கியவர் யாவர்? (3) உன்னுடைய மூத்த குமாரன் ஒரு சாதுவான பிள்ளை.

(4) உங்களுடைய மக்கள் இருவரும் ஒழுங்காகப் பாடசாலைக்குப் போகிறார்களா? (5) ஒரு பருந்துங் கிளியும் ஒரு கூட்டில் வாழ்ந்தன. (6) நளனுந் தமயந்தியும் முற்காலத்தில் இருந்தவர்கள். (7) என் மகனும் மருமகனும் இணைபிரியாத கூட்டாளிகள். (8) என் மகனுக்குப் பெயர் நல்லதம்பி. (9) நீர் படித்த பாட்டு எது? (10) ஒரு மரத்தில் ஒரு காகமும் ஒருகுருவியுஞ் சினேகமாய் வாழ்ந்தன.

## V Translation :-

ஆங்கிலத்தில் A man and a dog came என்று சொல்வது முறை. அதைத் தமிழில் 'ஒரு மனிதனும் ஒரு நாயும்' என்று தொடங்கிச் சொல்லுதல் முறையாகாது. அதனைச் சிறிது மாற்றி, ஒரு மனிதன் ஒரு நாயுடன் (நாயோடு) வந்தான், என்று சொல்லுதல் தமிழ் முறையாகும். அப்படியே, The rider and the horse fell down என்பதை, குதிரையிலிருந்தவன் குதிரையோடு கீழே விழுந்தான், என்று சொல்லலாம். The driver and the car disappeared என்பதை, சாரதி 'காரோடு' மறைந்தான், என்னலாம்.

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :—

1. Your father and mother are calling you 2. Did you and your sister go to school today? 3. A deer and a crow were great friends. 4. After some time there came a cunning fox to their place. 5. The deer, the crow and the fox became friends. 6. The lion and the tiger are fierce animals 7. You and your friend saved me from danger. 8. A lady and her little dog are in the car. 9. My daughter and her cat are playing in the room. 10. Where did your uncle and aunt meet you?

## Lesson 21 — பாடம் 21.

### தொழில்கள்

மக்கள் பல தொழில்களைச் செய்கிறார்கள். அவர் தொழிலினாற் பொருள் சம்பாதிக்கிறார்கள். சம்பாதித்த பொருளைக் கொண்டு மக்கள் தம் வாழ்க்கையை நடத்துவர். பொருளில்லாமல் உலகில் ஒருவரும் வாழுதல் முடியாது. அதனால்தான் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு தொழிலைச் செய்கின்றனர். சிலர் பயிர்த்தொழில் செய்கின்றனர். இவர்களை வேளாளர் என்கிறோம். சிலர் வியாபாரஞ் செய்வர். இவர்களை வியாபாரிகள் என்கிறோம். சிலர் கைத்தொழில் செய்வர். இவர் தொழிலாளிகள் எனப்படுவர். சிலர் கணக்கு எழுதுவார்கள். இவர்களைக் கணக்கர் என்கிறோம். சிலர் பிள்ளைகளைப் படிப்பிக்கின்றனர். இவர்களை உபாத்தியாயர் என்றும் ஆசிரியர் என்றுஞ் சொல்கிறோம். சிலர் வைத்தியஞ் செய்கிறார்கள். இவர்கள் வைத்தியர் எனப்படுவர். இப்படிப் பலரும் பல தொழிலைச் செய்வர்.

இத் தொழில்களுள் எல்லாஞ் சிறந்தது உழுது பயிர்செய்து வாழும் உழவுத் தொழிலே. ஏனெனில் பயிர்த்தொழில்தான் நமக்கு வேண்டிய உணவுப்பொருட்களை உண்டாக்கிக் கொடுப்பது; அதனால் உழவுத் தொழில் சிறந்தது.

உணவு இன்றி உயிர் வாழுதல் முடியாது. பயிர்த் தொழில் செய்யும் உழவர்களே உலகத்தைச் வாழச் செய்பவர். அவர்கள் தம்முடைய முயற்சியால் தாமும் உணவைப் பெறுகின்றனர். உலகத்துக்கும் உணவை அளிக்கின்றனர். உலக மக்கள் பட்டினியால் மடியாமல் காப்பாற்றுவோர் வேளாளர்களே. இன்னும், அவர்கள் பிறருடைய ஏவலுக்கு அடங்கினவர் அல்லர். தாம் விரும்பியபடி தமது தொழிலைச் செய்வார்கள். அத்தொழிலில் நின்றும் அவர்களை ஒருவரும் நீக்கிவிடுதல் முடியாது. அவர்கள் தாங்களே தங்களுக்கு எசமான்களாய் இருப்பவர். இந்த இரண்டு காரணங்களால்தான், பயிர்த்தொழில் மற்ற எல்லாத் தொழிலினுஞ் சிறந்தது என்று சொல்லப்படுவது. உழவுத் தொழிலைப்பற்றி ஔவையார் பாடிய ஒரு செய்யுளைப் படிப்போம்:

ஆற்றங் கரையில் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும்அன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்(கு) ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

இந்தச் செய்யுளில் ஐந்து வாக்கியங்கள் உண்டு. அவையாவன :

1. ஆற்றங் கரையில் மரம்(உம்) விழும்,

2. அரசு அறிய வீற்றிருந்த வாழ்வு(உம்) விழும், அன்றுஏ = (அப்படி)அல்லவா ?; அதனால்,

3. உழுது உண்டு வாழ்வு ஏற்றம்,

4. அதற்கு ஒப்பு இல்லை, (கண்டீர் என்பது அசைச்சொல்)

5. வேறு ஓர் பணிக்குப் பழுது உண்டு.

ஆற்றங் கரையில் செழித்து வளர்ந்த மரமும் விழுந்துபோம்; அதுபோல அரசன் அறிந்து மதிக்கும்படி வாழ்ந்த மேம்பாடான வாழ்க்கையும் விழுந்துபோம். உழவுத்தொழில் செய்கின்ற வேளாளரது வாழ்க்கையை ஒருவரும் அழித்தல் முடியாது. மற்ற ஒவ்வொரு தொழிலுக்கும் பழுது உண்டு. அதனால் உழவுத் தொழிலே சிறந்தது. அதற்குச் சமானமாகிய தொழில் இல்லை: என்று அழகாக இப் பாட்டில் சொல்லியிருக்கிறார் ஔவைப் பிராட்டியார்.

## பயிற்சி

### I விளக்கம் :-

இப் பாடத்தில் வந்த: அளிக்கின்றனர், பட்டினி, ஏவல், எசமான், ஏற்றம், ஒப்பு, பழுது, பணி, என்னுஞ் சொற்களையும் பொருளையும் அறிந்துகொள்க.

பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுக:—

1. ஒவ்வொருவரும் ஏதும் ஒரு தொழில் செய்ய வேண்டியது ஏன்?

2. வைத்தியத் தொழிலாவது யாது?

3. உழவுத்தொழில் மற்றெல்லாத் தொழிலினும் பார்க்கச் சிறந்தது என்பதற்குக் காரணங்கள் எவை?

செய்யுள் ______

4. ஆற்றங்கரையில் உள்ள மரஞ் செழித்து வளர்வதற்குக் காரணம் யாது?

5. அது பின் விழுவது என்?

6. உழவுத் தொழிலுக்கு ஏன் பழுது இல்லை?

7. மற்றத் தொழில்களுக்கு எப்படிப் பழுதுவரும்?

## II எழுத்து :-

1. அளிக்கின்றனர், அழிக்கின்றனர், என்னும் இரு சொல்லுக்குமுள்ள பொருள் வேறுபாட்டைக் காட்டுதற்கு அச் சொற்களை வழங்கி 2 வாக்கியங்கள் எழுதுக.

2. ஒளித்தல், ஒழித்தல், ஒலித்தல், என்னும் இச் சொற்களின் பொருள் வேறுபாட்டைக் காட்டுதற்கு ஏற்ற வாக்கியங்கள் 3 எழுதுக.

3. ஏற்றம், ஒப்பு, பழுது: என்னும் ஒவ்வொரு சொல்லுக்கும் மும்மூன்று எதுகைச் சொற்கள் தேடி எடுத்து 3 தொகுதியாக எழுதுக.

4. பணி என்பதற்குத் தொழில், தொண்டு, என்னுங் கருத்தைவிட இன்னும் வேறு கருத்தும் உண்டு. பாம்பு, ஆபரணம் என்னுங் கருத்திலும் இச்சொல் வழங்கும். பணி என்பது அக்கருத்தில் வர வைத்து இரண்டு வாக்கியம் இயற்றுக.

5. ஆற்றங்கரை என்பது ஆறு, கரை, என்ற இரு சொற்கள் சேர்ந்து வந்தது. இடையில் அம் சேராமல் 'ஆறுகரை' என்று சொன்னால் என்ன கருத்தாகும் என்று சொல்வீர்களா? ஆற்றங்கரை என்பதுபோலப்

பின்வரும் இவ்விரண்டு சொற்களையும் சேர்த்து எழுதுக:- வேம்பு, குளம்; கரும்பு, தடி; பிரம்பு, பழம்; ஆல், விழுது; தோடை, பழம்; அரசு, கன்று.

6. உமது ஊரில் ஆறு ஒன்று இருந்தால், அல்லது, நீர் எங்காவது பார்த்திருந்தால், அதைப்பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

7. ஆற்றங் கரையில் ஒரு மரம் எப்படி வளர்ந்திருந்தது என்றும், அது பின்பு எப்படி விழுந்தது என்றும், அதை ஒரு புதினமாகச் சொல்லி உமது சினேகிதனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

8. உமது பாடசாலை மாணவர் கூட்டத்தில் உழவுத் தொழிலின் சிறப்பைப்பற்றி நீர் ஒரு சிறு பிரசங்கம் செய்வதாக வைத்து, அந்தப் பேச்சைச் சுருக்கமாய் எழுதுக.

9. "முன்னுக்குச் சொன்னதைப் பின்னுக்கு மறந்தான்" என்பதில், **முன்னுக்கு** என்ற சொல்லுக்குப் பொருத்தமான சத்தமுடைய **பின்னுக்கு** என்ற சொல் தொடுத்து வந்ததுபோல, அடியில் கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொல் தொடுத்துவர வைத்து எழுதுக:—

(i) குட்டிச் சுவரில்______க் கொண்டான்.

(ii) பட்டகாலிலே படும்,______குடியே கெடும்.

(iii) படிக்கிறது தேவாரம்______தேவாலயம்.

(iv) ஆடிய காலே______மிடறே.

## III பாஷை:-

(a) (1) இப் பாடத்தில் முதற் பந்தியிலுள்ள வசனங்களைப் பாகுபாடு செய்க.

(2) “ஆற்றங்கரையில்” என்ற செய்யுளில் உள்ள 5 வாக்கியங்களுக்கும் எழுவாயும் பயனிலையுங் கூறுக.

(b) இந்தப் பாடத்தில் முதற் பத்தியில் வந்த வாக்கியங்களைப் பர்ருங்கள். அவற்றுள் செயப்படு பொருள் கொண்ட வாக்கியங்கள் 15 உண்டு. முதல் ஐந்து வாக்கியங்களை இங்கு எடுத்துக்கொள்வோம். அவை யாவன :—

(1) மக்கள் பல தொழில்களைச் செய்கிறர்கள்.

(2) அவர் தொழிலினுற் பொருள் சம்பாதிக்கிறர்கள்.

(3) சம்பாதித்த பொருளைக்கொண்டு மக்கள் தம் வாழ்க்கையை நடத்துவர்.

(4) அதனுல்தான் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு தொழிலைச் செய்கின்றனர்.

(5) சிலர் பயிர்த்தொழில் செய்கின்றனர்; என்பனவாம்.

இந்த வாக்கியங்களைக் கருத்து வேறுபடாமல், எழுவாயைுஞ் செயப்படுபொருளையும் இடம் மாற்றி, பின் வருமாறும் எழுதலாம் (சொல்லலாம்):—

(1) பல தொழில்கள் மக்களால் செய்யப்படுகின்றன.

(2) பொருள் அவரால் தொழிலினுற் சம்பாதிக்கப்படுகிறது.

(3) சம்பாதித்த பொருளைக்கொண்டு மக்களால் அவர் வாழ்க்கை நடத்தப்படும்.

(4). அதனால்தான் ஒவ்வொருவராலும் ஏதோ ஒரு தொழில் செய்யப்படுகின்றது.

(5) சிலரால் பயிர்த்தொழில் செய்யப்படுகின்றது.

ஒவ்வொரு வாக்கியமும் முதல் இருந்த மாதிரியிலும் பின்பு மாறி இருக்கிற மாதிரியிலும், அதன் கருத்து ஒரு சிறிதும் மாற்றம் அடையவில்லை. வாக்கியத்தின் அமைப்புமாதிரிதான் மாறி இருக்கிறது. இதனால் நாம் என்ன அறியலாம்? ஒரே கருத்தை இரண்டு மாதிரியான வாக்கியங்களாலும் வெளிப்படுத்தலாம் என்று அறிகிறோம். இந்த இரண்டு மாதிரியிலும், வாக்கிய அமைப்பில் என்ன வேறுபாடு இருகிறதென ஆராய்ந்து பார்ப்போம். 'மக்கள் பல தொழில்களைச் செய்கிறார்கள்' என்னும் முதல் வாக்கியத்தில், மக்கள் எழுவாய், தொழில்களை செயப்படுபொருள்; எழுவாய் செய. பொருளை என்ன செய்கிறது என்று பயனிலை காட்டுகிறது. இந்த மாதிரியை மாற்றி 'பல தொழில்கள் மக்களால் செய்யப்படுகின்றன' எனச் சொல்லும் மாதிரியில், செய. பொருளாயிருந்த 'தொழில்கள்' என்பது எழுவாயாக வந்தது; எழுவாயாயிருந்த 'மக்கள்' என்பது மக்களால் என மாறியது; இதில் எழுவாய் என்ன செய்யப்படுகிறது என்று பயனிலை காட்டுகிறது. மற்ற நாலு வாக்கியங்களும் இப்படியே மாறி இருப்பதை நோக்கி அறியுங்கள்.

செயப்படுபொருள் கொண்ட வாங்கியங்களைத்தான் இப்படி மாற்றி அமைக்கலாம். செயப்படுபொருள் கொள்ளாத வாக்கியங்களை இப்படி மாற்றி வேறுமாதிரி அமைத்தல் இயலாது. உதாரணமாக, பூனை பாலைக் குடிக்கிறது

என்பதை, பூனையால் பால் குடிக்கப்படுகிறது என்று சொல்லலாம்; பூனை ஓடுகிறது, என்பதை அப்படி மாற்றிச் சொல்லல் முடியாது. 'ஓடுகிறது' என்பதற்குச் செய. பொ. வராது அல்லவா? அதனால், பூனையால் ஓடப்படுகிறது, என்று தமிழில் சொல்வது இல்லை.

(1) முதல் மாதிரியில்; மக்கள் **செய்கிறார்கள்,** அவர் **சம்பாதிக்கிறார்கள்,** பூனை **குடிக்கிறது,** என்று எழுவாய் செய்கிறதைப் பயனிலை காட்டுகிறது. (2) இரண்டாவது மாதிரியில்; தொழில்கள் **செய்யப்படுகின்றன,** பொருள் **சம்பாதிக்கப்படுகிறது,** பால் **குடிக்கப்படுகிறது,** என்று எழுவாய் செய்யப்படுவதைப் பயனிலை காட்டுகிறது. இதுதான் இரண்டு மாதிரிக்குமுள்ள வித்தியாசமென்பதை நன்கு அறிந்துகொள்ளுங்கள். எழுவாய் ஒன்றைச் செய்கிறதாகச் சொல்லும் வினைச்சொல் **செய்வினை** என்னப்படும். மாடு புல்லை மேய்கிறது, தச்சன் மரத்தை வெட்டினான், பூனை எலி பிடிக்கும், என்னும் வாக்கியங்களில் உள்ள — மேய்கிறது, வெட்டினான், பிடிக்கும், என்னும் — வினைச்சொற்கள் **செய்வினை** ஆகும். இவ் வாக்கியங்களைச் செய்வினை (கொண்ட) வாக்கியங்கள் என்னலாம்.

இனி, எழுவாய் **செய்யப்படுகிறதாகச்** சொல்லும் வினைச்சொல் **செயப்பாட்டுவினை** என்னப்படும். புல்லு மாட்டினால் மேயப்படுகிறது, மரந் தச்சனால் வெட்டப்பட்டது, எலி பூனையால் பிடிக்கப்படும், என்னும் வாங்கியங்களிலுள்ள — மேயப்படுகிறது, வெட்டப்பட்டது, பிடிக்கப்படும், என்னும் — வினைச்சொல் **செயப்பாட்டு வினை** ஆகும். இவ் வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை (கொண்ட) வாக்கியங்கள் என்னலாம்.

இந்த இரண்டு மாதிரி வாக்கியங்களையும் அட்டவணைப்படுத்திக் காட்டுவோம் :—

| செய்வினை வாக்கியம் | செயப்பாட்டுவினை வாக்கியம் |
|---|---|
| 1. மாடு புல்லை மேய்கிறது. | 1. புல்லு மாட்டினல் மேயப் படுகிறது. |
| 2. தச்சன் மரத்தை வெட்டினன். | 2. தச்சனல் மரம் வெட்டப் பட்டது. |
| 3. பூனை எலி பிடிக்கும். | 3. பூனையால்எலிபிடிக்கப்படும் |

எந்தச் செய்வினை வாக்கியத்தையும் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றிச் சொல்லலாம். அப்படியே, எந்தச் செயப்பாட்டுவினை வாக்கியத்தையும் செய்வினை வாக்கியமாக மாற்றிச் சொல்லலாம். இரண்டு மாதிரியிலும், (1) வினைச்சொல் காலம்மாருமல் இருப்பதையும், (2) எழுவாயும் பயனிலையும் திணையிலும் பாலிலும் ஒத்திருப்பதையும் நன்கு நோக்கி மறவாமல் மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

(b. 1) இச் செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்றிச் சொல்க (எழுதுக) :—

அடிக்கிருன், காண்கிருன், நேசிக்கிருள், கொல்லும், வெல்லும், விரும்புகிறேன், தேடுகிரும், செய்கின்றன, பூசிக்கிருர்கள், துரத்தினள், குடிக்கிறது, பழிக்கிருய்.

(b. 2) இச் செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாக மாற்றிச் சொல்க (அல்லது எழுதுக) :—

காணப்படுகிறது, விரும்பப்படுகின்றன, புகழப்படுகிருய், எழுதப்பட்டது, அழைக்கப்படுவார்கள், வெறுக்கப்படுகிரும், கொல்லப்படுகின்றன, அழிக்கப்படும், தேடப்படுகிருர்கள், கொடுக்கப்படுகிருள், நீக்கப்பட்டீர்கள், வணங்கப்படுகிறேன்.

(b. 3) இச் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக:—

1. என் மகன் பாடம் படிக்கிறான். 2. நான் பத்திரிகை வாசித்தேன். 3. நீ சோறு உண்டாய். 4. வேலைக்காரன் பெட்டியைத் திறந்தான். 5. சிங்கம் மற்ற மிருகங்களை வெல்லும். 6. என் மகள் ஒரு படம் எழுதினாள். 7. அரசன் தேசத்தை ஆண்டான். 8. வண்ணான் சீலை வெளுப்பான். 9. காற்று மரங்களை முறித்தது. 10. கந்தன் ஒரு வீடு கட்டினான். 11. பருந்து ஒரு கோழிக்குஞ்சை இறாஞ்சிற்று. 12. மீரா சாய்பு ஒரு கடை திறந்தான்.

(b. 4) மேல்வருஞ் செயப்பாட்டுவினை வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாக்குக:—

1. கப்பல் காற்றினால் தள்ளப்படுகிறது. 2. வெள்ளத்தினாற் பயிர்கள் அழிக்கப்பட்டன. 3. பூனையால் அப்பம் தின்னப்பட்டது. 4. என்னால் இக்கடிதம் எழுதப்படும். 5. என் நண்பர்களால் நான் அனுப்பப்பட்டேன். 6. உங்களால் இக்காரியம் செய்யப்படும். 7. வீரர்களால் இந்நாடு காப்பாற்றப்பட்டது. 8. ஒவ்வொரு நாளும் அச்சிறுவன் தன் தகப்பனால் அடிக்கப்படுகிறான். 9. இக் கடுதாசி உன்னாற் கிழிக்கப்பட்டது. 10. வியாபாரிகளால் எல்லாவகைத் தானியமும் விற்கப்படும்.

**IV Translation :-** தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :-

1. This letter was sent by my father. 2. A book was given to each pupil. 3. Paddy is grown in Ceylon. 4. This child was bitten by a mad dog. 5. A nice song was sung by the little girls. 6. A meeting will be held tomorrow at this place. 7. We are all invited to that meeting. 8. All the articles will be sold by auction. 9. This cloth is a very costly one. 10. Was the thief caught? 11. By whom was this work done? 12. When was this house built?

# Lesson 22 — பாடம் 22.

## மகாத்மா காந்தி



முன்னொரு பாடத்தில் இந்தியா இலங்கைக்கு அயல் தேசம் என்று படித்தோம். அது இலங்கையின் தாய்த்தேசம் என்று சொல்லப்படும். அது இலங்கையிலும் பார்க்க எத்தனையோ மடங்கு பெரியது. நமது இலங்கைத் தீவைப்போன்ற எழுபது இலங்கைத் தீவுகள் சேர்ந்து இந்தியாவின் அளவுக்குச் சமமாகும்.

இப்படி இந்தியாதேசம் இடத்தினுல் மிகப்பெரி தாய் இருப்பதுபோல, பலவகைச் செல்வங்களி னுலும் மிகச் சிறந்தது. இந்தியாவில் பல அறி வாளிகளுந் தேசாபிமானிகளும் வீரர்களும் பெரிய ஞானிகளும், புலவர்களும் அடிக்கடி தோன்றி உலகத்துக்கு நன்மைகள் செய்தார் கள். இலங்கையில் புத்தசமயம் வழங்குகிறது. அந்தச் சமயத்தை முதலில் தொடங்கிய புத்த பகவானும் இந்தியாவில் தோன்றியவர். அவ் விதமாகிய ஓர் உத்தம புருஷர் இப்போது இந்தியாவில் இருக்கிருர். அவர்தான் **மகாத்மா காந்தி.**

உலகத்திலுள்ள சிறந்த பெரியார்களுள் மகாத்மாகாந்தி ஒருவர் ஆவர். இந்தியாவின் மேற்குக் கரையோரமாகப் **பம்பாய்** மாகாணம் இருக்கிறது. அங்கு **போர்பந்தர்** என்று ஓர் ஊர் உண்டு. அந்த ஊரில் 1869-ம் ஆண்டில் இந்த உத்தமர் பிறந்தார். இளம் பிராயத்திலேயே இவரிடம் அரிய நற்குணங்கள் காணப்பட்டன. ஆங்கிலத்தில் உயர்தர நியாயவாதி (பாரிஸ்டர்)ப் பரீட்சைக்குப்படிக்க இங்கிலாந்துக்குப் போனுர். போகும்போது "மாமிசம் உண்ணுதே, மது பானம் பண்ணுதே" என்று இவருடைய அன் னேயார் இவருக்குக் கட்டளேயிட்டார். தாய் சொல்லே மீறி இவர் இன்று வரையும் நடக்க வில்லே.



இங்கிலாந்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்ற பின் காந்தி தென் ஆபிரிக்காவுக்குப் போனர். அங்கே பெரிய நியாயவாதியாக விளங்கினர். அக்காலத்தில் அநேக இந்தியத் தொழிலாளிகள் தென் ஆபிரிக்காவில் இருந்தார்கள். அங்கே அவர்கள் அதிக கஷ்டம் அடைந்தார்கள். காந்தி அதை அறிந்தார். அவர்களுடைய துன்பங்களைப் போக்கப் பாடுபட்டார். பின்பு இந்தியாவுக்கு வந்தார்.

இவர் இந்தியாவுக்கு வந்தபின் ஏழைக் குடிகளின் வறுமையைக் கண்டு மனங் கலங்கினர். தமது நியாயவாதித் தொழிலை விட்டு விட்டார். பின்பு ஏழைக் குடியானவர்களுக்கு ஊழியஞ் செய்யத் தொடங்கினர். அதிற் பல



விதமான கஷ்டங்களை அனுபவித்தார். இடையிடையே பட்டினி கிடந்தார். பலமுறை சிறையில் அடைக்கப்பட்டார். அத் துன்பங்களை இவர் பொருட்படுத்தவில்லை. தாம் துன்பம் அடைந்தாலும் பிறர் நன்மை யடைந்தாற் போதும் என்பது இவருடைய கருத்து. எப்போதுஞ் சத்தியமே பேசுவார். எதிரிகளிடமும் அன்பு காட்டுவார். தீமை செய்தவருக்கும் நன்மையே செய்வார். இந்த உத்தம குணங்களைக் கண்டு உலகத்தார் இவரை **மகாத்மா** என்று போற்றிப் புகழ்கின்றனர்.

ஏழைக் குடிகளின் வறுமையை நீக்கு வோம்; கையால் நூல் நூற்று ஆடை நெசவு பண்ணி உடுப்போம்; கல்வி அறிவை வளர்ப் போம்; மதுபானத்தை ஒழிப்போம்; எல்லா ரும் சாதிமதச் சண்டையை விட்டுச் சகோதரர் போல வாழவேண்டும்; என்று எங்கும் பிரயா ணம்பண்ணி மக்களுக்குப் போதித்து வந்தார். மகாத்மாகாந்தி இலங்கைக்கும் 1927-ம் ஆண்டில் வந்து கொழும்பு கண்டி யாழ்ப்பாணம் முதலிய இடங்களைப் பார்த்துச் சென்றார். மகாத்மா காந்தியைப் போல நாமும் நல்லவர்களாக வர வேண்டும். எல்லாரிடமும் அன்புடையவர்களாக வேண்டும். எல்லாருக்கும் உதவிபுரிதல் வேண்டும்.

## பயிற்சி

**I விளக்கம் :-**

சொற்கள் :— தேசாபிமானி (தேச + அபிமானி; தாய்நாட்டில் பற்று உடையவர்), உத்தமம், புருஷர், நியாயவாதி, மதுபானம், பொருட்படுத்தல் (பெரிதாய் நினைத்தல்), சத்தியம், மகாத்மா (மகா + ஆத்மா; பெரிய ஞானி) :—இச் சொற்களை அறியுங்கள்.

மேல்வரும் வினைக்களுக்கு விடை கூறுக:—

(1) இலங்கையிலும் இந்தியா எத்தனை மடங்கு பெரிது? (2) புத்த பகவானை இலங்கையில் யார் வணங்கு கிறார்கள்? ஏன் வணங்குகிறார்கள்? (3) போர்பந்தர் என்னும் ஊர் எங்கிருக்கிறது? (4) காந்தி இங்கிலாந் துக்கு ஏன் போனார்? (5) அவர் தென் ஆபிரிக்காவில்

செய்தது என்ன? (6) காந்திமகான் இந்தியாவுக்கு வந்து என்ன செய்தார்? (7) அவர் என்ன கஷ்டங்கள் அனுபவித்தார்? (8) அவரை ஏன் உலகத்தார் மகாத்மா என்று அழைக்கின்றனர்? (9) மகாத்மாகாந்தி உலகத்தாருக்குச் செய்யும் போதனை யாது? (10) அவருக்கு இப்போது என்ன வயது ஆகிறது? இலங்கைக்கு வந்தபோது என்ன வயது?

## II எழுத்து :-

1. விளக்க வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

2. மதுபானம் செய்யும் பழக்கம் நல்லதோ தீயதோ என்று உமக்குத் தெரிந்தவரையில் ஆராய்ந்து ஒரு வாசகம் எழுதுக.

3. மகாத்மாகாந்தியின் சரித்திரம் அடங்கிய ஒரு புத்தகம் அனுப்பும்படி ஒரு புத்தக வியாபாரிக்கு ஒரு கடிதம் எழுதுக.

4. (உமது ஊரில் இருக்கும்) ஒரு நியாயவாதியின் வேலையைப்பற்றி ஒரு பத்தி (10 வரிக்கு மேற்படாமல்) எழுதுக.

5. விடப்பட்டிருக்கும் எழுத்துக்களை வைத்து நிரப்பி எழுதுக:- ஏ—க் குடிக—ன் வ—மையை —க்குவோம். க—வியறிவை வ— —ப்போம். கையால் —ல் நூ—றுச் சி— நெசவு ப— — உடுப்போம். மது பா—த்தை ஒ—ப்போம். எ— —ரும் ச—டையை விட்டுச் சகோத—ர் போ— வா—வோம்.

6. விளக்கப் பகுதியில் முதலில் சொல்லியிருக்கும் சொற்களுள் பொருத்தமான ஒன்றைத் தெரிந்து அடியிற் கீறிட்ட இடங்களில்வைத்து நிரப்பி எழுதுங்கள்.

1. இந்த வழக்கில் எனக்காகப் பேச ஒரு _______ ஏற்படுத்தி யிருக்கிறேன். 2. சன்மார்க்க _______ அதிகமாய் _______ செய்யமாட்டார். 3. தன்னயம் விரும்புபவர்கள் பிறர் சுகத்தை _______ மாட்டார்கள். 4. எனது சிநேகிதன் எமது தேசத்துக்காக உழைக்கிற ஒரு பெரிய _______. 5. எப்போதும் _______ மே பேசுவது ஓர் _______ குணம்.

7. கோயில், மூளையில், நாலும், கொட்டாவி, சொல்லு, என இங்கு கொடுக்கப்பட்டுள்ள சொற்களுள் பொருத்தமான ஒன்றைத் தெரிந்து அடியிற் கீறிட்ட இடங்களில் வைத்து நிரப்பி எழுதுக.

1. ஆலும் வேலும் பல்லுக்(கு) உறுதி.
   _______ இரண்டும் _______ க்(கு) உறுதி.
2. விளையும் பயிரை _______ தெரியும்.
3. எட்டாத பழத்துக்கு _______ விடுவது.
4. தாயில் சிறந்தொரு _______ உமில்லை.

## III பாஷை :-

1. இப் பாடத்து முதலாம் பத்தியிலுள்ள முதல் வாக்கியத்தை விட்டு மற்ற வாக்கியங்களைப் பாகுபாடு செய்க.

2. இரண்டாம் பத்தியிலுள்ள வாக்கியங்களுக்கு எழுவாய் மாத்திரங் கூறுக.

3. மூன்றும் பத்தியிலுள்ள வாக்கியங்களுக்கு எழுவாயும் பயனிலையுங் கூறுக.

4. நாலாம் பத்தியில் செயப்படுபொருள் உள்ள நாலு வாக்கியங்கள் கூறி (எழுதி) ஒவ்வொன்றிலுமுள்ள செய. பொ. எது என்று காட்டுக.

5. இந்த நாலு வாக்கியங்களையுஞ் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றிச்சொல்க (அல்லது எழுதுக).

6. (i) இவர் பல முறைகளில் அரசாட்சியாரால் சிறையில் வைக்கப்பட்டார்.

(ii) காந்தி தந்தை தாயரால் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார்.

(iii) மகாத்மா காந்தியால் நூல் நூற்கப்படுகிறது.

இவ் வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக (சொல்க).

7. படித்தோம், செய்தார்கள், காணப்பட்டன, அடைந்தீர்: என்னும் பன்மை வினைச்சொற்களை ஒருமையில் சொல்க (எழுதுக).

8. உத்தமன், சீமான், சகோதரன், செல்வன், புதல்வன்: என்னும் ஆண்பாற் பெயர்களுக்குரிய பெண்பாற் பெயர்களைச் சொல்க (எழுதுக).

9. (i) கருத்து, கறுத்து; (ii) அரிந்தார், அறிந்தார்; (iii) ஒழிப்போம், ஒளிப்போம்: சோடியாக இருக்கும் இவ் விரண்டு சொற்களுக்குமுள்ள பொருள் வேறுபாட்டை விளக்க 3 சோடி வாக்கியம் இயற்றுக.

10. யான், நின்னை, என்னை, உனது, நீ, எனக்கு, என்னும் ஒருமைப் பெயர்களைப் பன்மையிற் சொல்க (எழுதுக).

**IV Translation :-** தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :-

1. A fisherman went to fish in a pond. 2. He sat there fishing for a long time. 3. He did not catch any fish. 4. At last a fish was caught. 5. He took it in his hand. 6. It was a very small fish. 7. It was put into a basket. 8. The fisherman's wife cooked the fish. 9. It was eaten by the man and his wife. 10. Mahatma Gandhi was sent to England by his parents. 11. He was asked not to eat meat by his mother. 12. Did he break his promise?

# Lesson 23 — பாடம் 23.

## ஆறு.

நீங்கள் ஆற்றைக் கண்டிருக்கிறீர்களா? உங்கள் ஊருக்கு அருகாக ஆறு ஓடுகிறதா? ஆற்றில் சலம் ஓடும். ஆற்றில் நீர் பெருகி வருவதை வெள்ளம் என்கிறோம். அந்த வெள்ளம் வெளியே வராதபடி இரு பக்கத்திலும் பெரிய கரைகள் இருக்கும். இரு பக்கங்களிலும் மரங்கள் செழித்து வளர்ந்து இருக்கும். ஆறு உயர்ந்த இடத்திலிருந்து தாழ்ந்த இடத்துக்குச் சரிவாக ஓடும். மலையில் மழை பெய்தால் அந்த மழைநீர் ஒன்றாகச் சேர்ந்து ஆறாகி ஓடும். அப்படி ஓடுகிற ஆறு ஈற்றில் கடலுள் போய் விழும். ஆறு கடலோடு கலக்கும் இடம் ஆற்றுமுகம் என்றும் சங்கமம் என்றுஞ் சொல்லப்படும்.

நாம் ஆற்றில் குளிக்கிறோம். ஆற்று நீரைக் குடிக்கிறோம். ஆற்றுநீர் பயிர்த் தொழில் செய்ய உதவுகிறது. ஆற்றின் நடுப் பாகம் மணல் பொருந்தியதாய் இருக்கும். மழையில்லாத காலத்தில் சில ஆறு பெருகமாட்டா. நீர் வற்றிப்போகும். ஆற்று நடுவில் உள்ள மணல் வெய்யிலினால் சூடாக்கப்படும். அந்நேரத்தில் அம்மணல் அங்கு நடப்பவருடைய அடிகளைச் சுடும். எனினும் அம்மணலைத் தோண்டினால்

அடியில் நீர் ஊறும். அந்த ஊற்றிலிருந்து பெருகும் நீரைச் சனங்கள் குடிப்பார்கள். இப்படியாக, ஆறு வெள்ளம் வற்றி மணல் சுடுகிற காலத்திலும் ஊற்றுநீரைக் கொடுத்து உலகத்தவரை உண்ணச் செய்கிறது. நல்ல குடியிலே பிறந்த நற்குணமுடையவர்கள் இந்த ஆற்றைப் போல இருப்பார்கள் என்று ஔவைப்பிராட்டியார் சொல்லுகின்றார்.

நல்லவர்கள் தம்மிடத்துப் பொருள் இல்லாமல் வறியவராய் வந்தபோதும் ஏழைகளுக்கு இல்லையென்று சொல்லமாட்டார்களாம். இல்லையென்று சொல்ல அவர் மனம் இசையாதாம். தமக்கென்று வைத்திருக்கும் அற்ப பொருளை யாவது கொடுத்து உதவுவார்களாம். இதனை ஔவையார் ஓர் அழகான பாட்டாகச் சொல்லியிருக்கிறார். அதனைப் படிப்போம்.

ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ்ஆறு
ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை எனமாட்டார் இசைந்து.

இச் செய்யுளில் இரண்டு வாக்கியங்கள் உண்டு. அவை யாவன:—(1) ஆற்றுப்பெருக்கு அற்று அடிசுடும் அ நாளும் அ ஆறு ஊற்றுப் பெருக்கால் உலகு ஊட்டும்; (2) நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும் ஏற்றவர்க்கு இசைந்து இல்லை என மாட்டார்; என்பனவாம். ஊட்டும், நல்கூர்ந்தார், ஏற்றவர், என்னுஞ் சொற்களை அறிதல் வேண்டும். சொற்களை இலகுவாய் அறிந்து பொருளை விளங்கிக்கொள்ளும்பொருட்டு இப் பாட்டு இப்படிப் பிரித்துக் காட்டப்பட்

டிருக்கிறது. இப்படியே பாடினால் பாட்டின் ஓசை நன்ருய் வராது, பாட்டிலுள்ள சொற்களையும் பொருளையுந் தெரிந்த பின்பு, அதனை ஓசையோடு படிக்கப் பயிலல் வேண்டும். ஓசையோடு படித்தற்காகச் சொற்களைச் சேர்த்துப், பின் வருமாறு காட்டப்பட்டிருக்கிறது இப்பாட்டு.

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ராஞலும்
இல்லை எனமாட்டார் இசைந்து.

ஆற்றில் வெள்ளம் வற்றியபின் நாம் அதனைப் பார்த்தால், ஓரிடத்தில் மணல் மேடாகக் குவிக்கப்பட்டிருக்கும். அதற்கு அருகில் பள்ளமாக ஒரு மடு இருக்கும். பின்பு புது வெள்ளம் வந்து ஆறு நிரம்பிப் பாயும். அந்த வெள்ளம் வற்றியபின் நாம் போய்ப் பார்த்தால், முன்பு இருந்த மணல்மேடு அந்த இடத்தில் இருக்காது. அந்த இடம் இப்போது பள்ளமான மடுவாக மாறி இருக்கும். முன்பு பள்ளமாயிருந்த மடு இப்போது மேடாக உயர்ந்திருக்கும். இது ஆற்றிலே காணப்படுகிற ஒரு காட்சி. இதனைப்பற்றியும் ஔவையார் ஒரு பாட்டுச் சொல்லியிருக்கின்ருர்.

ஆற்று வெள்ளத்தினல் மணல்மேடு மடுவாக மாறியும், மடுவானது மணல் மேடாக உயர்ந்தும் மாறி மாறிக் காணப்படும். அது போல, மனிதரிடத்திலும் வறுமையுஞ் செல்வமும் மாறி மாறி வரும். வறியவர் செல்வராவர். செல்வர் வறியவர் ஆவர். செல்வம் எப்போதும்

நிலையாய் ஒருவரிடத்தில் நில்லாது. ஆதலால், செல்வம் இருக்கும்போது, உலகத்தவர்களே! நீங்கள் யாது செய்தல்வேண்டும்? ஏழைகளுக்குச் சோறு கொடுங்கள். குடிக்கத் தண்ணீருங் கொடுங்கள். அந்தத் தருமம் உங்களுக்கு வறுமை வந்த காலத்திலுந் துணையாக இருக்கும். உங்கள் உள்ளம் பரிசுத்தமாகச் சிறந்து விளங்கும். உங்களுக்கு வறுமைத் துன்பந் தோற்றாது. அதனாற் சுகம் பெறுவீர்கள்: என்ற நீதியை அந்தப் பாட்டுச் சொல்கிறது. அப்பாட்டை இப்போது படிப்போம்.

ஆறு இடும் மேடும் மடுவும் போல் ஆம் செல்வம்
மாறிடும், ஏறிடும்; மாநிலத்தீர்!—சோறு இடும்;
தண்ணீரும் வாரும்; தருமமே சார்வு ஆக
உள் நீர்மை வீறும் உயர்ந்து.

இந்தச் செய்யுளில் நாலு வாக்கியங்கள் உண்டு. அவை யாவன:— (1) ஆறு இடும் மேடும் மடுவும் போல் ஆம் செல்வம் மாறிடும், ஏறிடும். (2) மாநிலத்தீர்! சோறு இடும். (3) தண்ணீர் (உம்) வாரும். (4) உள் நீர்மை தருமம் (ஏ) சார்வு ஆக உயர்ந்து வீறும்: என்பனவாம். இச் செய்யுளில் வந்த: மடு, மாநிலத்தீர், சார்வு, உள், நீர்மை, வீறும்: என்னுஞ் சொற்களை அறியுங்கள். சொற்களையும் பொருளையும் அறிந்து விளங்கினபின், சொற்களைச் சேர்த்து அடியிற் காட்டியிருக்கிறபடி பாட்டை ஓசையோடு பாடிப் பயிலுங்கள்.

ஆற்றிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்!—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்வாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து.

## பயிற்சி

**I விளக்கம் :-**

பின்வரும் வினக்களுக்கு விடை கூறுக :—

1. ஆற்றில் வெள்ளம் எப்படி உண்டாகிறது ?

2. ஆற்றுவெள்ளம் ஏன் ஊருக்குள் புகுவதில்லை ?

3. ஆற்றினல் வரும் பிரயோசனம் எவை ?

1-ம் செய்யுள்———— 4. ஆற்றில் அடியைச் சுடுவது எது ? ஏன் சுடுகிறது ?

5. ஆற்றில் பெருக்கு அற்றதுபோல் நல்லவரிடத்தில் அற்றுப்போவது யாது ?

6. ஆற்றில் அடிசுடுவதுபோல நல்லவரைச் சுடுவது எது ?

2-ம் செய்யுள்———— 7. ஒருவரிடத்திலுள்ள செல்வம் அழிவது ஆற்றில் எதைப்போலும் ?

8. ஆற்றில் மடு உயர்ந்து மேடாவதுபோல மனிதரிடத்து என்ன நிகழும் ?

9. ஆற்றில் மேடும் பள்ளமும் எதனல் உண்டாகின்றன ?

10. நாம் செய்யவேண்டிய கடமை என்ன ? அதனல் என்ன பயன் உளதாகும் ?

**II எழுத்து :-**

1. முதலாஞ் செய்யுளில் ஆற்றைப்பற்றிச் சொல்லுகிற பகுதியை மாத்திரம் எழுதுக.

2. "அவ்வா றாற்றுப் பெருக்கா லுலகூட்டும்" என்பதைத் தனித் தனிச் சொல்லாகப் பிரித்து எழுதுக.

3. ஓர் ஆற்று மணலில் நீரும் உமது சினேகிதரும் போய்த் தங்கிக் கொண்டாடிவந்ததாக ஒரு கதை எழுதுக.

4. ஓர் ஊரில் நற்குணமுள்ள ஒரு மனிதன் இருந்தான். சில காலத்தின் பின் அவன் வறியவன் ஆனன்.

ஒருநாள் அவனிடம் ஒரு யாசகன் வந்தான்:— இக் கதையைத் தொடர்ந்து எழுதி முடியுங்கள்.

5. றடிசுடும், றாற்றுப்பெருக்கால், உலகுகூட்டும், சோறி + டும் = சோறிடும்: என்று இப்படி ஒருவர் பிழையாய் எழுதியிருந்தால் நீர் அதை எப்படித் திருத்தி எழுதுவீர்?

6. 'ஆற்று' என்னுஞ் சொல்லைப்போன்ற சத்தமுடைய (எதுகைச்) சொற்கள் முதலாம் பாட்டில் 2 உண்டு அவற்றை எழுதுக. வேறும் 2 எதுகைச் சொற்கள் இருந்தால் எழுதுக.

7. இரண்டாவது செய்யுளில் ஒரே சத்தமுள்ள (எதுகைச்) சொற்கள் நாலு தொடுத்து வந்திருக்கின்றன. அவற்றை எழுதுக. வேறும் எதுகைச் சொற்கள் இருந்தால் எழுதுக.

8. உண்டு, கூடி, தொண்டு, நாடி, கொண்டு, வாடி: என இங்கு கொடுக்கப்பட்ட சொற்களுள் பொருத்தமான ஒன்றைத் தெரிந்து அடியிற் கீறிட்ட இடங்களில் வைத்து நிரப்பி எழுதுக:—

1. எனக்கொரு குட்டிநாய் உண்டு, அது
என்னுடன் ஆடுமே ஆனந்தம்______
தனக்கென வைத்ததீன்______, அது
தவறுமற் செய்யுமே நான்சொலும் ______.

2. ஒருநாள் வெளிதனில் ஓடி, நாம்
ஒன்றாக ஆடினோம் இருவரும்______
விரைவிற் பசியினால்______, நாம்
வீட்டுக்குப் போனோம் உணவினை______.

III பாஷை :-

(a) 1. இப்பாடத்து முதலாம் இரண்டாம் பந்தியிலுள்ள வாக்கியங்களைப் பாகுபாடு செய்க.

2. முதற் செய்யுளில் உள்ள இரண்டு வாக்கியங்களையும் பாகுபாடு செய்க.

3. இரண்டாவது செய்யுளில் உள்ள முதல் வாக்கியத்தில் இரண்டு பயனிலைச் சொற்கள் உண்டு. அவை எவை? எழுவாய் எது?

4. இரண்டாவது செய்யுளில் உள்ள நாலாம் வாக்கியத்தைப் பாகுபாடு செய்க.

5. நீங்கள் ஆற்றைக் கண்டீர்கள். நாம் ஆற்று நீரைக் குடிக்கிறோம். மணல் அடியைச் சுடும்: என்னும் வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக (அல்லது சொல்லுக).

6. ஆற்று மணல் வெய்யிலினாற் சூடாக்கப்படும். ஊற்றுநீர் சனங்களாற் குடிக்கப்படும். ஔவையாரால் இப் பாட்டு இயற்றப்பட்டது:— என்னும் இவ் வாக்கியங்களைச் செய்வினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக (அல்லது சொல்லுக).

7. இந்த நிழலில் இருந்து இளைப்பு **ஆறு**, என்பதில் 'ஆறு' என்பது வினைச்சொல்லாக நின்று தொழிற்படுகிறது. மகாவலிகங்கை ஒரு பெரிய **ஆறு**, என்பதிலும்; **ஆறு** மனிதர் வந்தனர், என்பதிலும் 'ஆறு' என்பது பெயர்ச்சொல்லாக நின்று தொழிற்படுகிறது. இதுபோல; அடி, ஊற்று, குடி, பெருக்கு, என்னுஞ் சொல் ஒவ்வொன்றும் **பெயராக** வர ஒரு வாக்கியமும் **வினையாக்** வர ஒரு வாக்கியமும் இயற்றுக.

8. தண்ணீரும் வாரும், என்பதில் வாரும் என்பது ஊற்றுங்கள், கொடுங்கள் என்னும் பொருளில் வந்தது. வேறு என்ன பொருளிலும் அதை வழங்கலாம் என்று காட்டுக.

(b) நான் இப்போது வருகிறேன், நாம் வீட்டுக்குப் போனோம், நீ எப்போது வருவாய்? நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள், என்னும் வாக்கியங்களில் எழுவாய்ச் சொற்கள் முறையே, நான், நாம், நீ, நீங்கள் என்பன என்று அறிவோம். இவ்வாக்கியங்களில் இவை வெளியாய்த் தோன்றி நிற்கின்றன. இந்த எழுவாய்ச் சொற்களைச் சொல்லாமல், இப்போது வருகிறேன், வீட்டுக்குப் போனோம், எப்போது வருவாய்?, ஏன் சிரிக்கிறீர்கள்? என்றும் இவ் வாக்கியங்களைச் சொல்லலாம். அப்படிச் சொன்னாலும், நான், நாம், நீ, நீங்கள் என்பவைதான் முறையே அவற்றுக்கு எழுவாயாக இருப்பன. 'இப்போது வருகிறேன்' என்பதில் **வருகிறேன்** என்னும் பயனிலைக்கு **நான்** (யான்) என்ற சொல் **ஒன்றுதான்** எழுவாயாக வரும். வேறு ஒரு பெயரும் பொருந்திவராது. அப்படியே, மற்ற மூன்று வாக்கியங்களிலும் நாம், நீ, நீங்கள் என்னும் பெயர்களைவிட வேறு ஒன்றும் எழுவாயாக வராது. அதனால் நாம் பேசும்போதும் எழுதும்போதும் இந்த நாலு எழுவாய்ச் சொற்களையுஞ் சிலவேளை சொல்லாமலே விட்டுவிடுகிறோம்.

நான் (யான்), நாம் (யாம், நாங்கள், யாங்கள்) என்னும் **தன்மைப்** பெயர்களும், நீ, நீர், நீங்கள் என்னும் **முன்னிலைப்** பெயர்களும் வெளியாய்த் தோன்றிநின்று எழுவாயாகிறதுபோல வெளியாய்த்தோன்றாமல் மறைந்து நின்றும் எழுவாயாகும் என்பதை நாம் அறிந்துகொள்ளல் வேண்டும். உதாரணமாக; என்னை நீ ஏன் அடித்தாய்? என்பதில் நீ என்பதுதான் எழுவாய்; என்னை ஏன் அடித்தாய்? என்று சொன்னாலும் நீ என்பதுதான் எழுவாய். அந்த ஒரு பெயரைவிட வேறு ஒரு சொல்

லும் இதற்கு எழுவாயாக வராது. முதல் வாக்கியத்தில் நீ என்னும் எழுவாய் தோன்றிநிற்கிறது, மற்றதில் அது தோன்றாமல் நிற்கிறது. தோன்றாமல் நிற்கும்போது இப் பெயர்களைத் தோன்றா எழுவாய் என்று சொல்லுகிறோம்.

[குறிப்பு:— இனி, பாடத்தைப் படித்தான் என்னும் வாக்கியத்தில் எழுவாய் சொல்லப்படவில்லை. அது வெளியாய்த் தோன்றாதிருப்பதால் இன்ன சொல்தான் எழுவாய் என்று சொல்லமுடியாது. இதில் எழுவாயாக, அவன், இவன், கந்தன், பூதன், சரிபுத்தம்பி, சாமுவேல், என்று ஆண்பாற் பெயர்ச்சொற்கள் எல்லாம் எழுவாயாக வரக்கூடியன என்று காண்கிறோம். யாவன் படித்தான்? என்று விசாரித்துப் பார்த்து இன்னான் என்று அறிந்து கொண்டபின்பே இதற்கு எழுவாய் கூறுதல் முடியும். அதனால் படர்க்கைப் பெயர்கள் தோன்றா எழுவாயாக இருத்தல் முடியாது என்பதை நன்கு அறிதல்வேண்டும்.]

(c) நமக்கு முன்னிலையில் உள்ளவரைத்தான் நாம் ஏதும் ஒரு காரியத்தைச் செய்யும்படி ஏவுகிறோம், அல்லது, வேண்டிக்கொள்ளுகிறோம். ஆசிரியர் ஒரு மாணவனைப் பார்த்து, உன் புத்தகத்தை எடு, எழுந்து நில், பாடத்தைவாசி, என்று ஏவுகிறார். நீ எடு, நீ நில், நீ வாசி என்று முன்னிலையில் உள்ள ஒருவரைத்தான் கட்டளையிடுகிறார், அல்லது, ஏவுகிறார். ஒருவரை ஏவுவது போலப் பலரையும் ஏவலாம். எழுந்து வீட்டுக்குப் போங்கள், என்பதில் நீங்கள் போங்கள் எனப் பலர் ஏவப்படுகின்றனர்.

இரண்டாவது செய்யுளில் வந்த (1) சோறு இடும், (2) தண்ணீரும் வாரும், என்னும் இரண்டுவாக்கியங்களும் இவ்விதமானவை. நீர் சோறு இடும், நீர் தண்ணீரும்

வாரும், என இரண்டு வாக்கியத்திலும் நீர் என்னும் முன்னிலைப் பெயரே இடும், **வாரும்** என்னும் பயனிலை யிரண்டுக்கும் எழுவாயாக நிற்றலை அறிந்துகொள்ளுங்கள்.

9. பின்வரும் வாக்கியங்களுக்கு எழுவாயும், பய னிலையும் (செ. பொ. இருந்தால் அதுவும்) கூறுக:— (1) நேற்று வயலுக்குப் போனேன். (2) எனது நாய் எனக்கு ஒரு துணை. (3) உனது புத்தகம் எது? (4) உனது புத்தகத்தை எடுத்தாயா? (5) எனக்கு இந்தவேளையில் பெரிய உதவி செய்தீர்கள். (6) நீங்கள் செய்த உதவியை எப்போதும் நினைப்பேன். (7) எப்போது எங்கள் வீட் டுக்கு வருவீர்? (8) உங்களை ஒவ்வொருநாளும் வழி பார்ப்போம். (9) எனது ஏவலாளைக் கடைக்கு அனுப் பினேன். (10) இந்த நேரத்தில் ஏன் இங்கு வந்தாய்?

10. பின்வரும் வாக்கியங்களுக்கு எழுவாயும் பய னிலையுங் கூறுக: —

(1) உன் வீட்டுக்குப் போ. (2) உன் பெயர் யாது? (3) எனது பெயர் அப்துல் சலீம். (4) இந்த ஆசனத்தில் இரும். (5) ஏழைக்கு இரங்கு. (6) அவர்களுக்கு இயன்ற உதவியைச் செய். (7) நாள்தோறும் ஆண்டவனை வணங் குங்கள். (8) அறஞ் செய விரும்பு. (9) தாய் தந்தைய ரைக் கனம் பண்ணுங்கள். (10) தயைகூர்ந்து எனக்கு ஒரு சிறிய உதவி செய்யும். (11) உங்கள் புத்தகங்களை எடுங்கள். (12) நான் சொல்வதைக் கேள்.

**IV Translation:-** தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :-

1. This lady lives in Colombo. 2. She keeps a fine motor car. 3. Her driver is an honest man. 4. She came with me in my car. 5. When did you return from Colombo? 6. I returned only yesterday. 7. Look at my new car. 8. It was bought by me in Colombo. 9. Please tell me the price of your new car. 10. I paid Rs. 3000 for it. 11. Please get into the car. 12. We shall go out for a drive.

# Lesson 24 — பாடம் 24.

## பாப்பா பாட்டு I



பாப்பா என்பது சிறு குழந்தையைக் குறிக்குஞ் சொல். சிறு குழந்தைகள் பாடி ஆடி மகிழும்படியாகப் பாடப்பட்டது பாப்பா பாட்டு. சுப்பிரமணிய பாரதியாரைப்பற்றி இரண்டாம் பாடத்தில் படித்தோம். அவருடைய இனிய பாடல் ஒன்றையும் அதில் படித்தோம். அதனைப்போல் இன்னும் எத்தனையோ இனிய பாட்டுக்கள் பாடியிருக்கிறார் என்றும் படித்தோம் அல்லவா? இப்பாடத்தில் வரும் பாப்பாபாட்டும் சுப்பிரமணியபாரதியார் பாடியதே. சிறு குழந்தைகள் இன்பமாகப் பாடி ஆடி நல்ல பழக்க வழக்கம் உள்ள பிள்ளைகளாக வளரவேண்டும் என்பது பாரதியாருடைய ஆசை.

அவர் தான் ஒரு வளர்ந்த பெரிய மனிதன் என்பதை மறந்து, தானும் ஒரு குழந்தையாக இருந்தே இப்பாட்டைப் பாடினார் என்றும் நாம் நினைக்கலாம். அவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது, இப்பாட்டு. பிள்ளைகளது மனத்தில் உற்சாகமும் சந்தோஷமும் பொங்கி எழும்பும், இப்பாட்டைப் பாடி ஆடினால். பெரியவர்களாக வரும்போது என்ன என்ன நல்ல பழக்க வழக்கங்கள் உள்ளவர்களாக இருக்கவேண்டுமோ அவற்றை எல்லாம் நாம் இப்பாட்டு மூலமாகவே அறிந்து பழகுகிறோம். நாம் இப்போது இப்பாட்டைப் படித்து மகிழுவோம்.

1

பாப்பா! இங்கே வா. நீ ஓடி விளையாடு. சோர்ந்து இருக்காதே. உற்சாகமாக இரு. நீ மற்றக் குழந்தைகளோடு அன்பாகக் கூடி விளையாடு. பிறரை இகழ்ந்து பேசாதே. உனக்கு விளையாட்டு, ஒற்றுமை, நற்பழக்கம் மிக அவசியம்.

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

2

பாப்பா! இதோ பார் இந்தச் சிட்டுக் குருவியை. இது தன் இஷ்டப்படி பறந்து திரி

கிறது. இதுபோல நீயும் ஆடிப் பாடி ஆனந்தமாக இரு. வடிவான பறவைகளைப் பார். அவை சந்தோஷமாய் இருப்பதைப்போல நீயும் சிரித்துச் சந்தோஷமாய் இரு.

சின்னஞ் சிறுகுருவி போலே—நீ
திரிந்து பறந்துவா பாப்பா
வன்னப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு பாப்பா.

3

பாப்பா! அதோ பார், தன் அலகினால் கொத்தி இரைதேடித் திரிகிற கோழியை. அதனை விரட்டாமல் அன்பாய் உன்னோடு சேர்த்து விளையாடு. அதோ அந்தக் காக்கையைப் பார்! உன் கையிலிருந்து, அல்லது, நீ வைத்த இடத்திலிருந்து தின்பண்டத்தைக் களவாக அடித்துக் கொண்டு போய்விட்டதென்று அதனைக் கோபித்துக் கல்லால் எறியாதே. அதுவுந் தன் வயிற்றுக்காகப் பாடுபடுகிறதென்று இரக்கங் கொள்ளு.

கொத்தித் திரியும்அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும்அந்தக் காக்காய்—அதற்(கு)
இரக்கப் படவேணும் பாப்பா.

4

பாப்பா! அதோ பார் நம் வீட்டுப் பசுவை, அது நமக்கு வேண்டிய பாலை நிறையத் தரு

கிறது. அது எவ்வளவு நல்ல பிராணி! உன்னைக் கண்டவுடன் வாலை ஆட்டிக் கொண்டு ஓடிவரும் நாயைப் பார். அது எவ்வளவு நன்றி உள்ள பிராணி; அது மனிதருக்குத் துணையாக இருந்து உதவுகிறது.

பாலைப் பொழிந்துதரும் பாப்பா—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

5

பாப்பா! அதோ பார் அந்தக் குதிரையை. அது நம்மை வண்டியில் வைத்து இழுத்துக் கொண்டு ஓடும். வண்டியில் சவாரி செய்வது உனக்குப் பிரியம் அல்லவா? நீ உண்ணும் சோறு எப்படி வருகிறது? வயலில் விளைந்த நெல்லில் இருந்துதானே! அந்த நெல் விளையும்படி வயலை உழுகிற (எருத்து) மாடு எவ்வளவு நல்லது! நம் வயலிலுங் கொல்லையிலும் உள்ள புல்லையுந் தழையையுந் தின்று சீவிக்கிற ஆட்டைப் பார். இந்தப் பிராணிகளிடம் அன்பாய் இருந்து அவற்றைக் காப்பாற்றவேண்டும். எல்லாப் பிராணிகளையும் நேசிக்கவேண்டும்.

வண்டி இழுக்கும்நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும்நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

6

பாப்பா! நீ வெள்ளென நித்திரைவிட்டு எழும்பு. உன் பாடங்களைப் படி. பின்பு இனிமையான பாட்டுக்களைப் பாடு. இது நீ காலையிற் செய்யும் வேலை. மாலை முழுதும் துள்ளிக் குதித்து ஓடி விளையாடு. தெரிகிறதா? இப்படி ஒவ்வொருநாளும் வழக்கமாய்ச் செய்துவர வேண்டும். இடையிடையே தவறக்கூடாது.

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.

7

பாப்பா! நீ ஒரு நாளும் பொய் பேசவே படாது. ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றிக் குற்றமாகப் பேசல் ஆகாது. கெட்ட பேச்சுக்கள் பேசப்படாது. இப்படிச் செய்வது பாபம். ஆண்டவன் நமக்குத் துணையாவர். அவர் நமக்கு ஒரு தீங்கும் வர விடமாட்டார். எப்போதும் மெய்பேசு; ஆண்டவன் துணை செய்வார்.

பொய்சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா
தெய்வம் நமக்குத்துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா.

8

பாப்பா! நீ பயத்தை உதறித் தள்ளிவிடு. உனக்குப் பாதகஞ் செய்பவரைக் கண்டு அஞ்சாதே. தைரியமாய் இரு. பாதகர்களை எதிர்த்து வெல்லு. அவர்கள் முன்னிலையில் அஞ்சி முகத்துதி பேசாதே. அப்போதுதான் நீ வீரக் குழந்தை. வாழ்க்கையில் நீ வெற்றிபெற வேண்டும்.

பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா.

## பயிற்சி

**I விளக்கம் :-**

வைதல், வன்னம், எத்துதல், திருடல், குழைத்தல், அண்டுதல், ஆதரித்தல், கனிவு, புறஞ்சொல்லல், பாதகம், மோதுதல், உமிழ்தல்: என இப்பாடத்தில் வந்துள்ள இச்சொற்களின் பொருளை அறிதல் வேண்டும்.

2. பறவைகள் எவ்விதமாய் வாழ்கின்றன?

3. மூன்றும் பாட்டில் சொல்லிய பறவைகளை எவ்விடங்களிற் காணலாம்?

4. இதிற் சொல்லிய (4-வது செய்யுளில்) மிருகம் ஒவ்வொன்றும் என்ன என்ன செய்யும்?

5. குழந்தை ஒரு நாளிற் செய்து பழகவேண்டிய காரியங்கள் எவை?

6. என்ன என்ன கெட்ட பழக்கங்கள் பழகுதல் கூடாது ?

7. தீங்கு வருமென்று நாம் ஏன் கவலைப்படவேண்டியதில்லை ?

II எழுத்து :-

1. விளக்க வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக :-

2. வைதார், வன்ன, எத்தி, திருடும், ஆதரிக்கிறார்கள், கனிவு: என இங்கு கொடுக்கப்பட்டிருக்குஞ் சொற்களுள் பொருத்தமான ஒன்றைத் தெரிந்து அடியிற் கீறிட்ட இடங்களில் வைத்து நிரப்பி எழுதுக :—

(1) உன்னுடைய பேச்சில்______இல்லை. (2) இது ஒரு______மயில். (3) நல்லவர் ஏழைகளை______. (4) திருடன் அக் குழந்தையை______அதன் காப்பைத் திருடினான். (5) பாடசாலைக்குப் பிந்திப் போனதற்காக உபாத்தியாயர் என்னை______. (6) பிறர் பொருளை ______பழக்கம் ஆகாது.

3. "போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்" என்பதைப்பற்றி உமக்குத் தெரிந்ததை எழுதும். (10 வரி போதும்).

4. சோடி சோடியாய்ப் பின்வரும் சொற்கள் இவ்விரண்டுக்குமுள்ள கருத்து வேறுபாட்டை விளக்க அவற்றை வழங்கி ஒவ்வொரு சோடி வாக்கியம் எழுதுக :- (1) குழைக்கும், குலைக்கும் ; (2) பறந்து, பாந்து ; (3) மனம், மணம் ; (4) காலை, காளை ; (5) கொள்ளு, கொல்லு ; (6) பாலை, பாளை ; (7) வாலை, வாழை

5. உமது வீட்டிலுள்ள நாய், பசு, எருது, குதிரை, கோழி என்னும் இவற்றுள் ஏதும் ஒன்றைப்பற்றி

ஒரு கதையை அல்லது, செய்தியைக் கூறி ஒரு கடிதம் (எவர்க்கேனும்) எழுதுக.

III பாஷை :-

(a) பின்வரும் வாக்கியங்களுக்கு எழுவாயும் பயனிலையும் கூறுக :—

(1) ஓடி விளையாடு. (2) ஒரு குழந்தையையும் வையாதே. (3) மனத்தில் மகிழ்ச்சி கொள்ளு. (4) பாலைப் பொழிந்துதரும் அந்தப் பசு மிக நல்லது. (5) நாய் மனிதர்க்குத் தோழன். (6) தெய்வம் நமக்குத் துணை. (7) வழியில் ஒரு மயிலைக் கண்டேன். (8) காலையில் வெள்ளென எழுந்திரு. (9) ஏன் இப்படி அழுகிறாய்? (10) எல்லாப் பிராணிகளையும் நேசிக்கிறோம்.

(b) உன் பாடத்தைப் படி, என்பதில் படி என்ற சொல் ஒரு வினைச்சொல்லாகவும், வாயிற் படி தடக்கிற்று, என்பதில் ஒரு பெயர்ச்சொல்லாகவும் நிற்கிறது. இது போல, பின்வரும் சொல் ஒவ்வொன்றும் பெயராயும் வினையாயும் வர வைத்து ஒவ்வொரு சோடி வாக்கியம் இயற்றுக :—

ஓடு, ஆடு, கூடு, திரி, கொத்து, குலை, பிழை, கொள்ளு.

(c) அடியில் இரண்டு தொகுதியாக வரும் வாக்கியங்களையும் ஆராய்ந்து பாருங்கள் :

| ஆம் | இல்லை |
|---|---|
| 1. மழை பெய்கிறது. | 1. மழை பெய்யவில்லை. |
| 2. அவள் போனாள். | 2. அவள் போகவில்லை. |
| 3. இன்று தபால் வரும். | 3. இன்று தபால் வராது. |

| ஆம் | இல்லை |
|---|---|
| 4. அவன் ஒரு படித்தவன். | 4. அவன் ஒரு படித்தவன் அல்லன். |
| 5. வீட்டுக்குப் போ. | 5. வீட்டுக்குப் போகாதே. |
| 6. இவ்வேலையைச் செய் யுங்கள். | 6. இவ்வேலையைச் செய்யா யாதீர்கள். (செய்யாதேயுங்கள்) |

மேலே ஆம் என்ற தொகுதியில் உள்ள வாக்கி யங்களில் நாம் ஒரு காரியம், அல்லது, செயல் நடை பெறுவதை ஒத்துக்கொள்ளுகிறோம்; அல்லது, அது உள்ளது என்று உடன்படுகிறோம். மற்ற இல்லை என்ற தொகுதியில் உள்ள வாக்கியங்களில் நமது பேச்சு முந்தினதற்கு எதிர்மாறு ஆக இருக்கிறதைப் பார்க்க லாம். உள்ளது என்று உடன்பட்டுச் சொல்லும் பேச்சு உடன்பாடு என்றும், இல்லை என்று மறுத்துச் சொல் லும் பேச்சு எதிர்மறை என்றுஞ் சொல்லப்படும். உடன்பாடு ஆக இருக்கும் வாக்கியத்தை எதிர்மறை வாக்கியமாக மாற்றலாம். எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கிய மாக்கலாம். அப்படி மாற்றினால் கருத்தும் மாறும் என்றறிக.

(d) பின்வரும் வாக்கியங்களுள் (1) உடன்பாடு களை ஒரு தொகுதியாகவும், (2) எதிர்மறைகளை ஒரு தொகுதியாகவும் வேறாக எழுதுக (அல்லது சொல்லுக):-

1. நேற்று மழை பெய்தது. 2. அவன் நாளை வருவான். 3. நான் நாளை வரேன். 4. அவன் மறு மொழி சொன்னான். 5. தெருவில் விளையாடாதே. 6. வீட்டுக்குப் போகாதீர்கள். 7. பூனை பால் குடிக் கும். 8. புலி புல்லைத் தின்னாது. 9. காற்று வீசு கிறது. 10. பொய் சொல்லல் ஆகாது. 11. நீராவி கண்ணுக்குத் தெரியாது. 12. உண்மையே பேசு.

## Lesson 25 — பாடம் 25.

## பாப்பர். பாட்டு II

9

பாப்பா! நமக்கு எவ்வித கஷ்டம் வந்தாலும் நாம் மனத்தைச் சோரவிடல் ஆகாது. நம்பிக்கை கொண்டு மனமகிழ்ச்சியோடு இரு. ஆண்டவன் ஒருவர் இருக்கிறார். அவர் நம்மிடத்தில் முடிவில்லாத அன்பு உடையவர். அவர் நமக்கு வருந் துன்பங்களை எல்லாம் நீக்கிவிடுவார். கடவுளை நம்பு. கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்.

துன்பம் நெருங்கிவந்த போதும் — நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா
அன்பு மிகுந்ததெய்வம் உண்டு — துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா.

10

பாப்பா! நீ ஒருபோதுஞ் சோம்பலாய் இருக்கக் கூடாது. அதனால் உனக்குக் கெடுதல் உண்டாகும். சுறுசுறுப்பாய் வேலைசெய். உன் தாய் சொன்னபடி செய். மாட்டேன் என்று சொல்லாதே. தாய் எவ்வளவு அன்பாய் இருக்கிறாள். எடுத்ததுக்கெல்லாம் அழுது கண்ணீர் வடிக்கும் பிள்ளை நொண்டிப் பிள்ளை. நீ ஓடியாடி வேலைசெய். உனக்குத் தேவையானதைப்

பயப்படாமற் சொல்லிப் பெற்றுக்கொள். அழு மூஞ்சியாய் இராதே.

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா — தாய்
சொன்னசொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பி அழுங்குழந்தை நொண்டி — நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.

11

பாப்பா! நீ பிறந்த நாடு தமிழ்த் திருநாடு. அது உன் தாய்நாடு. உன்னைப் பெற்ற தாயை வணங்கு. அதுபோல உன் தாய்நாட்டையும் வணங்கு. தாய்நாடு அமுதிலும் பார்க்க இனியது. இது எங்கள் பெரியோர்களது தேசம் என்று பெருமையாக மார்தட்டிச் சொல்லு. தேசபக்தி உனக்கு அவசியம் வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தில் இனியதடி பாப்பா — நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

12

பாப்பா! உன் தாய்ப்பாஷை தமிழ். அது எல்லாப் பாஷைகளிலும் உயர்வானது. மிக இனியது. தமிழ்த்தாயை வணங்கு. தமிழை ஆசையோடு படி. படிக்கப் படிக்க அது இன்பந் தரும். உனது தேசம் பாரததேசம். உன் தேசத்தை நாள்தோறும் போற்றிப் புகழ்ந்து

பேசு. உனது தாய்மொழியையும் தாய்நாட்டை யும் ஒருபோதும் மறவாதே.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே — அதைத்
தொழுது படித்திடடி பாப்பா
செல்வம் நிறைந்த இந்துஸ் தானம் — அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

13

பாப்பா! உன் தாய்நாட்டின் வடக்கு எல்லையாக மிக உயரமான இமயமலை இருக்கிறது. தெற்கு எல்லை கன்னியாகுமரிமுனை. கிழக்கிலும் மேற்கிலும் பெரிய கடல் உண்டு. எவ்வளவு பெரிய தேசம்! பார்த்தாயா!

வடக்கில் இமயமலை பாப்பா — தெற்கில்
வாழுங் குமரிமுனை பாப்பா
கிடக்கும் பெரியகடல் கண்டாய் — இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

14

பாப்பா! உன் தாய்நாட்டில் மிகப் பழைய காலந்தொடங்கி வேதம் சாத்திரங்கள் உண்டு. இந்த நாடு பெரிய பெரிய வீரர் பிறந்த நாடு. நம் தாய்நாட்டுக்கு அழிவே இல்லை. உன் தாய் நாட்டை ஒரு தெய்வமாக மதித்துக் கொண்டாடு. நீ அறிவும் வீரமும் பெறவேண்டும்.

வேத முடையதிந்த நாடு — நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு
சேதமில் லாதஇந்துஸ் தானம் — இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

15

பாப்பா! நீ ஒருநாளும் சாதிவேற்றுமை பாராட்டாதே. சிலரை உயர்ந்த சாதியென்றும், சிலரைத் தாழ்ந்த சாதி என்றும் சொல்லாதே. நியாயம், அறிவு, அன்பு என்னும் இவை யாரிடம் உண்டோ அவர்தான் மேலானவர் என்று அறிந்துகொள்.

சாதிகள் இல்லையடி பாப்பா — குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி — அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

16

பாப்பா! நீ எல்லா உயிர்களிடத்திலும் அன்பாய் இரு. தெய்வம் உண்டு என்று நம்பு. உண்மை வழியிலே நடத்தற்கு அஞ்சாத துணிவுள்ள நெஞ்சம் வேண்டும். அன்பும், அறிவும், வீரமும் சேரப்பெற்று வாழ்வதே அழகான இன்ப வாழ்க்கை. அருமையான பாப்பா! நீ இவைகளைப் பெற்று இனிது வாழ்வாயாக.

உயிர்க ளிடத்தில்அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரம் உடையநெஞ்சு வேணும் — இது
வாழும் முறைமையடி பாப்பா.

## பயிற்சி

I விளக்கம் :-

அமிழ்து என்பது இனிமையில் அதி மிக்க அரிய ஓர் உணவு. இதுபோல இனிய அரிய பொருள் வேறு கிடையாதாம். இது தேவலோகத்தில் தான் உண்டாம். மிக இனிய சுவையுடையது, என்று ஒன்றைச் சொல்ல விரும்பினால், அது தேவாமிர்தம் போல இருக்கிறது என்றாவது, அது அமிர்தத்துக்குச் சரி, என்றாவது நாம் சொல்லுகிறோம். இந்தப் பெயரை அமிழ்து, அமிழ்தம், அமிர்து, அமிர்தம், அமிருதம், அமுது, அமுதம் என்ற எழுவிதமாகவும் வழங்கலாம்.

ஆன்றோர்கள், சேதம் என்னுஞ் சொற்களையும் அறியுங்கள்.

பின்வரும் வினாக்களுக்கு விடை கூறுக :—

1. நமக்கு ஒரு இடைஞ்சல் வந்த காலத்தும் நாம் ஏன் சோர்வடைதல் ஆகாது ?

2. நமது வீட்டில் நாம் எப்படி நடந்துகொள்ளல் வேண்டும் ?

3. மிக மிக இனிய அரிய உணவு எது ? நமக்குக் கிடைக்கக்கூடிய இனிய உணவுப்பொருட்கள் சில கூறுக.

4. உமது தாய்நாடு எது ? அதனை எப்படி மதித்தல் வேண்டும் ?

5. உமது தாய்மொழி யாது? அதை நீர் என்ன செய்தல் வேண்டும்?

6. மேலானவர் என்று யாரைச் சொல்லலாம்?

7. நமது வாழ்க்கையில் அமையவேண்டிய மூன்று குணங்கள் எவை?

## II எழுத்து :-

1. விளக்க வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

2. ஆன்றோர்கள், சேதம், வேதம்: என்னும் இச் சொற்களை வழங்கி வாக்கியம் இயற்றுக.

3. உமக்குத் தெரிந்த ஓர் அழுமூஞ்சிக் குழந் தையைப்பற்றி 10 வரி வரையில் எழுதுக.

4. தமிழ், இமிழ், கு— —, சி— —, உ— —: விடப்பட்டிருக்கும் எழுத்துக்களை வைத்து நிரப்பி எழுதுக:

5. படித்து, அடுத்து, முடித்து, எடுத்து, விடுத்து: என இங்கு கொடுக்கப்பட்டிருக்குஞ் சொற்களுள் பொருத்தமான ஒன்றைத் தெரிந்து அடியில் கீறிட்ட இடத்தில் வைத்து நிரப்பி எழுதுக:—

பாலர் நாம் வெள்ளெனப் படுக்கையை_______
காலையிற் செய்கடன் கடமையாய்_______
புத்தக முதலிய பொருட்களை _______
பத்தியாய் ஆசான் பக்கம்_______
படிக்கும் பாடம்_______
முடித்தபின் வீடு செல்குவம் முறையே.

6. அடியிற் கீறிட்ட இடத்தில் விடப்பட்டிருக் கும் எழுத்துக்களை வைத்து நிரப்பி எழுதுக:

தீரத்திலே படை— —த்திலே, நெஞ்சில்
ஈ— — — — உப— —த்திலே,
சா— — — — மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே உயர் நாடு.

7. ஒரு குழந்தை தான் செய்த குற்றத்தைப் பொய்சொல்லி மறைக்காமல் துணிவாய் உண்மையைச் சொல்லியதாக ஒரு கதை எழுதுக:

8. ஒரு சோம்பேறிப் பையனைப்பற்றி ஒரு வாசகம் எழுதுக (10 வரி போதும்).

9. ஓர் ஏழைக்கு, அல்லது, ஒரு வாயில்லாப் பிராணிக்கு இரங்கி நீர் செய்த ஓர் உதவியை விபரமாய்ச் சொல்லி உமது சகோதரனுக்கு ஒரு கடிதம் எழுதுக:

## III பாஷை :-

(a) உமது வாசினைப் புத்தகத்தில் இன்றைப் பாடத்து வந்துள்ள (1) செயப்படுபொருள் கொண்ட வாக்கியம் இரண்டும், (2) செ. பொ. இல்லாத வாக்கியம் இரண்டும், (3) வினா வாக்கியம் ஒன்றும், (4) எதிர் மறை வாக்கியம் ஒன்றும், (5) செயப்பாட்டுவினை வாக்கியம் ஒன்றும், தெரிந்தெடுத்து எழுதுக (அல்லது சொல்க).

(b) பின்வரும் வாக்கியங்களைப் பாகுபாடு செய்க :-

1. தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே. 2. கிழக்கிலும் மேற்கிலும் பெரிய கடல் கிடக்கும். 3. தமிழ்த் திருநாடு அமிழ்திலும் இனியது. 4. ஒரு சிறிய வீடு கட்டினேன். 5. இனிமேல் ஒரு நாளும்

பொய் சொல்லேன். 6. இந்த ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்வீர்களா? 7. அஞ்சாமல் எப்போதும் உண்மை பேசு. 8. பொய் சொல்லாதவன் பெரிய வீரன். 9. பிராணிகளுக்குத் துன்பம் செய்யாதே. 10. தமிழை எப்போதும் படி.

(c) தமிழ், குழந்தை, தெய்வம்: என்னும் இச் சொல் ஒவ்வொன்றையும் எழுவாயாகவும் செயப்படு பொருளாகவும் வழங்கி ஒவ்வொரு சோடி வாக்கியம் இயற்றுக.

(d) பின் வரும் வாக்கியங்களை எதிர்மறையாக மாற்றி எழுதுக:—

1. நேற்று இங்கே வந்தேன். 2. என் பிள்ளைகளைக் கூப்பிடு. 3. கீரி பாம்புக்குப் பகை. 4. அவர்கள் தங்கள் வீட்டில் வசிக்கிறார்கள். 5. இந்தப் புத்தகத்தைப் படி. 6. நீ என் மகனை ஏன் கூப்பிட்டாய்? 7. அவன் ஒரு பொய்யன்.

(e) பின்வரும் வாக்கியங்களில் வரும் ஆண்பாற் பெயர்களைப் பெண்பாலாகவும், பெண்பாற் பெயர்களை ஆண்பாலாகவும் மாற்றி வாக்கியத்தை ஏற்றபடி திருப்பி எழுதுக:—

1. அரசன் ஒரு பிச்சைக்காரியைக் கண்டான். 2. அவள் அவனைக் கண்டு பயந்து ஓடினாள். 3. படித்தவன் பட்டம் பெறுவான். 4. அவள் ஒரு பெரிய அழகி. 5. தாயும் மகனும் வேலைக்காரனை அடித்தார்கள். 6. கணவனைக் காதலன் என்றுஞ் சொல்லலாம். 7. ஒரு வண்ணான் வீட்டுள் ஒரு திருடன் புகுந்தான். 8. எனது மகன் உமது தம்பியுடைய பள்ளிக்கூடத் தோழனாக இருந்தான்.

**IV Translation:-** தமிழில் மொழிபெயர்த்து எழுதுக :-

1. This man is going to the market. 2. He has a bundle of straw on his head. 3. He wants to sell it at the market. 4. It is a very heavy bundle. 5. How much will he get for his straw? 6. Please tell me the price of your bundle of straw. 7. Sir, this was bought by me for fifty cents. 8. Will you give it to me for that price? 9. No, Sir, I cannot give it for that amount. 10. I also must get something for my trouble. 11. Kandiah, do not come late in future. 12. Adambawa!, write a letter to your father.

# தமிழ்மொழி வாழ்த்து

தான தனத்தன தான் தனத்தன
தானன தானன னே.

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே.

2. வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழிய வே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே.

4. எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே.

5. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே.